பக்கங்கள் - 28
விலை - 30ரூபா

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 34 கதிர் 277 ஆவணி 16 ஆம் நாள் திங்கட்கிழமை 02 செப்ரெம்பர் 2019 வள்ளுவர் ஆண்டு 2050

Smart Up
Diploma in English
Diploma in IT
Certificate in Spoken Sinhala
BLC CAMPUS
0777 174 443
4th Lane, Brown Road, Jaffna.
T - 021 493 5555, 021 493 6666
E - info@blccampus.edu.lk
www.blccampus.edu.lk

# கொலைகாரக்கூட்டத்துக்கு தக்க பதிலடி கொடுங்கள்

### அமைச்சர் சஜித் ஆவேசம்



**கொழும்பு, செப்ரெம்பர் 2**

**நாசகார செயல்களை செய்யும் கொலைகாரக் கூட்டத்துக்குச் சரியான பதிலடியை மக்கள் வழங்க வேண்டும் என்று அமைச்சரும், ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளர் என்று கருதப்படும் சஜித் பிரேமதாச கேட்டுக்கொண்டுள்ளார்.**

23

## கோத்தாவுக்கு இளையோரிடம் பெரும் ஆதரவாம்

### கருத்துக் கணிப்பில் தகவல்

கொழும்பு, செப். 2

அரச தலைவர் தேர்தல் தொடர்பாக இளவயதினரிடையே நடத்திய கருத்துக் கணிப்பில் கோத்தபாய ராஜபக்சவுக்கு அமோக ஆதரவிருப்பதாக கிரீன் பல்கலைக் கழகம் தெரிவித்துள்ளது.

19-24 வயதுடைய 900 இளை

23

## வாக்கெடுப்பில் படுதோல்வி ரணிலின் பதவிக்கு ஆபத்து

கொழும்பு, செப். 2

களனி ரஜமஹா விகாரையின் அறங்காவலர் சபைத் தலைவர் பதவியிலிருந்து தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவை நீக்கும் தீர்மானம் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

பௌத்தர்களின் பிரசித்திபெற்ற தலமான களனி ரஜமஹா விகா

23

## கந்தர்மடத்திலுள்ள அலைபேசி விற்பனை நிலையத்தில் திருட்டு

யாழ்ப்பாணம், செப். 2

பலாலி வீதியில் கந்தர்மடத்தில் அமைந்துள்ள அலைபேசி விற்பனை நிலையத்துக்குள் நேற்று அதிகாலை உள்நுழைந்த திருடன் 6 லட்சம் ரூபா பெறுமதியான அலைபேசி

06

## தேர்தலின் பின்னர் நிறைவேற்று அதிகார ஒழிப்பை பார்க்கலாம்

### இப்படிச் சொல்கிறார் சஜித்

கொழும்பு, செப். 2

நிறைவேற்று அரச தலைவர் முறைமை ஒழிப்புத் தொடர்பில், அரச தலைவர் தேர்தலின் பின்னர் பார்த்துக் கொள்ளலாம். இவ்வாறு அமைச்சரும், ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளராகக் களமிறங்கக் கூடும் என்று எதிர்பார்க்கப்படும் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நிறைவேற்று அதிகார அரச தலை

23

## டிசெம்பர் 7ஆம் திகதி ஓ. எல். பரீட்சை நாள்

### தேர்தல் திணைக்களத்துக்கு பரீட்சைத் திணைக்களம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 2

டிசெம்பர் 7ஆம் திகதி அரச தலைவர் தேர்தலை நடத்துவதற்கான முயற்சிகளில் தேர்தல்கள் ஆணைக்குழு ஈடுபடும் நிலையில், அன்றைய நாள் கல்விப் பொதுத் தராதர சாதாரண

23

## பழிவாங்கலுக்கு உள்ளான பொலிஸாருக்கு இழப்பீடு

கொழும்பு, செப். 2

அரச தலைவர் தேர்தல் காலத்தில் உயரதிகாரிகளின் அரசியல் சார்பான சட்டவிரோத உத்தரவுகளை ஏற்க மறுத்து செயலாற்றிய இரண்டு பொலிஸ் அதிகாரிகளை உயர்நீதிமன்றம் வெகுவாக பாராட்டியது. பழிவாங்கலுக்கு உள்ளானதாக

23

## கோத்தபாயராஜபக்சவின் அணுகுமுறை தவறானது

### சுட்டிக்காட்டுகிறார் தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்

யாழ்ப்பாணம், செப். 2

அரச தலைவர் தேர்தலுக்கான திகதியை சட்ட வரையறையான காலத்துக்குப் பின்பே தீர்மானிக்க முடியும். தற்போது அதனை உறுதிபடத் தெரிவிக்க முடியாது. இவ்வாறானதொரு நிலை

23

## தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதியாகும்

### இப்படிச் சொல்கிறார் கோத்தபாய

கொழும்பு, செப். 2

போரின் இறுதிக் கட்டங்களில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான 'கதைகள்' தவறானவை என்று குறிப்பிட்டுள்ள கோத்தபாய, தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதியாகும் என்று தெரிவித்துள்ளார்.

கொழும்பு கிங்ஸ்பெரி ஹோட்டலில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் சட்டத்தரணிகளின் ஒன்றுகூடலில் உரையாற்றுகையிலேயே

23

### பாறையில் மோதியது படகு

## தமிழக மீனவர்களை மீட்டு வந்தது கடற்படை

யாழ்ப்பாணம், செப். 2

தமிழகம் மண்டபம் பகுதியிலிருந்து நேற்றுமுன்தினம் சனிக்கிழமை புறப்பட்டு நெடுந்தீவுப் பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது பாறையில் படகு மோதியதால் நடுக்கடலில் தத்தளித்த 4 மீனவர்களைக் காப்பாற்றியுள்ளதாகக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர். அவர்களைக் காங்கேசன்துறை கடற்படை முகாமுக்கு கொண்டு சென்றுள்ளனர்.

தமிழகத்திலிருந்து புறப்பட்ட படகு, பழுது

23

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள்
பொதிகள் சேவை
COURIER Services
ஆகாய, கடல்மார்க்கமாக அதிவிரைவான பொதிகள் சேவை
பால்மா, கடலுணவு, இறைச்சி வகைகள், எண்ணெய் வகைகள், மருந்துப் பொருட்கள், பழவகைகள், குறுகிய வாழ்நாள் காலம் உள்ள உணவுப் பொருட்கள் அனைத்தையும்
அதிகுறைந்த கட்டணத்தில் அதிவிரைவான சேவை
Harikanan Express
021 222 2737
20 வருடகால அச்சுத்துறை அனுபவம்
இன்று முதல் புலம்பெயர் உறவுகளுடன் உறவுப் பாலமாக...
கரிகணன்
வடக்கின் அச்சகதாரர்

# மணிவிழா வாழ்த்துக்கள்

## திருமதி மீனலோஜினி உதயகுமாரன்
## (SLTS - I)
## BA (Hons) Dip.in.Ed




**கோட்டக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி**



தமிழ் மாணவரகளின் அறிவுப்பசி போக்கிய எங்கள் ஆசிரியர் திருமதி மீனலோஜினி உதயகுமாரன் அவர்கள் சேவை நிறைவில் ஓய்வு பெறுவதையிட்டு தமிழ் கல்விச் சமூகம் சார்பாக அவருடைய நற்சேவையை நன்றியுடன் பாராட்டுவதில் பெருமகிழ்வடைகின்றேன். மூத்த அனுபவம் வாய்ந்த ஆசிரியராக மத்தியின் மைந்தர்களை வழிநடத்திச் சென்ற அவருடைய ஓய்வு காலம் சிறக்க எல்லாம் வல்ல இறை ஆசியை வேண்டி நிற்கின்றேன்.

**சி. தேவகுமாரன்**
**கோட்டக்கல்விப் பணிப்பாளர்**
**கோட்டக்கல்வி அலுவலகம்,**
**யாழ்ப்பாணம்.**

**கல்லூரி முதல்வரின் வாழ்த்துச் செய்தி**



நானிலத்தில் மாணவர்களை நன் மாணக்கர்களாக உருவாக்கும் புனிதர்களே ஆசிரியர்கள். இப் புனிதமான தொழிலை 34 ஆண்டுகள் சேவையாற்றியது ஒரு மகத்தான விடயமாகும். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் 2017ம் ஆண்டிலிருந்து கலைத்துறையில் புவியியல் பாட ஆசிரியராக இருந்த ஆசிரியை திருமதி மீனலோஜினி உதயகுமாரன் அவர்களை வாழ்த்துவதில் மட்டட்ட மகிழ்வடைகின்றேன்.

மத்திய தாயின் கலைத்துறை மாணவர்களை மகிழ்வுடன் வரவேற்று அம் மாணவர்களின் வளர்ச்சியிலும் உயர்ச்சியிலும் மகிழ்வு அடைந்தவர் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. மென்னையான சுபாவமும் கனிவான பேச்சும் சிறந்த ஆலோசனையாலும். அனைவரது மனங்களிலும் இடம் பிடித்தவர்.

தனது சேவைக்காலத்தில் சிறப்புறப்பணியாற்றி ஓய்வு பெறும் திருமதி மீனலோஜினி உதயகுமாரனது ஓய்வுக் காலம் சிறப்பாக அமைய எல்லாம் வல்ல இறைவனை-வேண்டுகின்றேன்.

**சி.க. எழில்வேந்தன்**
**அதிபர்**
**யா/ யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி,**
**யாழ்ப்பாணம்.**

**சேவை விவரம்**

கொ/ராஜகிரிய அ.த.க பாடசாலை (26.12.1985 - 06.08.1990)
யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி (07.08.1990 - 06.03.1995)
வ/வெளிக்குளம் அ.த.க. பாடசாலை (07.03.1995 - 10.05.1995)
வ/வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம் (11.05.1995 - 30.10.2004)
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை (01.11.2004 - 16.10.2017)
யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி (17.10.2017 - இன்றுவரை)

**ஆசிரியர் வட்டத்தலைவரின் வாழ்த்துச் செய்தி**



மாண்புறு யாழ் மத்தியகல்லூரியில் மகத்தான கல்விச் சேவையினை மதிநுட்பமாக வழங்கியவர்.

இவர் ஓர் அனுபவமும் திறமையும் வாய்ந்த ஆசிரியர். இவரது கல்விச் சேவையினையும் பிறர்நல நற்பணிகளையும் வாழ்த்துதலில் ஆசிரியர் வட்டம் சார்பாக மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

சிரேஸ்ட ஆசிரியர் என்பதற்கு அப்பால் எல்லோருடனும் அன்பாகவும் இனிமையாகவும் பழகுபவர். புவி பற்றிய நிலமைகளை சூட்சுமமாக மாணவர்களுக்கு கற்பிப்பதில் கைதேர்ந்தவராக விளங்கியவர். குறுகிய காலம் எமது கல்லூரியிலே பணியாற்றியிருந்தாலும் மாணவர்கள் . ஆசிரியர்களின் உள்ளங்களில் இடம்பிடித்திருக்கின்றார். அரச கல்விச் சேவைியில் ஓய்வு பெற்றாலும் தமது கல்விப்பணியில் ஈடுபடவும் ஓய்வுக் காலத்தில் சகல சுக பாக்கியங்களையும் பெற்று பல்லாண்டு காலம் சிறப்பாக வாழ இறை ஆசியுடன் வாழ்த்துகின்றேன்.

**ச.திலீபன்**
**தலைவர்**
**ஆசிரியர் வட்டம்,**
**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.**

**ஆசிரியர் வட்டச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி**



நாடுபூராகவும் நன்மாணக்கர்களை உருவாக்கும் நடமாடும் தெய்வங்களே ஆசிரியர்கள். இப் புனிதமான தொழிலை 1985 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பித்து இலங்கையின் பல்வேறு பாடசாலைகளில் பணியாற்றி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் இருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் ஆசிரியை திருமதி மீனலோஜியினி உதயகுமாரன் அவர்களை ஆசிரியர் வட்டம் சார்பில் வாழ்த்துவதில் மட்டற்ற மகிழ்வடைகின்றேன்.

இதுவரை காலமும் மாணவர்களுக்கு சிறந்த ஆசிரியையாக இருந்து கற்பித்து அவர்களின் பெறுபேற்றை உயர்த்தி அவர்களின் வளர்ச்சியிலும் விருத்தியிலும் வித்திட்டவர் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. பல வெற்றியாளர்களை உருவாக்கி தமிழ் சமூகத்திற்கு அளித்தவர். சிறியவர் முதல் பெரியவர் வரை எல்லோருடனும் அன்பாகவும். பண்பாகவும். மென்மையான பேச்சாலும் ஆலோசனையாலும் அனைவரது உள்ளங்களில் இடம்பிடித்தவர் இவர்.

" சேவையின் முடிவு ஓய்வு " என்பது உலக நியதி. அந்த வகையில் தனது சேவைக்காலத்தில் சிறப்புறப் பணியாற்றி ஓய்வு பெறும் இவரது ஓய்வுக் காலம் மிகவும் சிறப்பாக அமைய இறைவனை வேண்டுகின்றோம்.

**ம.ஜெறோம்**
**செயலாளர்**
**ஆசிரியர் வட்டம்,**
**யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி.**

**வாழ்த்துவோர் : ஆசிரியர் வட்டம் - யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.**

(CS 27751)(14.17)

# ஓராண்டு நினைவு மலர்களும் கண்ணீர்ப் பூக்களும்



தாயின் மடியில்
12 . 10 . 1960

மண்ணின் பிடியில்
12 . 09 . 2018



தாயின் மடியில்
15 . 10 . 1936

மண்ணின் பிடியில்
26 . 02 . 2011

திதி : சதுர்த்தி
02.09.2019
திங்கட்கிழமை

## திருமதி சித்திரகலா சண்முகநாதன்

## திருமதி மகேஸ்வரி சுப்பிரமணியம்



**தோன்றிற் புகழோடு தோன்றுக அஃதிலார்**
**தோன்றலின் தோன்றாமை நன்று**

அன்பு, பண்பு நிறைந்த எங்களது அன்புத் தெய்வமே
இன்ப வாழ்வில் இதயம் மகிழ்ந்திட இனிக்கும்
நினைவுகளுடனே வசந்தம் வீசும் வாழ்வுப் பாதையில்
சுகந்தம் உறவுகள் சூழ்ந்து கண்முன் நீங்கள்
வாழ்ந்த காலங்கள் கனவாகிப் போனதுவோ மகளே
அன்புடன் அறிவுரைகள் பல கூறிவழி காட்டியாக
இருந்து அன்பிற்கு இலக்கணமாய் அவனியிலே



வாழ்ந்து பண்புடமை காத்து பக்குவமாய் வழிநடந்தீர்கள்
இரக்கத்தின் இருப்பிடமாய் இருந்திட்ட உங்களை
ஆண்டவன் அழைத்தானோ மகளே உங்கள் மறைவில்
மனம் நொந்து உற்றார், சுற்றத்தார் உறவினர்கள்
சகலரும் கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்
சாந்தி பெற நல்லூர்க் கந்தனை பிரார்த்திக்கின்றோம்.
சாந்தி ! சாந்தி ! சாந்தி !

**அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை 02.09.2019 திங்கட்கிழமை கனடாவிலும் திருநெல்வேலி (இலங்கை) யிலும் சிறுவர் இல்லத்தில் நடைபெறும்.**

**பொ.சுப்பிரமணியம்**
**4, செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம்.**

(CS 27751)(14.17)

**குடும்பத்தினர்.**




# 25 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 24 . 02 . 1929

உதிர்வு 02 . 09 . 1994

## அமரர் R.இராஜரட்ணம் இராஜலிங்கம்

(முன்னாள் சர்வதேச ரோட்டறிக்கழக மாவட்ட ஆளுநர் PDG Lingo 1986 - 1987 District322 - இலங்கையும் தென்னிந்தியாவின் சில பகுதிகளும்)

முன்னாள் தலைவர் - ரோட்டறியின் போலியோ + திட்டம்
தலைவர் + நிர்வாக இயக்குனர் - New Lanka Rolling Mills (Pvt)Ltd. Jaffna.
நிர்வாக இயக்குனர் - Elanadu Ltd, Jaffna.
நிர்வாக இயக்குனர் - Rsoms Aluminium Industries - Wattla
நிர்வாக பங்குதாரர் - New Lanka Aluminium Industries - Jaffna.
இயக்குநர் - Private Hospital Pvt Ltd - Jaffna.
இயக்குநர் - Knitwear Pvt Ltd, Koppai - Jaffna.
உரிமையாளர் - Rajsons Trading Company - Jaffna.

" பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடையிற் செய்யும்
பெருந்தொண்டே தனது வாழ்க்கை யென்னும்
மறுப்பற்ற உண்மையினை நம்மவர்க்கெல்லாம்
மறுவறவே உணர்த்திய பெரியோனே ! "

உங்கள் நினைவில் வாழும் : அன்பு மனைவி - சத்தியபாமா
ஜனர்த்தனன், Dr.யதுனந்தனன்,
கிறுஷ்ணபிரியா, ரகுநந்தனன்.

(CS 27678) (14.17)

Email : rajragunanthanan@gmail.com
T.P: 071 716 3577 (இ.ரகுநந்தனன்)

---


## தேவை

கட்டடப்பொருள்கள் விற்பனை நிலையத்திற்கு அனுபவம் உடைய

- களஞ்சியக்காப்பாளர்
- விற்பனையாளர் தேவை

சிற்றி ஹாட்வெயர் அன் ஸ்ரோர்ஸ்
இல.55,57 ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்



## பணியாளர்கள் தேவை

நெல்லியடியில் உள்ள பலசரக்கு மொத்த விற்பனை நிலையத்திற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.

01. சிட்டை எழுதுநர்
02. விற்பனையாளர்

(வடமராட்சியில் வசிக்கும் ஆண்கள் மட்டும்)

தொடர்பு: 077 742 2604


---

# மரண அறிவித்தல்

## திருமதி சுந்தரமூர்த்தி நேசமலர்



கோட்டைக்காடு, அராலி மத்தி, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுந்தரமூர்த்தி நேசமலர் 01.09.2019 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் செல்வநாயகி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற குமரேசு சுந்தரமூர்த்தியின் அன்பு மனைவியும் அஞ்சலிதேவி, சித்திரா தேவி, கலாதேவி ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற சிவானந்த சோதிராசா மற்றும் நவரட்ணம் ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற வீரசிங்கம் மற்றும் தங்கரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவகாமிப்பிள்ளை (கனடா), ஆகியோரின் மைத்துனியும் நந்தகோபன் (Qutar), ஜெயக்குமார் - தாரணி, கஸ்தூரி, செந்தில்குமரன், அபிராமி, ஐங்கரன், தேவமலர் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஹிருஷிகனின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (02.09.2019) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அராலிமத்தி, வட்டுக்கோட்டை, வண்ணப்புலம் வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பூநாவடை இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வண்ணப்புலம் ஒழுங்கை,
அராலி மத்தி, வட்டுக்கோட்டை. (J 10589)(14.17)

தகவல் : குடும்பத்தினர்.

077 750 7241, 077501 0821

---

# மரண அறிவித்தல்

## கோவிந்தசாமி செல்வராசா

**(ஓய்வுநிலை பிரதிக்கல்விப்பணிப்பாளர், கிளிநொச்சி வலயம்)**



| | | |
|---|---|---|
| ஓய்வுநிலை ஆசிரியர் | : | கிளி/இராமநாதபுரம் மகாவித்தியாலயம் |
| ஓய்வுநிலை அதிபர் | : | கிளி/கல்வெட்டித்திடல் நாகேஸ்வரா வித்தியாலயம் |
| | | கிளி/தர்மபுரம் மத்திய கல்லூரி |
| | | கிளி/கண்டாவளை மகாவித்தியாலயம் |
| | | கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரி |


யாழ். நெடுந்தீவைப்பிறப்பிடமாகவும் 7 ஆம் யூனிற் இராமநாதபுரம் கிளிநொச்சியை நிரந்தர வசிப்பிடமாகவும், இல 441, ஆனந்தபுரம் கிழக்கு, கிளிநொச்சியில் வசித்து வந்தவருமாகிய கோவிந்தசாமி செல்வராசா (ஓய்வுநிலை பிரதிக்கல்விப்பணிப்பாளர், கிளிநொச்சி வலயம்) கடந்த (30.08.2019) வெள்ளிக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கோவிந்தசாமி பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற தியாகராசா தங்கம்மா (ஓய்வுநிலை அதிபர்கள்) தம்பதியினரின் அன்பு மருமகனும்கலையரசியின்(ஆசிரியர், கிளி/மத்திய ஆரம்பவித்தியாலயம்)பாசமிகுகணவரும் தர்ஷிகா (அபிவிருத்தி உத்தியோகத்தர், வலிவடக்கு தெல்லிப்பளை பிரதேச செயலகம்), கிருஷிகன்(பல்வைத்தியர், கராப்பிட்டியபோதனாவைத்தியசாலை), தஜிவன்(பொறியியலாளர், சிங்கப்பூர்), ஹோபிகா(ருகுணைபல்கலைக்கழகம்) ஆகியோரின்பாசமிகுதந்தையும், கபிலன் (சிரேஸ்ட விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம்), கௌசிகா (பல் வைத்தியர்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கோபாலராசா (கோபால் போட்டோ, இராமநாதபுரம்). செல்வராணி, ஜெயராணி, இந்திராணி (ஆசிரியர், கிளி/இராமநாதபுரம் மகாவித்தியாலயம்), வதனராணி (இத்தாலி), வசந்தராணி (பிரான்ஸ்) மற்றும் தர்மராசா (பொறியியலாளர், கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் லக்ஸ்சாந்தி (அதிபர், கிளி/மாயவனூர் வித்தியாலயம்), காலஞ்சென்ற கோபாலப்பிள்ளை தர்மசூரியர் (சமாதான நீதவான்), புண்ணியமூர்த்தி, (அதிபர், கிளி/முரசுமோட்டை முருகானந்தாக்கல்லூரி) தேவபாலன் (பிரான்ஸ்), குணசேகரம் (இத்தாலி), பத்மகாந்தன் (சுவிஸ்) காலஞ்சென்ற கலைச்செல்வி, கலைவதனி (கனடா), பிரேமகாந்தன் (அதிபர், கிளி/முரசுமோட்டை அ.த.க. பாடசாலை) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் பிரமாத்மிகாவின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.09.2019) திங்கட்கிழமை காலை அவரது இல்லத்தில் இடம்பெற்று அன்னாரின் பூதவுடல் காலை 11 மணிக்கு கிளிநொச்சி வலயக்கல்வித்திணைக்களத்திலும் மதியம் 12.30 மணிக்கு கிளி/இராமநாதபுரம் மகாவித்தியாலயத்திலும் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு தகனக்கிரியைக்காக இராமநாதபுரம் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்கள்



# நாகமுத்து இராசரத்தினம்

லோட்டஸ் வீதி, ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் இணுவில் தெற்கு, பாலாவோடையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து இராசரத்தினம் 31.08.2019 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து - பொன்னு தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம் - பொன்னம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான நாகரத்தினம், குணரத்தினம், நவரத்தினம், செல்வரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், றஞ்சனேஸ்வரி (சுவிஸ்), றமணி (சுவிஸ்), றதினி (கனடா), றஜீதரன் (கரன் பான்சி -சுன்னாகம்), துளசிதாஸ் (ஐங்கரன் பான்சி - சுன்னாகம்), ரவீதரன் (சிறி - லண்டன்), றமேஜினி (கனடா), றஜிந்தினி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், யோகேஸ்வரன் (சுவிஸ்), நகுலேஸ்வரன் (சுவிஸ்), மகேஸ்வரன் (கனடா), ஜெகதாம்பிகை, ஜெனித்தா, லக்ஷிக்கா (லண்டன்), குகராஜன் (கனடா), சிவகரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், ரதீனா - பகீரதன், ரதீபன், நவர்ணா, நதீர்னா, நதீர்னன், விதுனா, வீபூஷன்,அஸ்மிதன், திசாந், லோகவர்ஷன், அக்சணா, வேணன், தீரன், சகீரன், சகீனா ஆகியோரின் பாசமிகு பேரனும், அனுஸ், அக்ஷரா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**இணுவில் மானிப்பாய் வீதி,**
**இணுவில் தெற்கு, பாலாவோடை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 467 7936, 077 592 5385**

## 39 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



**நவரட்ணம் தம்பிப்பிள்ளை** — **திருமதி நவரட்ணம் சோதிமலர்**

**உதிர்வு : 17.05.1980**

*ஆண்டுகள் 39 நகர்ந்து மறைந்திடினும்*
*ஆறுமோ வெந்துயர் அன்பு பெற்றோர்களே !*
*மாண்டுவிடவில்லை நீங்கள் எம்மனங்களில்*
*மறையாது என்றும் வாழ்கின்றீர்கள் ! – எம்*
*உயர்வுக்கு உன்னத வழிகாட்டி வாழ்வை*
*அர்ப்பணித்து பாசத்தின் தீபமே !*
*உங்கள் நினைவு எங்கள்*
*நெஞ்சங்களில் என்றும் நிலைத்து வாழும்.*

**Mahaletchumy Kopp**
**Q45**
**D - 68161 Mannheim**
**Germany.**

நவரஞ்சிதமலர் குடும்பம்
இந்திராணி குடும்பம்
மகாலக்ஷ்மி குடும்பம்
நவராசன் குடும்பம்
நவரத்தினராஜா குடும்பம் மற்றும்
இலங்கையில் இருக்கும் உற்றார், உறவினர்,
வெளிநாட்டில் இருக்கும் உற்றார், உறவினர்கள்.

(CS 27753)(14,17)

---

**தோற்றம்** 14 . 05 . 1933



**மறைவு** 28 . 08 . 2019

# செல்லப்பா சண்முகலிங்கம்

**(இளைப்பாறிய லிகிதர் -பரமேஸ்வராக் கல்லூரி, முத்துத்தம்பி வித்தியாலயம், செங்குந்த இந்துக்கல்லூரி)**

யாழ்.நல்லூரைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் Drancy ஐ தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா சண்முகலிங்கம் கடந்த 28.08.2019 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - செல்லம்மா தம்பதிகளின் இரண்டாவது மகனும், காலஞ்சென்றவர்களான துரை - செல்லம்மா தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற நல்லைநாயகியின் அன்புக் கணவரும், கண்ணனின்பாசமிகுதந்தையும், தர்சினியின்மாமனாரும், மீரன், மிதுனன், மயூரா ஆகியோரின் பாசமிகு அப்பப்பாவும், காலஞ்சென்றவர்களான சொக்கலிங்கம்,நாகேஸ்வரி,சுந்தரலிங்கம் ஆகியோரின் அன்புச்சகோதரரும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் இன்று (02.09.2019) திங்கட்கிழமை பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: வேலாயுதபிள்ளை குடும்பம்,**
**இரத்தினசிங்கம் குடும்பம்.**

(J/10568)(11,17)

**கண்ணன் - 33638588007**

## மரண அறிவித்தல்



# விசுவலிங்கம் கனகசபாபதி

தாவடியைப் பிறப்பிடமாகவும், கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட விசுவலிங்கம் கனகசபாபதி (ஓய்வுபெற்ற ஆசிரியர், தரவளை இந்து தமிழ்க் கலவன் பாடசாலை, டிக்கோயா, ஹைலண்ட்ஸ் கல்லூரி, ஹற்றன், தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை) 01.09.2019 அன்று காலமானார்.

அன்னார் திருமதி தவமணி (ஓய்வுபெற்ற ஆசிரியை, இணுவில் மத்திய கல்லூரி) அவர்களின் அன்புக் கணவரும், விசுவலிங்கம், திருப்பதி ஆகியோரின் அன்பு மகனும், விசுவலிங்கம், இராசமணி ஆகியோரின் அன்பு மருமகனும், இரகுபதி, காலஞ்சென்ற சத்தியசோதி (பாபு),பிரபாகர் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவனேஸ்வரி, ஊர்மிளா ஆகியோரின் அன்பு மாமனாரும், குமரன், மஞ்சுளா, இலக்கியா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற பாக்கியம், விசாலாட்சி, மற்றும் நாகம்மா, செல்லம்மா, கனகம்மா, சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், தெய்வேந்திரம், பூபாலசிங்கம், சுப்பிரமணியம், காசிப்பிள்ளை, இராசரத்தினம், புனிதவதி, தனலக்சுமி,தருமகுலசிங்கம் ஆகியோரின் அன்புமைத்துனரும்,சுப்ரமணியம்,அமரர் குமாரசுவாமி, அன்னலட்சுமி ஆகியோரின் அன்புச் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் திங்கட்கிழமை 02.09.2019 அன்றுகாலை 11 மணியளவில் நடைபெற்று,பூதவுடல் தாவடி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கோண்டாவில் மேற்கு,**
**கோண்டாவில்**

**தகவல் :**
**தவமணி(மனைவி) - 021 221 4691**
**இரகுபதி(மகன்)- +44 7894 910482**
**பிரபாகர்(மகன்) - +61 416 141 792**



"ஓம் விராட் விஸ்வப்பரப்பிரம்மனே நமஹ"

## விஸ்வகர்மா சிற்பக்கூடம்

(பரம்பரை பஞ்சகம்மாளர்)

- மூலஸ்தான காற்புறவாய் அளவின்படி தாளமானங்களுக்கு ஏற்றபடி மூர்த்திதியானம், ஸ்ரீதத்துவநிதி, காஸியப்ப சிற்பசாஸ்த்திர நூல்களுக்கு அமைய செய்து தரப்படும்.
- மூலஸ்தான விமான அளவுக்கு ஏற்ற கலஸங்கள், துவாஜஸ்தம்பம், சோடஉபசாரங்கள், பிரதான குடங்கள், செம்புகள், பட்டுக்குடைகள் யாகசாலை அலங்காரப் பொருள்கள் செய்துதரப்படும்.
- மேலும் ஆலயங்களுக்கு வந்து காற்புரவாய், தேவாங்குல அளவுகளின்படி மூர்த்திகள், கண்டாமணிகள், வெள்ளி தங்க அங்கிகள் செய்துதரப்படும்.
- உற்ஸவமூர்த்திகள் பின்னப்பட்டு இருந்தால் முறையாக செய்து தரப்படும்.
பிரதிஷ்டா யந்திரங்கள் சமஸ்கிருத மொழியில் வரைந்து தரப்படும்.

குறிப்பு: அளவுப்பிரமாணம், மூர்த்திதியானம் இல்லாமல் விக்கிரகங்கள் செய்து வழிபடவேண்டாம்.
ஆதாரம்: ஆலய நிர்மாண ஆயாதி சிற்ப ரகஸியம்.

விஸ்வஸ்ரீ தியாகராஜா ஆச்சாரி ரவிசங்கர் ஆச்சாரி
97/2, சென் ஜேம்ஸ் வீதி, முகத்துவாரம், கொழும்பு - 15.
w/app: 077 9006 584 E-mail: vkscentre@gmail.com

## LOLC FINANCE PLC

LOLC FINANCE

## Gigantic Motor Vehicle Auction Sale

**On Wednesday 04th September 2019**



TO BE HELD AT
**NO. 363, MANNAR ROAD, VEPPANKULAM, VAVUNIYA.**
Commencing 10.00 a.m Onwards

**CAB**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| TATA 207DI | 2956CC | 2010 | NC | PP | XXXX |

**FOUR WHEEL TRACTOR**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| HOLLAND 4710 | 2700CC | 2016 | NC | RE | XXXX |
| HOLLAND 4710 | 2700CC | 2016 | NW | RE | XXXX |
| JOHN DEERE 3036E MFWD | 1642CC | 2017 | NC | RF | XXXX |
| JOHN DEERE 3036E | 1642CC | 2017 | NC | RF | XXXX |
| JOHN DEERE 5047D | 2900CC | 2012 | NC | RD | XXXX |
| KUBOTA L4508 | 2197CC | 2016 | NC | RE | XXXX |
| MAHINDRA 575DI | 2523CC | 2008 | NC | RB | XXXX |
| SONALIKA DI 50 RX | 2893CC | 2017 | NC | RF | XXXX |
| TAFE 45DI | 2500CC | 2012 | NC | RD | XXXX |
| TAFE 45DI | 2500CC | 2015 | NC | RD | XXXX |
| TAFE 45DI | 2500CC | 2015 | NW | RE | XXXX |
| TAFE 45DI | 2500CC | 2016 | NC | RE | XXXX |
| YANMAR F20D | 1394CC | 2008 | NC | RE | XXXX |

**HARVESTER**

VIMCO VN 70G HAVESTER (B/N)
KUBOTA DC70G

**MOTOR BIKE**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| BAJAJ CT 100 | 100CC | 2017 | NC | BFX | XXXX |
| BAJAJ CT 100 | 100CC | 2018 | NP | BHC | XXXX |
| BAJAJ CT100 | 100CC | 2017 | NP | BFV | XXXX |
| BAJAJ DISCOVER | 102CC | 2014 | NW | BBF | XXXX |
| BAJAJ DISCOVER | 124CC | 2013 | NP | BAM | XXXX |
| BAJAJ PLATINA | 102CC | 2016 | NC | BDZ | XXXX |
| BAJAJ PLATINA | 102CC | 2016 | NC | BFD | XXXX |
| BAJAJ PULAR | 135CC | 2013 | SP | BAL | XXXX |
| BAJAJ PULSAR | 135CC | 2012 | SG | XZ | XXXX |
| BAJAJ PULSAR | 135CC | 2013 | WP | BAJ | XXXX |
| BAJAJ PULSAR | 135CC | 2013 | SP | BAQ | XXXX |
| BAJAJ PULSAR | 150CC | 2014 | NP | BBK | XXXX |
| BAJAJ PULSAR | 150CC | 2014 | NW | BBA | XXXX |
| BAJAJ PULSAR | 150CC | 2016 | NP | BDL | XXXX |
| BAJAJ PULSAR | 150CC | 2017 | NP | BFK | XXXX |
| BAJAJ PULSAR | 178CC | 2017 | NC | BFF | XXXX |
| BAJAJ PULSAR | 200CC | 2017 | NP | BFC | XXXX |
| BAJAJ PULSER | 150CC | 2016 | NP | BEG | XXXX |
| HERO DASH VX | 98CC | 2015 | NP | BFA | XXXX |
| HERO DAWN | 98CC | 2015 | NP | BDX | XXXX |
| HERO DAWN | 98CC | 2015 | NP | BDE | XXXX |
| HERO GLAMOUR DISC SELF | 124CC | 2016 | NP | BES | XXXX |
| HERO GLAMOUR | 125CC | 2013 | NP | BDB | XXXX |
| HERO HF DELUXE | 100CC | 2017 | NP | BFP | XXXX |
| HERO HF DELUXE | 100CC | 2018 | NP | BGT | XXXX |
| HERO HUNK DOUBLE DISC | 150CC | 2017 | NP | BFU | XXXX |
| HERO HUNK | 150CC | 2015 | NP | BCU | XXXX |
| HERO HUNK | 150CC | 2017 | NP | BFR | XXXX |
| HERO HUNK | 150CC | 2017 | NP | BFE | XXXX |
| HERO KARIZMA | 223CC | 2015 | SP | BFH | XXXX |
| HERO MAESTRO | 110CC | 2018 | NC | BGF | XXXX |
| HERO PASSION PRO | 98CC | 2015 | NP | BCY | XXXX |
| HERO PLEASURE | 100CC | 2014 | NC | BCD | XXXX |
| HERO PLEASURE | 100CC | 2014 | NP | BBE | XXXX |
| HERO PLEASURE | 100CC | 2015 | NP | BCJ | XXXX |
| HERO PLEASURE | 100CC | 2016 | NP | BDX | XXXX |
| HERO SPLENDOR | 98CC | 2014 | NC | BCJ | XXXX |
| HERO XTREME SPORTS | 150CC | 2015 | WP | BDO | XXXX |
| HONDA TWISTER | 109CC | 2016 | NW | BDV | XXXX |

**MOTOR BIKE**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| HONDA DIO | 109CC | 2015 | NC | BCK | XXXX |
| HONDA DIO | 109CC | 2015 | NP | BCA | XXXX |
| HONDA DIO | 109CC | 2017 | NW | BGG | XXXX |
| HONDA DIO | 110CC | 2016 | NP | BEX | XXXX |
| HONDA TWISTER | 110CC | 2017 | NP | BGB | XXXX |
| SUZUKI GS150R | 150CC | 2015 | NP | BDT | XXXX |
| SUZUKI LET S | 110CC | 2016 | NC | BEK | XXXX |
| TVS APACHE | 150CC | 2018 | NP | BGI | XXXX |
| TVS APACHE | 150CC | 2018 | NC | BGK | XXXX |
| TVS APACHE | 160CC | 2017 | EP | BFV | XXXX |
| TVS APACHE | 180CC | 2014 | NP | BBV | XXXX |
| TVS APACHE | 180CC | 2016 | NP | BEZ | XXXX |
| TVS APACHE | 200CC | 2017 | NP | BFF | XXXX |
| TVS METRO | 100CC | 2014 | WP | BAY | XXXX |
| TVS METRO | 100CC | 2015 | NP | BCG | XXXX |
| TVS STRYKER | 124CC | 2018 | NP | BGG | XXXX |
| TVS WEGO | 110CC | 2017 | NP | BFU | XXXX |
| TVS XL 100 | 100CC | 2018 | NP | BGH | XXXX |
| YAMAHA FZ-S | 150CC | 2017 | NP | BFB | XXXX |
| YAMAHA FZ-S | 153CC | 2015 | NP | BCO | XXXX |
| YAMAHA SALUTO | 125CC | 2015 | NW | BDN | XXXX |
| YAMAHA SALUTO | 125CC | 2017 | SP | BFV | XXXX |
| YAMAHA RAY-Z | 113CC | 2015 | NP | BCT | XXXX |

**CAR**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| CHERRY YOYO | 1100CC | 2014 | NP | CAG | XXXX |
| MITSUBISHI LANCER | 1468CC | 2002 | NC | HA | XXXX |
| TOYOTA COROLLA | 1830CC | 1990 | | 64 | XXXX |
| ISUZU GEMINI | 1480CC | 1987 | | 32 | XXXX |

**LORRY**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| TATA 713S | 5635CC | 2007 | NW | LE | XXXX |

**THREE WHEELER**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| BAJAJ | 145CC | 2001 | NC | GL | XXXX |
| BAJAJ | 145CC | 2006 | NC | QI | XXXX |
| BAJAJ | 150CC | 2003 | NP | HV | XXXX |
| BAJAJ | 150CC | 2004 | NP | JM | XXXX |
| BAJAJ | 173CC | 2009 | NP | QW | XXXX |
| BAJAJ | 173CC | 2009 | NC | QT | XXXX |
| BAJAJ | 173CC | 2010 | NC | YB | XXXX |
| BAJAJ | 174CC | 2007 | CP | QJ | XXXX |
| BAJAJ | 198CC | 2011 | NC | YU | XXXX |
| BAJAJ | 198CC | 2011 | UP | YO | XXXX |
| BAJAJ | 198CC | 2011 | NC | YL | XXXX |
| BAJAJ | 198CC | 2012 | NC | AAA | XXXX |
| BAJAJ | 198CC | 2013 | NP | AAO | XXXX |
| BAJAJ | 198CC | 2015 | NC | ABD | XXXX |
| BAJAJ | 198CC | 2015 | NC | AAY | XXXX |
| BAJAJ | 200CC | 2011 | NC | YO | XXXX |
| BAJAJ | 200CC | 2012 | NP | YZ | XXXX |
| TVS KING | 200CC | 2011 | NE | YX | XXXX |

**TRUCK**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| FOTON BJI010V0JA3-2 | 1809CC | 2012 | NP | PX | XXXX |
| MAHINDRA GENIO DC VX | 2489CC | 2014 | NP | PF | XXXX |
| MAHINDRA MAXXIMO PLUS-VX | 909CC | 2015 | NP | DAB | XXXX |
| MAHINDRA MAXXIMO | 909CC | 2011 | NC | PR | XXXX |
| MAHINDRA SCORPIO | 2498CC | 2007 | CP | LD | XXXX |
| TATA ACE | 702CC | 2009 | NC | LG | XXXX |

**VAN**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| TOYOTA HIACE | 2440CC | 1991 | | 57 | XXXX |
| TOYOTA TOWN ACE | 1830CC | 1988 | | 53 | XXXX |

**On View – 02nd & 03rd September 2019**
Between 9.00 a.m – 5.00 p.m


**Conditions of Sale**
- ✓Entrance: By a non refundable Ticket of Rs. 500.00 per person & a refundable deposit of Rs. 5,000.00 per person on the day of Auction.
- ✓Payment: **Non – refundable** initial deposit of 25% in Cash at the fall of the Hammer & Balance 75% & Removal latest by 3:00 pm on Wednesday 11th September 2019 to be paid to LOLC Finance PLC No.27, 2nd Cross Street, Vavuniya.
- ✓The Management has the right to withdraw any vehicle (s) from the Auction without prior notice.
- ✓The decision of the Auctioneer will be final.

**SCHOKMAN & SAMERAWICKREME**
*One Country. One Auctioneer. Celebrating 127 Years of Service Excellence.*

Head Office & Showroom
24, Torrington Road, Kandy.
Tel: 081 2227593,
Fax: 081 2224371
Email: schokmankandy@sltnet.lk

City Office & Showroom:
6A, Fairfield Gardens, Colombo 08.
Tel: 011 2502680, 2585408,
Tel / Fax: 011 2588176
Email: schokman@samera1892.com

web:www.sandslanka.com



# வெட்டுக்கிளி

வெட்டுக்கிளி கணுக்காலி தொகுதியைச் சேர்ந்த ஒரு பூச்சியினம். வெட்டுக்கிளிகள் வெளித் தோற்றத்தில் தத்துக்கிளிகள் போலிருக்கும்.

இதனை தத்துக்கிளி களிலிருந்து வேறுபிரிப்பதற்காக இது குறுமுனை வெட்டுக்கிளி எனப்படும்.

வெட்டிக்கிளிகள் பல்வேறு நிறங்களில் உள்ளன.

வேளாண்மை செய்யப்படும் பயிர்ச் செடிகளுக்குக் சேதம் விளைவிப்பதால் இது உழவர்களின் எதிரி என்று அறியப்படுகிறது. வெட்டுக்கிளிக்குக் கணுக்களாகப் பிரிவுபட்ட மூன்று இணைக் கால்கள் இருக்கின்றன. இவற்றில் பின் இணைக் கால்கள் பிற கால்களை விட நன்கு வளர்ச்சியுடையதாக இருக்கின்றன. இந்தக் கால்கள் நீண்ட, வலிய கால்கள். இவற்றின் உதவியுடன் தரையிலிருந்து எம்பிக் குதித்து நெடுந்தூரம் தாவிக் குதிக்கிறது. வெட்டுக்கிளியின் குறுகிய, விரைப்பானசிறகுமூடிகளுக்குள்விசிறிவடிவாகமடிக்கப்பட்ட அகன்ற சிறகுகள் இருக்கின்றன. முதிர்ச்சியடைந்த பூச்சிகள் நன்றாகப் பறக்கின்றன.

உலகின் சில நாடுகளில் வெட்டுக்கிளிகள் புரதச்சத்து நிறைந்திருப்பதால் உணவாக உட்கொள்ளப்படுகின்றன. எடுத்துக்காட்டாக மெக்சிகோவில் இவை உண்ணப்படுகின்றன.

**ராசி அதிர்ஷ்டம்**

திகதி: 01.09.2019 | வெற்றி வாரம்: 2604 | வர்ணம்: ஊதா

தனுசு
வெற்றி இலக்கங்கள்: 26 27 28 38
திங்கட் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,116,144/=

02.09.2019ம் திகதி திங்கட் கிழமை மஞ்சள் நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

**அத கோடிபதி** ADA KOTIPATHI

சீட்டிழுப்பு இல: 718
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2019.09.01
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 85,477,095/-

வெற்றி இலக்கங்கள்: 01 03 17 60 B
விசேட வெற்றி இல. 6829

அபிவிருத்தி லொத்தர் சபை
தொலைபேசி: 0112 333 546-47 ... 0114 825 825

**கோடிபதி கப்ருக**

B 32 44 54 57
2 2 0 6 0

சீட்டிழுப்பு வாரம்: 488
திகதி: 2019 ஆகஸ்ட் 30
வர்ணம்: பச்சை
வெள்ளி

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.138,044,463/-

தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

**SUPER BALL**

சீட்டிழுப்பு வாரம் ▶ 1032
சீட்டிழுப்பு திகதி ▶ 2019.08.31 சனிக்கிழமை

R 01 14 37 60

தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

ஊதா, பச்சை, நீலம், சிவப்பு நிற டிக்கட்டுகள் முறையே திங்கட்கிழமை, வியாழக்கிழமை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றிபெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

**ஆசிரியர் வே. அன்பழகன் அவர்களின்**

## தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2020

**வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன**

**யாழ்ப்பாணத்தில்**
**அன்பொளி கல்வியகம்**
**யாழ்.இந்துக்கல்லூரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**சாவகச்சேரியில்**
**அன்பொளி கல்வி நிலையம்**
**தபாற்கந்தோர் வீதி,**
**சாவகச்சேரி.**

அனுமதிகளை **31.08.2019** சனிக்கிழமையில் இருந்து **06.09.2019** வெள்ளிக்கிழமை வரை பிற்பகல் **2.00** மணி தொடக்கம் பிற்பகல் **6.00** மணிக்குள் முற்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

**குறிப்பு:** பெற்றோர் கலந்துரையாடலுடன் வகுப்புக்கள் ஆரம்பிப்பது பற்றிய மேலதிக விவரங்கள், நேர அட்டவணை நேரில் வழங்கப்படும்.

*சின்ன விழி அசைத்துச் சிரித்துவரும் சித்திரங்களை*
*அள்ளி அணைத்து அரிய கல்வியினை மகிழ்வுடன் ஊட்டிடுவோம்.*

**இயக்குநர்கள்**

**வாடகைக்கு**

வெள்ளவத்தையில் 8 Perch காணியில் இரண்டு Flats கீழ்வீடு / முதலாம் மாடிகளுள்ள தனி வீடு குறுங்கால வாடகைக்குண்டு. **071 520 1751**

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 18 . 02 . 1945

மறைவு 04 . 09 . 2016

அமரர் **V.P.வேலாயுதம்பிள்ளை**

(முன்னை நாள் உதவி அரசாங்க அதிபர்)

**திதி : வளர்பக்க திருதியை**

தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தில் வந்துதித்த அப்பாவே - உம் பிரிவை
ஆற்றோம் எம் ஐயா அழுகின்றோம் ஓவென்று
தேற்றுவார் யாருமில்லை தேறுவதற்கும் வழியில்லை
மாற்றமாம் வையகத்து நியதியென நினைந்து
இறைவன் திருவடியில் இன்புற்றிருக்கவென
வேண்டி மனம் ஆறுகின்றோம்.

இல.35/6, குமாரசாமி வீதி,
கந்தர் மடம், யாழ்ப்பாணம்.

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### மாமகேசன் புஸ்பராணி



தோற்றம் 25.11.1944 மறைவு 31.08.2019

யாழ்ப்பாணம் கள்ளியங்காடு ஆறுமுகம் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் கற்சிலைமடு ஒட்டுசுட்டானை வசிப்பிடமாகவும் கொண்ட மாமகேசன் புஸ்பராணி 31.08.2019 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - தெய்வானை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஆசைப்பிள்ளை மாமகேசனின் அன்புத் துணைவியாரும், குமார், செந்தில், திருத்தணிகன் ஆகியோரின் பாசமிகு தாயும், சுசீலாவதி, சற்குணவதி, குகந்தினி ஆகியோரின் மாமியும், ஆயித்தியா, ஆகீர்த்தனா, விசாலன், சரண்சிகா, சகீத் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னரின் இறுக்கிரியைகள் 03.09.2019 செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00மணிக்கு பேராறு இந்து மயானத்தில் தகனம்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**

(in 11126) (13.17) **மகன்மார்கள்: மா.குமார், மா.செந்தில்.**

அலைபேசி...

களை திருடிச் சென்றுள்ளான்.

விற்பனை நிலையத்தின் வெப்பத்தை வெளியேற்றுவதற்காக, சுவரில் அமைக்கப்பட்டிருந்த காற்றாடியை அகற்றி அதன் ஊடாக அதிகாலை 1.30 மணியளவில் உள்ளே நுழைந்த திருடன், அங்கு விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த விலை உயர்ந்த 18 அலைபேசிகளை திருடிச் சென்றுள்ளான்.

கடையில் மறைகாணி பொருத்தப்பட்டிருந்தபோதும், முகத்தை துணியால் மூடிய நிலையில் திருட்டில் ஈடுபட்டுள்ளான்.

கடையில் நீண்ட நேரம் தேடுதலில் ஈடுபட்டு பொருள்களைக் களவாடிய திருடன், அங்கிருந்து வெளியேறும்போது துணியால், தனது கை பட்ட பொருள்கள், இடங்கள் அனைத்தையும் சுத்தம் செய்து கைவிரல் அடையாளம் பிடிபடாதவாறு தப்பிச் சென்றுள்ளான்.

(ஓ.5.105)

## உஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 26 . 10 . 1946

மறைவு 25 . 08 . 2017

அமரர் **இரத்தினம் ஆறுமுகசுவாமி (நாதன்)**

(முன்னாள் மரக்காலை உரிமையாளர்)

கோடுகள் கோலங்கள் ஆகலாம்
சாலைகள் மூடலாம் கதவுகள் திறக்கலாம்
காலங்கள் செல்லலாம் கடமைகள் தவறலாம்
உங்கள் பாச தீபங்கள் என்றும் எங்கள் இதயங்களில்
சுடர்விட்டு எரிந்து கொண்டே இருக்கும்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

CS24010(16.17)

உப்புமடம்,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்

மனைவி,
பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்

## மரண அறிவித்தல்

### சிவகடாச்சக்குருக்கள் மீனாட்சியம்மா

கரமட்டை முருகன் கோவிலடி, நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் பத்திரகாளி கோவிலடி தாவடி தெற்கு கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகடாச்சக்குருக்கள் மீனாட்சியம்மா 01.09.2019 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தியாகராஜா குருக்கள் சுந்தராம்பாள் தம்பதியினரின் மகளும் காலஞ்சென்ற சிவகடாச்சக்குருக்களின் அன்பு மனைவியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02.09.2019 திங்கட் கிழமை அவரது தாவடி இல்லத்தில் நடைபெற்று பகல் 12.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**சி.பிரபாகரக்குருக்கள்**
**077 197 7086**

தச்சந்தோப்பு சிந்தாமணிவிநாயகர் ஆலயம்
கரவெட்டி

## கண்ணீர் அஞ்சலி

### கோவிந்தசாமி செல்வராசா

(ஓய்வுநிலை பிரதிக்கல்விப் பணிப்பாளர் – கிளிநொச்சி)



கடந்த (30.08.2019)
அன்று காலமான
**கோவிந்தசாமி செல்வராசா**
அவர்களின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன் அவரது
ஆன்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்
கின்றோம்.

**சிவா நறுமணப்பூங்கா**
(உரிமையாளரும், ஊழியர்களும்)
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு:-021 222 2567

## வலிகாமம் மேற்கு, பிரதேசசபை, சுழிபுரம்

### ஆதனப் பெயர்மாற்றம்

### 4/7, பாடசாலை வீதி, வட்டாரம் - 06

வலிகாமம் மேற்கு, பிரதேச சபைக்குட்பட்ட வட்டாரம் - 06 பாடசாலை வீதியிலுள்ள இல. 4 / 7 ஆகிய ஆதனம் எமது ஆதன வரிப்பதிவேட்டின் பிரகாரம் சொந்தக்காரர் என்றே காணப்படுகின்றது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்திற்கு சொரியலாக **வேலுப்பிள்ளை கைம்பெண் மகேஸ்வரியும் வேலுப்பிள்ளை** பாலசுப்பிரமணியமும், **வேலுப்பிள்ளை** பரமசாமியும், **வேலுப்பிள்ளை இராசதுரையும்** சொந்தகாரர்களாகவிருந்து குறித்த ஆதனத்தினை சொரியலாக ஆட்சிசெய்வது வசதியீனமாகயிருந்தமையால் பிரசித்த நொத்தாரிசு ப.இராசகுரு முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1206/03.06.1987 ஆம் இலக்க உறுதியால் பிரிவிடல் செய்து சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

**சிவகுரு விமலச்சந்திரனும்** பெண் **சிறீராஜினியும்** பிரசித்த நொத்தாரிசு இ.சபேசன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 6222/16.09.2015 ஆம் இலக்க உறுதியால் குறித்த **வேலுப்பிள்ளை இராசதுரையும் பெண் நிர்மலாதேவியும்** ஆகியவர்களிடமிருந்து குறித்த ஆதனத்தின் ஒரு பகுதியை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.


**மகேந்திரராசா ரிசாந்தனும் பெண் இந்துமதியும்** பிரசித்த நொத்தாரிசு வை.சுபாஸ்கரன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 109 /11.02.2019 ஆம் இலக்க உறுதியால் குறித்த **சிவகுரு விமலச்சந்திரனும் பெண் சிறீராஜினியும்** ஆகியவர்களிடமிருந்து குறித்த ஆதனத்தின் ஒரு பகுதியினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

**மகேந்திரராசா ரிசாந்தனும் பெண் இந்துமதியும்** ஆகியவர்கள் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்கள். இவ் ஆதனப் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **மகேந்திரராசா ரிசாந்தனும் பெண் இந்துமதியும்** ஆகியவர்களிற்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு, பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**தவிசாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை.**


(cs.27719) (13.17)

# 3 வேடங்களின் நடிக்கும் சந்தானம்




தமிழ் சினிமாவில் நகைச்சுவை நடிகராக வலம் வந்த சந்தானம் தற்போது நாயகனாக நடித்து வலம் வருகிறார். இவர் நடித்த 'தில்லுக்கு துட்டு', 'சக்க போடு போடு ராஜா', 'தில்லுக்கு துட்டு 2' போன்ற படங்கள் ரசிகர்களிடையே நல்ல வரவேற்புப் பெற்றது. அண்மையில் வெளியான 'ஏ1' திரைப்படமும் ரசிகர்களைக் கவர்ந்தது. அடுத்து விஜய் ஆனந்த் இயக்கத்தில் உருவாகி வரும் 'டகால்டி' படத்தில் சந்தானம் கதாநாயகனாக நடித்து வருகிறார். இந்த நிலையில், சந்தானத்தின் அடுத்த படத்தின் அறிவிப்பு வெளியாகியுள்ளது.


கார்த்திக் யோகி இயக்கும் புதிய படத்தில் சந்தானம் மூன்று வேடங்களில் நடிக்க இருக்கிறார். இந்த படத்தை கேஜேஆர் ஸ்டுடியோஸ் மற்றும் சோல்ஜர்ஸ் பேக்டரி நிறுவனமும் இணைந்து தயாரிக்கிறார்கள்.




## நேர்மை.. உண்மை.. சேரன்








## ஆட்சி மாறினாலும் காட்சி மாறாது

நாம் கூட்டி வந்த சீதேவி (நல்லாட்சி) இப்போது மூதேவி (நாசமாபோன ஆட்சி) ஆகிவிட்டதே எப்படி விரட்டலாம் என்று வழி தேடும் சிறுபான்மையினருக்கு எந்த தெரிவும் இல்லாத ஒரு தேர்தலாகவே இருக்கப்போகிறது வருகின்ற ஜனாதிபதி தேர்தல்.

என்றாலும் வருகின்ற தேர்தலில் மஹிந்த கூட்டணிக்கு எதிரான பலம்பொருந்திய ஒரு கூட்டணியை வெற்றிபெற செய்வதே சிறுபான்மையின மக்களின் நோக்கமாக இருக்கும் என்பதே என் கருத்து.

இந்த முறை ஆட்சியை பிடித்தே தீருவோம் என்று மஹிந்த தரப்பினர் முழு திறனையும் பாவித்து களத்தில் இறங்கியிருப்பது ஒன்றும் நாட்டு மக்களை வைத்து ஆராத்தி எடுப்பதற்கு அல்ல முக்கியமாக ராஜபக்ஷ குடும்பத்திற்கு எதிராக நீதி மன்றத்தில் இருக்கும் குற்ற விசாரணைகளிலிருந்து தப்புவதற்கே.

இலங்கை அரசியலில் ஆட்சி மாறினாலும் காட்சி மாறாது !







## twitter

உள்ளூராட்டக்காரன்
@shivaas_twitz

வீதியோரம் நின்று நோட்டீஸ் கொடுப்பவர் போல, எல்லோருக்கும் வாய்ப்புகளை வழங்கிக்கொண்டு தான் இருக்கிறார் கடவுள்...

நம்மில் பலரும் அதை உதாசீனப்படுத்தி விட்டு சென்று கொண்டிருக்கிறோம்..!

சப்பாணி@manipmp
நான் விழித்தபோது விழித்துக் கொண்டிருந்த அலாரத்தை உறங்க வைத்தேன்

நமக்காக காத்திருப்பது காலம் மட்டுமே

## பிக்பாஸ் 3



டேய்...! கவினு, லாஸ், லாஸ்னு சொன்னியே, உங்ககிட்ட சீட்டுகட்டி நிறையபேர் "லாஸ்" ஆகிடாங்கன்னு சொல்லவே இல்லயேடா...

நம்மை குறை கூறுபவர்கள் கூறி கொண்டே இருக்கட்டும். அதுவே நம் முன்னேற்றத்தின் படிகட்டுகள். #கவின்

வத்திக்குச்சி வனிதா வின் வஞ்சம்! மக்கள் மனதில் தர்சன் தஞ்சம்!

## பிக்பாஸ் 3






# 27 நட்சத்திரங்களுக்குரிய பொதுவான குணங்கள்

## உத்திராடம்

நான்கு கால்களைக் கொண்ட கட்டிலின் இரண்டு கால் தடத்தில் அமைந்திருக்கும் இரண்டு நட்சத்திரங்கள் உத்திராடத்தில் அடங்கும். இதை 'முக்கால் நட்சத்திரம்' என்கிறது ஜோதிடம். இதன் முதல் பாதம் தனுசிலும் மற்ற மூன்றும் மகர ராசியிலும் அமைகின்றன.

**பொதுக் குணங்கள்:** அறிவுப்பசி, ஆசாரம், தெய்வ பக்தி, தர்ம சிந்தனை, நேர்மை, வாய்மை மிகுந்தவர்கள். மனத்தில் பட்டதை சட்டென்று வெளிப்படுத்துவதால், சில தருணங்களில் பலருக்கும் வேண்டாதவர்கள் ஆகிவிடுவர். நல்ல தோற்றம், பேச்சுத் திறமை, வெற்றியைத் தேடிச் செல்லும் முயற்சி ஆகியவை இவர்களின் பொதுவான குணங்கள்.

**உத்திராடம் நட்சத்திரம் முதல் பாதம்:** இதன் அதிபதி குரு. இவர்களிடம் சாஸ்திர அறிவு மிகுந்திருக்கும். நல்லதைப் பிறருக்குச் சொல்வதில் வல்லவர்கள் நல்ல வழிகாட்டிகள். குரு பக்தி கொண்டவர்கள். பூஜை புனஸ்காரத்தில் ஈடுபாடு கொண்டவர்கள்.



**உத்திராடம் நட்சத்திரம் இரண்டாம் பாதம்:**
இதன் அதிபதி சனி. ஆசை மிகுந்த வர்கள். ஊதாரித்தனமாகப் பணத்தைச் செலவழிப்பவர்கள். பிறர் கஷ்டங்களை உணராதவர்கள். அதிகாரம் செலுத்துவதில் விருப்பம் மிக்கவர்கள். சாப்பாட்டுப் பிரியர்கள். பழி வாங்கும் இயல்புடையவர்கள். தோல்வியைத் தாங்க முடியாதவர்கள்.

**உத்திராடம் நட்சத்திரம் மூன்றாம் பாதம்:** இதற்கும் சனிபகவானே அதிபதி. 2ஆம் பாதத்துக்கு உரியவர்களின் குணங்கள் அனைத்தும் இவர்களுக்கும் உண்டு. தீவிர பக்தி செய்து, உலகியல் பலன்களையும் ஐஸ்வர்யங்களையும் அடைய விரும்புபவர்கள். பிடிவாதக்காரர்கள். பிறரை மதிக்கத் தெரியாதவர்கள். தங்களது இயல்புகளை மாற்றிக்கொண்டு வாழ்ந்தால் வாழ்க்கை சிறக்கும்.

**உத்திராடம் நட்சத்திரம் நான்காம் பாதம்:** இதன் அதிபதி குரு. கருணையும், தர்ம சிந்தனையும் இவர்களது இயல்பு. துணிச்சல் மிக்கவர்கள். தர்மத்தைக் கடைப்பிடிப்பதில் தீவிரமானவர்கள். தீமையை எதிர்த்துப் போராடுபவர்கள். பிறர் நலம் கருதி வாழ்பவர்கள்.

## திருவோணம்

திருவோணமும் ஓர் அம்பு அல்லது அஸ்திர வடிவில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

**திருவோணம் நட்சத்திரம் முதல் பாதம்:** செவ்வாய் இதன் அதிபதி. இதில் பிறந்தவர்கள் சௌகரியத்தை விரும்புவர். தனக்காக எவ்வளவு வேண்டுமானாலும் செலவழிப்பவர்கள், பிறருக்காகச் செலவழிக்க யோசிப்பார்கள். உடல்நலக் குறைவு அவ்வப்போது ஏற்படும். காரியம் சாதிப்பதில் வல்லவர்கள்.

**திருவோணம் நட்சத்திரம் இரண்டாம் பாதம்:** சுக்கிரன் இதனை ஆட்சி செய்பவர். இவர்கள் சுகத்தை விரும்புபவர்கள். திறமைசாலிகள். தலைமை தாங்கும் இயல்பும், தெய்வபக்தியும் உள்ளவர்கள். பெரியோர்களை மதிப்பவர்கள்.

**திருவோணம் நட்சத்திரம் மூன்றாம் பாதம்:** புதன் இதன் அதிபதி. நிறைவான ஞானம், பக்தி உடையவர்கள். யோகி போல வாழ்பவர்கள். தர்மம் செய்வதிலும் கலைகளிலும் ஈடுபாடு கொண்டவர்கள். கோபம், குணம் இரண்டும் இருக்கும்.

**திருவோணம் நட்சத்திரம் நான்காம் பாதம்:** சந்திரன் இந்தப் பாதத்தை ஆட்சி செய்கிறார். இவர்கள் சௌகரியமும், சௌபாக்கியமும் பெற்று வாழ்பவர்கள். பாசமும் நேசமும் மிக்கவர்கள். குடும்பத்தை நேசிப்பவர்கள். நட்பு மிக்கவர்கள். நியாயவாதிகள். உடனடிக் கோபமும் உடனடி சாந்தமும் இவர்கள் இயல்பு.



## பைரவரை வழிபட்டால் கிடைக்கும் பலன்கள்



ஆகமங்கள், சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ள அஷ்ட பைரவர் விளக்கங்களைக் கூர்ந்து நோக்கினால் தெள்ளத் தெளிவாக விளங்கும்.

அஷ்ட பைரவர்களும் அறுபத்தி நான்கு காலங்களில், அறுபத்தி நான்கு தோற்றங்கள் கொண்ட பைரவராகக் காட்சி தருகிறார்கள்.

12 ராசிகளையும் தன் உடலில் அங்கங்களாகக் கொண்டவர் ஸ்ரீபைரவர்.

நவக்கிரகங்களுக்கும் பிராண தேவதையாக இருப்பவரும் பைரவரே. தேவ, அசுர, மானிடர்களும் அஞ்சும் கிரகம் சனி பகவான் ஆவார். சனிக்கு வரம் தந்து, இந்தக் கடமையைச் செய்ய வைத்த சனியின் குரு ஸ்ரீபைரவரே ஆவார்.

சனியின் வாத நோயை நீக்கியவரும் பைரவரே.

தன் தமையன் எமன், பைரவரிடம் அதீத சக்திக்கு வரம் பெற்றதைக் கண்ட அவன் தம்பி சனீஸ்வரன், பைரவரை நோக்கி கடுமையான தவம் இருந்தான்.

தவ வலிமையால் பைரவர் அவன் முன் தோன்றி, மும்மூர்த்திகள் உள்பட அனைவரையும், கால வர்த்தமான நிர்ணயப்படி (ஜோதிட ரீதியாக சனிப்பெயர்ச்சிப்படி) நல்லது தீயது செய்யும் சக்தி அருளினார். அப்போது சனீஸ்வரனிடம் ஒரு சத்திய பிராமாணம் பெற்றுக் கொண்டார்.

சனீஸ்வரனின் சஞ்சாரத்தால் எவர் ஒருவருக்கு கஷ்டம் கொடுக்க வேண்டியிருந்தாலும், அவர்கள் பைரவரை வழிபட்டு சரணடைந்தால் அவர்களுக்கு சனீஸ்வரன் நன்மையையே செய்ய வேண்டும் என பைரவப் பெருமானிடம் விரும்பினார்.

அதனால்தான், ஏழரை நாட்டுச்சனி, அஷ்டமச்சனி, ஜன்மச்சனியால் அவதிப்படுவோர் பைரவ வழிபாடு ஒன்றினால் மட்டுமே அத்தொல்லைகளிலிருந்து விடுபட முடியும்.



## இன்றைய நாள்

**மேடம்:** சிரம சூழ்நிலையை திறமையுடன் சரி செய்வீர்கள். உங்களின் சாமர்த்தியத்தை நண்பர் பாராட்டுவார். குடும்பத் தேவைகளைப் பெருமளவில் பூர்த்தி செய்வீர்கள். மனைவியின் அன்பில் மகிழ்வீர்கள்.

**இடபம்:** சிலர் உங்களுக்கு தந்த வாக்குறுதிக்கு மாறாகச் செயல்படுவர். தொழில், வியாபாரம் செழிக்கப் புதிய முயற்சி மேற்கொள்வீர்கள். சுமாரான அளவில் பணவரவு கிடைக்கும்.

**மிதுனம்:** கூடுதல் பணிகள் மனதில் சஞ்சலத்தை ஏற்படுத்தும். நற்பெயரை பாதுகாக்க சிலரது உதவியை நாடுவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை சுமாரான அளவில் இருக்கும்.

**கடகம்:** பணியில் இலட்சிய மனதுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியில் புதிய பரிமாணம் ஏற்படும். பணவரவும் நன்மையும் அதிகரிக்கும். எதிர்பார்த்த சுப செய்தி வந்து சேரும். இஷ்ட தெய்வ வழிபாடு நடத்துவீர்கள்.

**சிம்மம்:** செயல்களைப் பரிசீலன்னை செய்து நடத்தவும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற நண்பரால் உதவி உண்டு. புதிய இனங்களில் பணச்செலவு ஏற்படலாம். உறவினர்களைச் சந்திக்கின்ற வாய்ப்பு உருவாகும்.

**கன்னி:** உங்களின் வெகுநாள் தவம் இனிதே நிறைவேறும். உறவினர், நண்பர் பெருமையுடன் வாழ்த்துவர். தொழில், வியாபாரம் செழிக்க அதிக அளவில் பணிபுரிவீர்கள். ஆதாய பணவரவு கிடைக்கும்.

**துலாம்:** முக்கியமான செயலை மறந்து விடுவீர்கள். குடும்ப உறுப்பினர் நினைவுபடுத்துவர். தொழில், வியாபாரத்தில் இடையூறுகளைச் சரி செய்வீர்கள். அளவான பணவரவு கிடைக்கும். ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம்.


**விருச்சிகம்:** எண்ணமும் செயலும் சிறந்து அதிக நன்மை தரும். பலரும் அன்பு பாராட்டுவர். தொழில், வியாபார வளர்ச்சியில் திட்டமிட்ட இலக்கு நிறைவேறும்.

**தனுசு:** செயல்களில் தியாக குணம் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் குறுக்கீடு விலகும். உற்பத்தி, விற்பனை செழித்து ஆதாய பணவரவு பெறுவீர்கள். வீட்டு உபயோகப் பொருள் வாங்குவீர்கள்.

**மகரம்:** சுய் தேவைகளைப் பூர்த்தி செய்ய எண்ணம் வளரும். உறவினரின் செயலை குறை சொல்ல வேண்டாம். தொழில், வியாபார வளர்ச்சியில் தாமதம் ஏற்படலாம். குறைந்த அளவில் பணவரவு கிடைக்கும்.

**கும்பம்:** பொது இடங்களில் எவரிடமும் வாக்குவாதம் பேசவேண்டாம். பணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலத்தைப் பாதுகாக்க வேண்டும்.

**மீனம்:** இன்று உங்களின் எதிரியால் இருந்த தொந்தரவு விலகும். புதிய செயல்கள் எளிதாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டு.



விநாயகர் சதுர்த்தி இன்று

# விநாயகர் வித்தியாசமானவர்

விநாயகர் சதுர்த்தியன்று அவருக்கு நடத்தப்படும் வழிபாடுகள் வித்தியாசமானவை. ஏனெனில் விநாயகரே வித்தியாசமானவர்தான். தெய்வங்களுக்கு எல்லாம் தெய்வமாய் வணங்கப்படப்படுபவர் விநாயகர். அதனால்தான் அவரை 'முதல் கடவுள்' என்கிறோம். ஒரு காலத்தில் 'கணாதிபத்யம்' என்ற பெயரில் தனி சமயமாக விநாயகர் வழிபாடு இருந்தது. அனைத்து தெய்வங்களின் வழிபாடு ஒருங்கிணைக்கப்பட்டபோது தனக்கென உள்ள ஆலயத்தில் முதன்மை தெய்வமாகவும், சிவன் கோவில்களில் பரிவார தெய்வமாகவும், பெருமாள் கோவில்களில் பாதுகாப்புத் தெய்வமாகவும் விநாயகர் வணங்கப்படுகிறார். விநாயகருக்கு ஆண்டுக்கு ஒரு தடவை நடத்தப்படும் விநாயகர் சதுர்த்தி விழா பிரசித்திமானது. இந்த ஆண்டுக்கான விநாயகர் சதுர்த்தி விழா இன்று கோலாகலமாக கொண்டாடப்பட உள்ளது.

விநாயகர் திங்கட்கிழமை பிறந்தவர். இந்த ஆண்டு விநாயக சதுர்த்தி விழா திங்கட்கிழமை வருகிறது. எனவே இந்த ஆண்டு விநாயகர் சதுர்த்தி விழா இரட்டிப்பு சிறப்புப் பெற்றுள்ளது. அன்று அவருக்கு நடத்தப்படும் வழிபாடுகள் வித்தியாசமானவை. ஏனெனில் விநாயகரே வித்தியாசமானவர்தான். அவரது உருவத் தோற்றம் மனித உடல் யானைத் தலையுடன் வித்தியாசமானது. அவரை தோப்பு கரணம் போட்டு, தலையில் குட்டி நாம் செய்யும் வழிபாடு வித்தியாசமானது.

அவருக்காக செய்யப்படும் விதம், விதமான அலங்காரங்கள் வித்தியாசமானவை. அவருக்கு படைக்கப்படும் நைவேத்தியங்கள் வித்தியாசமானவை. மொத்தத்தில் விநாயகர் வழிபாடு வித்தியாசங்கள் நிறைந்ததாக இருப்பது தெரியும். விநாயகரை எந்த இடத்திலும் நிறுவி வழிபடலாம். எந்த அளவிலும் செய்து வழிபடலாம்.

## விநாயகர் சதுர்த்தி பிறந்த கதை

தொடங்கும் ஒவ்வொரு செயலுக்கும் விநாயகருக்கே முதல் வழிபாடு என்ற மரபு பல காலமாக உள்ளது. விநாயகர் சதுர்த்தி பிறந்த கதை அறிந்து கொள்ளலாம்.

முன்னொரு காலத்தில் சிவபெருமானின் பக்தனான கஜமுகாசுரன் என்பவன் வரம் பல பெற்றமையால் இறுமாப்புக் கொண்டு தேவர்களைப் பல வழிகளிலும் துன்புறுத்தி வந்தான். அவன் தன்னை மனிதர்களாலோ, விலங்குகளாலோ, ஆயுதங்களாலோ யாரும் கொல்ல முடியாதபடி வரம் பெற்று இருந்ததால் தேவர்கள் என்ன செய்வது என்று தெரியாமல் திணறினர்.

எனவே அனைத்து தேவர்களும் ஒன்றாக திரண்டு சிவ பெருமானிடம் சரண் அடைந்தனர். இதனால் அவர் ஆவணி மாத சதுர்த்தி அன்று விநாயகரை யானை முகத்தோடும், மனித உடலோடும் படைத்து கஜமுகாசுரனை அழிக்க அனுப்பி வைத்தார்.

விநாயகருக்கும் கஜமுகாசுரனுக்கும் கடும் போர் நடந்தது. முடிவில் விநாயகர் பெருமான் தனது கொம்புகளில் ஒன்றை ஒடித்து அவனை அழிக்க ஏவினார். அசுரனோ, மூஞ்சுறாய் வந்து எதிர்த்து நின்றான். விநாயகப் பெருமான் அவனை சம்ஹாரம் செய்தார். பின்னர் அவர் மூஞ்சுறைத் தனது வாகனமாக்கிக் கொண்டு அருளினார். இதன்மூலம் அனைவரும் சுபிட்சம் பெற்றனர். எனவே அன்று முதல் ஆவணி மாத சதுர்த்தியன்று விநாயகரை வழிபட்டால் தீராதவினைகள் தீரும். சகல பாக்கியங்கள் கிடைக்கும் என்பது ஐதீகம்



## விநாயகர் பற்றிய தகவல்கள்

தடைகளை விலக்கி நாம் தொடங்கும் எல்லா செயல்களிலும் வெற்றியை அளிப்பவர் கணபதி. விநாயகர் பற்றிய தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

- விநாயகரை ஒரு முறை வலம் வருதல் வேண்டும்.
- மகாபாரதத்தை வியாசர் சொல்லச் சொல்ல விநாயகர் எழுதினார்.
- விநாயகர் பயிர் தொழிலுக்குரிய தெய்வம் என்று சொல்லப் படுகின்றார். அதாவது பயிரை அழிக்கக் கூடிய பெருச்சாளியைத் தமது வாகனமாக்கி அடக்கி வைத்துள்ளார் என்பது இதன் பொருள்.
- விநாயகரின் வாகனங்கள் மயில், காளை, சிங்கம், யானை, குதிரை, பூதம் முதலியனவாகும்.
- வெள்ளிக்கிழமை தோறும் அறுகம்புல், தேங்காய் ஆகிய வற்றினைக் கொண்டு கணபதி ஹோமம் செய்து வந்தால், நீண்ட ஆயுளும், செல்வமும் கிடைக்கும்.
- விநாயகரின் மந்திரம் ஓம் கம் கணபதியே நமஹ என்பதாகும். காலை மாலை 108 தடவை இந்த மந்திரத்தை சொல்லி வந்தால் சகல நன்மைகளும் உண்டாகும்.
- பல்லவர் காலக் கோவில்களில் பரிவார தேவதையாக முதன் முதலாக அமைக்கப் பெற்ற கணபதி காஞ்சி கைலாசநாதர் கோவிலில் காணப்படுகின்றார்.
- பஞ்சபூதத் தொடர்பு உடையவர் விநாயகர். இவர் அரச மரத்தடியில் ஆகாய வடிவாகவும், வாதநாராயண மரத்தடியில் வாயு வடிவமாகவும், நெல்லி மரத்தடியில் நீர் வடிவமாகவும், ஆல மரத்தடியில் மண்வடிவமாகவும் விளங்குகின்றார்.
- விநாயகப் பெருமான் பிரணவம் ஆகிய ஓங்கார மந்திர சொரூபமாய் விளங்குபவர்.
- இப் பூலகில் விநாயகரின் பரிபூரண அருளைப் பெற்று வாழ்ந்தவர் புருசுண்டி என்ற முனிவர். இவர் விநாயகரைப் போல் துதிக்கையுடன் கூடிய தோற்றத்தில் காணப்பட்டார்.
- விநாயகர் உருவத்தில் எல்லா கடவுள்களும் உள்ளனர். நாபி பிரம்மஉருவம், முகம்விஷ்ணு, கண் சிவரூபம், இடப்பாகம் சக்தி, வலப்பாகம் சூரிய ரூபம் என்று கருதப்படுகிறது.
- விநாயகருக்கு தேங்காய் எண்ணெய் காப்புதான் மிகவும் பிரியமானது.
- விநாயகர் ஏற்காத இலை துளசி இலை.
- விநாயகப் பெருமானின் அருளைப் பெற்றோர் அவ்வையார், நம்பியாண்டார் நம்பி, சேந்தனார்
- பிள்ளையார் சுழியில் உள்ள ஐந்தெழுத்துத் தத்துவம் நமசிவாய என்பதாகும்.
- விநாயகர் புகழ் பாடும் நூல்கள்: ஸ்ரீகச்சியப்ப முனிவர் அருளிய விநாயகக் கவசம், ஸ்ரீவிநாயக சப்தகம், ஷோடச கணபதி ஸ்துதிகள், ஸ்ரீகணேச புஜங்கம், ஸ்ரீகணேச பஞ்சரத்னம், ஸ்ரீகணேச வைகறைத் துதி, அவ்வையார் அருளிய விநாயகர் அகவல், ஸ்ரீகணேஷாஷ்டகம்.
- விநாயகர் என்றால் அவரை விட மேலான ஒருவர் இல்லை என்று அர்த்தமாகும்.
- விநாயகர் சதுர்த்தி விழா மராட்டியத்திலும், ஆந்திராவிலும் 11 நாள்கள் வழிபாடாகக் கொண்டாடப்படுகின்றது.
- பிள்ளையாருக்கு ஞானக் கொழுந்து என்றொரு பெயருண்டு. ஞானத்தை அருள்வதற்காக விநாயகர் அரச மரத்தடியில் அமர்ந்துள்ளார்.
- வைணவ கோவில்களில் அமைக்கப்பட்டுள்ள விநாயகர் தும்பிக்கையாழ்வார் என்று அழைக்கப்படுகின்றார்.
- கணபதிக்கும், சனீஸ்வரனுக்கும் பிரியமானது வன்னி மரம். எனவே, வன்னிமர இலைகளால் விநாயகப் பெருமானை வழிபட்டால் சனிபகவான் தொல்லைகள் நீங்கும்.
- கணபதி வழிபாடு என்பது காணாபத்யம் என்றழைக்கப்படுகிறது. இது ஆதிசங்கரர் சிறப்பித்த வழிபாடு ஆகும்.
- விநாயகப் பெருமான் சித்தி, புத்தி என்ற தம் மனைவியர் மூலம் உருவாக்கியவர் தான் சந்தோஷி மாதா ஆவார்.
- விக்னம் என்றால் கஷ்டம். கஷ்டங்களை அகற்றுபவர் என்பதால் விக்னேஸ்வரர் என்கிற பெயர் விநாயகருக்கு ஏற்பட்டது.

## விநாயகர் விரத வழிபாட்டு பொருள்கள்

விநாயகர் சதுர்த்தி நாளில் கீழ்க்கண்ட பொருள்களில் பிள்ளையாரை அமைத்து வழிபட்டால், பல நன்மைகளை அடையலாம் என்பது ஆன்மிக சான்றோர்களின் கருத்தாகும்.

மஞ்சள் பிள்ளையார் திருமணத் தடை நீங்கும்
மண் பிள்ளையார் ராஜ பதவி கிடைக்கும்
புற்றுமண் பிள்ளையார் வியாபாரம் பெருகும், லாபம் கிடைக்கும்
வெல்லப் பிள்ளையார் சௌபாக்கியம் உண்டாகும்
உப்புப் பிள்ளையார் எதிரிகள் வசியமாவர்
வேப்பமரப் பிள்ளையார் ஜெயம் உண்டாகும்
வெள்ளெருக்கு பிள்ளையார் ஞானம் கிடைக்கும்
பசுஞ்சாணப் பிள்ளையார் எண்ணிய காரியம் கைகூடும்
பச்சரிசி மாவுப் பிள்ளையார் விவசாயம் பெருகும், விளைச்சல் அதிகரிக்கும்
வெண்ணெய் பிள்ளையார் வியாதிகள் அகலும்.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com




## றொஹிங்யர்களுக்கான நீதி?

றொஹிங்யர்கள் விவகாரம் மீண்டும் பேசு பொருளாகியுள்ளது. 'மியன்மாரில்இருந்து தமது பகுதிக்குள் அரசியல் தஞ்சம் புகுந்த றொஹிங்யர்கள் மீண்டும் மியன்மார் செல்வதை விரும்பவில்லை. அவர்களின்விருப்பம்மற்றும்அனுமதியில்லாமல் அவர்களைத் திரும்பவும் அனுப்பும் எண்ணமில்லை' என்று பங்களாதேஷ் மிகச் சமீபத்தில் அறிவித்ததைத் தொடர்ந்து றொஹிங்யர்கள்பன்னாட்டுச் சமூகத்தின் கவனக் குவிவைப் பெற்றுள்ளனர். எனினும் அவர்களுக்கான நீதி என்பதற்கான பதில்கள் கண்ணுக்கெட்டிய தூரத்தில் இல்லை என்பதே பெரும்துயர்.

றொஹிங்யர்கள் முஸ்லிம்கள். அவர்கள் பூர்வீகமாக பங்களாதேஷைச் சேர்ந்தவர்கள். முன்னொரு காலத்தில்மியன்மாருக்குச்சென்றுஅங்குகுடியேறியபோதிலும் அவர்களை மியன்மார் தனது குடிமக்களாகக் கருதுவதில்லை. பௌத்த பேரினவாத மியன்மாரால் அவ்வப்போது றொஹிங்யர்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்ந்து கட்டவிழ்த்து விடப்பட்டன. கடந்த ஆண்டு இந்த வன்முறைகள் பல மடங்காக மேற்கொள்ளப்பட்டன. றொஹிங்யர்களுக்குஎதிரான இந்தத் தாக்குதல்கள்அவர்களை இனச்சுத்திகரிப்புச் செய்யும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டவையே என்றுஐக்கியநாடுகள்சபைகடந்த ஆண்டு குறிப்பிட்டது. ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலர் குத்தேரஸ் ஒருபடி மேல் சென்று 'றொஹிங்யர்களுக்கு எதிராக மியன்மார் இராணுவத்தாலும் மியன்மார் அரசாலும்மேற்கொள்ளப்பட்ட வன்முறைகள், இனவழிப்புச் செய்வதற்கான பாடப்புத்தகம் போன்று இருந்தது' என்று அறிவித்திருந்தார். ஐக்கிய நாடுகள் சபை மட்டுமல்ல அமெரிக்கா உட்பட உலகின் பல்வேறு நாடுகளும் மியன்மாரின் பக்கம் குற்றம் கண்டு கொண்ட போதிலும் இன்றுவரை றொஹிங்யர்களுக்கான நீதியென்பது வெறும் பேச்சளவிலேயே உள்ளது. செயலில் எதுவும் இல்லை. எதுவுமே இல்லை.

றொஹிங்யர்களும் தமிழர்களும் மிக நெருக்கமான தொடர்பைக்கொண்டுள்ளனர். இலங்கையும்மியன்மாரும்கூட அத்தகைய வகையறாதான். இலங்கை, மியன்மார்இரண்டும்பௌத்தநாடுகள். றொஹிங்யர்கள், தமிழர்கள் இருவரும் அந்தந்த நாடுகளின் சிறுபான்மையினர். 2009ஆம் ஆண்டு இலங்கையில் இடம்பெற்ற இறுதிப் போரின்போது பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்கள் காட்டுத் தனமாகக் கொன்றொழிக்கப்பட்டனர். ராஜபக்ச அரசு போர்க் குற்றம் புரிந்தது. அந்தஅரசின் ஆதரவுடன்இராணுவத்தினர் இனச்சுத்திகரிப்பில் ஈடுபட்டனர்என்று ஐக்கிய நாடுகள்அறிவித்தபின்னர்இதுகாலும்இங்குஎந்தவொரு நியாயமான நடவடிக்கையோ அல்லது முன்னெடுப்போமேற்கொள்ளப்படவில்லை. போர்க்குற்றங்களில் ஈடுபட்டவர் என்று சொல்லப்படும் சவேந்திர சில்வா தற்போது இராணுவத் தளபதியாக பதவி உயர்த்தப்பட்டுள்ளார். தமிழர்களின் இறந்தகாலம் றொஹிங்யர்களின் எதிர்காலம் என்ற அடிப்படையில், றொஹிங்யர்கள் தமக்கான நீதிக்காக இன்றும் சிலஆண்டுகள்வீதிகளிலும்இராணுவமுகாம்களுக்கு முன்னராகவும் போராட வேண்டியிருக்கும். அவர்களைக் கொன்றொழித்த நபரொருவர் இன்னும் சில வருடங்களில்மியன்மார்இராணுவத்தின்தளபதியாக வரக்கூடும். வெறும் அறிக்கைகளைவிடுத்து அவகாசங்களை வழங்கும் போக்கு மாறாத வரையில் சிறுபான்மையினருக்கு இத்தகைய அவலநிலை எழுதப்படாத விதியே!.



# அமேசன் தீ

## ஏன் நாம் விவாதிக்க வேண்டும்?

உலகின் நுரையீரல் என்று வர்ணிக்கப்படும் அமேசன் காடுகளில் ஏற்பட்டிருக்கும் பெருந்தீ உலகெங்கும் உள்ள சூழலியல் நேசர்களைத் துயரத்தில் தள்ளியிருக்கிறது. அமேசன் நதியின் படுக்கையில் 55 லட்சம் சதுர கிலோ மீற்றர் அளவுக்குத் தென் அமெரிக்க நாடுகளில் படர்ந்திருக்கும் அமேசன் காடுகள் அந்த நாடுகளைத் தாண்டியும் எல்லா உலக நாடுகளுக்கும் மிகவும் முக்கியமானவை. ஆகவே, இந்தக் காட்டுத்தீயின் விளைவுகள் அந்த நாடுகளோடு முடிந்துவிடும் என்று எவரும் சொல்ல முடியாது.

### அமேசன் எனும் அதிசயம்

பிரேசில், பெரு, கொலம்பியா உள்ளிட்ட ஒன்பது நாடுகளுக்கு விரிந்திருப்பவை அமேசன் மழைக் காடுகள். இதில் சுமார் 60 வீதம் அளவுக்கான காடுகள் பிரேசிலின் எல்லைக்குள் வருகிறது. உலகில் காணப்படும் பத்தில் ஓர் உயிரினம் அமேசன் காடுகளில் உள்ளது. 40 ஆயிரம் தாவர இனங்கள், 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நன்னீர் மீன் இனங்கள், ஆயிரத்துக்கும் மேற்பட்ட பறவையினங்கள் காணப்படும். இந்தக் காடுகளில் கடந்த 20 ஆண்டுகளில் மட்டும் 2 ஆயிரம் புதிய உயிரினங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. உலகிலேயே அதிக அளவு உயிர்ப்பன்மை காணப்படும் பகுதி அமேசன் மழைக்காடுகள்தான். அது மட்டுமல்லாமல் சுமார் 500 வகையான பழங்குடிகள் இந்தக் காடுகளில் வசிக்கின்றனர். இவர்களில் கணிசமானவர்களுக்கு வெளியுலகத் தொடர்பே கிடையாது. இங்குள்ள மரங்களின் உச்சிகள் ஒரு விதானம்போல் பரந்திருப்பதால் காட்டின் பெரும் பகுதியில்தரைக்குச்சூரியஒளிபோகவேபோகாது. இதனால், தரைப்பகுதி எப்போதுமே கும்மிருட்டாகத்தான் இருக்கும். மழை பெய்தால் உச்சிப் பகுதியைத் தாண்டித் தரையை வந்துசேரச் சில நிமிடங்கள் ஆகும். அந்த அளவுக்கு மரச் செறிவைக் கொண்டவை இந்தக் காடுகள்.

### காட்டுத்தீ

பொதுவாக, அமேசன் உள்ளிட்ட எந்த மழைக் காட்டிலும் காட்டுத்தீ என்பது வழக்கமான ஒன்று. அமேசன் காட்டையே எடுத்துக் கொண்டால் அது ஒவ்வொரு ஆண்டும் 20 ஆயிரம் சதுர மைல் அளவுக்கு அழிந்துபடுகிறது. ஏற்கெனவே, 20 வீதம் காட்டுப் பரப்பை இழந்திருக்கிறது. ஒவ்வொரு நாளும் 2 லட்சம் ஏக்கர் பரப்பளவுக்கு இந்தக் காடுகள் எரிந்து போகின்றன அல்லது எரிக்கப்படுகின்றன.

இப்படியான காட்டுத்தீக்கு விவசாயமே முக்கியமான காரணமாகச் சுட்டிக்காட்டப்படுவது வழக்கம். அறுவடைக்குப் பிறகு நிலத்தில் எஞ்சியிருக்கும் அடித்தட்டைகளைக் கொளுத்துவது, விவசாய நிலத் தேவைக்காக காட்டைக் கொளுத்துவது, கால்நடைப் பண்ணைகளை வளர்ப்பதற்காகக் காட்டை அழிப்பது போன்றவை இந்தக் கணக்கில் வரும். நாளடைவில் தொழில் திட்ட நோக்கங்களும், ரியல் எஸ்டேட் கணக்குகளும் இதன் பின்னணியில் சேரத் தொடங்கின. எஞ்சியிருக்கும் காடுகளையேனும் பாதுகாப்பது அரசினுடைய தலையாயக் கடமையாகக் கருதப்பட்டு, அதற்கான தீவிர நடவடிக்கைகளை அரசுகள் எடுத்துவரும் நிலையில்தான் அரசின் தலைமைப் பொறுப்பு நோக்கி நகர்பவர்களே காடுகளுக்கு எதிரான சிந்தனையாளர்களாக மாறுவதும், இதற்குப் பின் பெரும் வணிகக் கணக்குகள் இருப்பதும் புதிய அபாயமாக உருவெடுக்கலானது. இப்போதைய தீ பன்னாட்டு அளவிலான விவாதம் ஆகியிருப்பதே இந்தப் பின்னணியில்தான்.

ஏற்கெனவே 'தற்போதைய காட்டழிப்பு விகிதம் தொடருமானால் 2030ஆம் ஆண்டுக்குள் 27 வீதமான வனப்பரப்பை அமேசன் இழந்துவிடும்' என்று எச்சரித்திருந்தது ஐநாவின் உலக இயற்கை நிதியம். ஆனால், இப்போதைய நிலை வழக்கத்தைக் காட்டிலும் வேகமாகியிருக்கிறது. அமேசனில் இந்த ஆண்டில் இதுவரையிலான காலம் வரை 72 ஆயிரம் காட்டுத்தீச் சம்பவங்கள் ஏற்பட்டிருப்பதாகக் கூறுகிறார்கள். இது கடந்த ஆண்டைவிட 84 வீதம் அதிகம் என்பதுதான் தற்போதைய காட்டுத்தீயை அபாயகரமானதாக ஆக்குகிறது. ஓகஸ்ட் மாதத்தின் ஒரு நாளில் பிரேசிலின் அமேஸோனாஸ் மாகாணத்தில் ஏற்பட்ட காட்டுத்தீயின் எண்ணிக்கை கடந்த 15 ஆண்டுகளில் அதே நாளில் ஏற்பட்ட காட்டுத்தீயின் எண்ணிக்கையைவிட 700 வீதம் அதிகம் என்கிறார்கள். தற்போதைய காட்டுத்தீ ஓகஸ்ட் இரண்டாம் வாரத்தில் தொடங்கியது. இதற்கு மின்னல்தான் காரணம், வழக்கமான காட்டுத்தீதான் இது என்றெல்லாம் பிரேசில் அரசு பல சாக்குப்போக்குகளைக் கூறினாலும் உண்மையில் இது மனிதர்களால் ஏற்படுத்தப்பட்

**“தற்போதைய காட்டழிப்பு விகிதம் தொடருமானால் 2030ஆம் ஆண்டுக்குள் 27 வீதமான வனப்பரப்பை அமேசன் இழந்துவிடும்’ என்று எச்சரித்திருந்தது ஐநாவின் உலக இயற்கை நிதியம். ஆனால், இப்போதைய நிலை வழக்கத்தைக் காட்டிலும் வேகமாகியிருக்கிறது. அமேசனில் இந்த ஆண்டில் இதுவரையிலான காலம் வரை 72 ஆயிரம் காட்டுத்தீச் சம்பவங்கள் ஏற்பட்டிருப்பதாகக் கூறுகிறார்கள். இது கடந்த ஆண்டைவிட 84 வீதம் அதிகம் என்பதுதான் தற்போதைய காட்டுத்தீயை அபாயகரமானதாக ஆக்குகிறது.**

டதே. விவசாயிகளும் நில ஆக்கிரமிப்பாளர்களும் சேர்ந்து பெரும் திட்டம் தீட்டியிருந்தனர். ஓகஸ்ட் 10 அன்று ‘தீ நாள்’ கடைப்பிடிப்பதுதான் அந்தத் திட்டம். பிரேசிலின் சுற்றுச்சூழல் துறை அதிகாரிகள் இதுகுறித்து அரசுக்கு எச்சரிக்கை அனுப்பியபோதும் அரசு சுதாரித்துக்கொள்ளவில்லை. அதன் விளைவுதான் இப்போதைய பெரும் போக்குக் காட்டுத்தீ.

**பிரேசில் அதிபரும் அமேசனும்**

அமேசன் காடுகளின் செயற்கைக்கோள் புகைப்படங்களைப் பார்த்தால் எங்கெங்கிலும் புகையே காணப்படுகிறது.

காட்டுத்தீ மிக உக்கிரமாக எரிந்துகொண்டிருக்கும் அமேஸோனாஸ் மாகாணத்திலிருந்து சுமார் 3 ஆயிரம்கிலோமீற்றர்தொலைவில் இருக்கும்சாவ்பௌலோ மாநகர் வரை புகை சென்றிருக்கிறது. கிட்டத்தட்ட 32 லட்சம் சதுர கிலோமீற்றர் பரப்பளவுக்குப் புகை சூழ்ந்திருக்கிறது என்கிறார்கள். இதனால் கோடிக்கணக்கானோர் சுவாசப் பிரச்சினைகளுக்கு ஆளாகும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது. நாம் மேலே எறிந்த கத்தி நம்த்லை மேலேயே திரும்பி வந்து விழும் கதைதான்.

காட்டுத்தீயின் பின்னணியில் பிரேசில் அதிபர் ஜெய்ர் போல்சோனரோ கடும் விமர்சனத்துக்குள்ளாகியிருப்பதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. தீவிர வலதுசாரியான போல்சோனரோ ‘வளர்ச்சிக்குத்தான் முதலிடம் என்றும் அதற்காக தேவைப்படும் அளவுக்குக் காட்டை நியாயமான அளவில் அழித்துக்கொள்ளலாம்’ என்றும் பல தருணங்களில் கூறியவர். அவர் சுற்றுச்சூழல் செயல்பாட்டாளர்களை வெறுப்பவர். எவ்வளவோ கெடுபிடிகள் இருந்தாலும் காட்டை அழிப்போர் மும்முரமாகத் தங்கள் வேலையைக் காட்டிக்கொண்டிருக்கும் சூழலில், இப்படிப்பட்ட ஒரு அதிபர் அவர்களுக்குக் கிடைத்தால் சும்மா இருப்பார்களா!

ஜனவரியில் போல்சோனரோ பதவியேற்ற பிறகு அமேசான் காடு அழிக்கப்படுவது தீவிரமாகலானது. கூடவே, சட்ட விரோதக் கும்பல்கள் தங்க வேட்டையில் ஈடுபடும்போது அந்தக் காடுகளில் உள்ள பழங்குடிகள் பிரதேசத்தில் ஊடுருவி, அவர்களைக் கொல்வதும் அதிகரிக்கலானது. ‘இந்த அரசு தங்களுடைய அடாவடித்தனத்தைக் கண்டுகொள்ளாது என்கிற எண்ணத்தை அந்தக் கும்பல்களிடம் உருவாக்கிவிட்டார் போல்சோனரோ. அதுதான் உள்ளதிலேயே மோசம்’ என்கிறார்கள்.

போல்சோனரோவை விமர்சனங்கள் நேர் எதிராகத் திருப்பிவிட்டிருப்பதுபோலத்தான் தெரிகிறது. அரசும் நானும் எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கிறோம் என்று பேசுவதைவிட எல்லாவற்றையும் மறுப்பதிலும், எதிர்த்தரப்புகளைத் தாக்குவதிலும்தான் மூர்க்கம் காட்டி வருகிறார். பன்னாட்டுச் சமூகம் அமேசன் காடுகள் மீது அக்கறை காட்டுவதைக்கூட அவரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அமேசன் காட்டுத்தீயைப் பற்றி பிரெஞ்சு அதிபர் மக்ரோன் கவலை தெரிவித்திருப்பதற்கு பதிலடியாக ‘நாட்ர டாம் தேவாலயத்தை உங்களால் தீயிடமிருந்து காப்பாற்ற முடியவில்லை. எங்கள் விவகாரத்தில் தலையிட வேண்டாம்’ என்று போல்சோனரோ பேசியிருப்பதை ஓர் உதாரணமாகச் சொல்லலாம். இதைக் காட்டிலும் மோசம், பிரேசில் மக்களையும் இப்போது அமேசனுக்கு எதிர்நிலை சிந்தனை நோக்கி அவரும் அவருடைய கட்சியும் திருப்ப முனைந்துவருவது. ‘அமேசன் காடுகள் அழிவுக்குத் தேவையில்லாமல் உலக மக்களால் குற்றம்சாட்டப்படுகிறோம்’ என்ற உணர்வு இப்போது மெல்ல பிரேசில் மக்களிடம் ஊடுருவ ஆரம்பித்திருக்கிறது. அமேசன் காட்டைப் பாதுகாப்பதற்காக ‘ஜி7’ நாடுகள் அளிக்க முன்வந்த சுமார் 300 கோடி ரூபா நிதியையும் நிராகரித்துவிட்டார் போல்சோனரோ. கூடவே, அமேசன் ஒன்றும் அவ்வளவு முக்கியமானதல்ல என்று பேசும் பரப்புரைகளும் அவிழ்த்துவிடப்பட்டிருக்கின்றன. இதற்கென்றே காத்திருக்கும் சந்தைச் சிந்தனையாளர்களும் நிறுவனங்களும் அவற்றைப் பரப்புவதில் உற்சாகமாகியிருக்கிறார்கள்.

**பொலிவியாவிலும் தீ**

பிரேசிலில் உள்ள அமேசான் காடுகள் மட்டுமல்ல, பொலிவியாவில் இருப்பதும் அமேசன் காடுகளுக்கு உட்பட்டதுமான சிக்விட்டானோ காடுகளும் பற்றியெரிந்துகொண்டிருக்கின்றன. கடந்த திங்கள்கிழமை மட்டும் இந்தக் காடுகளில் 2 ஆயிரத்து 700 இடங்களுக்கும் மேலே பற்றியெரிந்துகொண்டிருக்கின்றன. இந்தக் காட்டுத்தீயின் மூல காரணமாகக் காட்டெரிப்பு வேளாண் முறையையே சூழலியலாளர்கள் கூறுகிறார்கள். ஒரு மாதத்துக்கு முன்புதான் காட்டெரிப்பு வேளாண்மையை அனுமதிக்கும் சட்டமொன்று பொலிவியாவில் கொண்டுவரப்பட்டதையும் அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். ‘பெரும்பாலும் புலம்பெயர்ந்த சிறுவிவசாயிகள்தான் இந்தக் காட்டெரிப்பு வேளாண்மையை மேற்கொள்கிறார்கள்’ என்ற குரலும் கேட்கிறது.

சிலி, ஆர்ஜென்ரீனா, பிரான்ஸ், ஸ்பெய்ன், ரஷ்யா போன்ற நாடுகளைச் சேர்ந்த தீயணைப்பு வீரர்கள் பொலிவிய காட்டுத் தீயைக் கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள். காட்டுத்தீயை அணைப்பதில் பொலிவியாவுக்கு உதவ ஜி7 நாடுகள் முன்வந்திருக்கின்றன. பிரேசில் அதிபரைப் போலவே பொலிவிய அதிபர் ஈவோ மொராலிஸும் ஆரம்பத்தில் ஜி7 நாடுகளின் உதவிகளை மறுத்துவிட்டார். ஆனால், தற்போது ‘எந்த உதவியையும் நாங்கள் பெறத் தயார்’ என்று அறிவித்திருக்கிறார். இன்னும் மேலே போய் வெளிநாட்டு உதவிகளை ஒருங்கிணைப்பதற்காகத் தனது தேர்தல் பரப்புரைகளைத் தற்காலிகமாக நிறுத்திவைத்திருக்கிறார்.

இயற்கையில் எதையுமே பிரிக்க முடியாது. எங்கோ ஏற்படும் சிறு சலனம்கூட இன்னொரு மூலையில் ஒரு பாதிப்பையோ தாக்கத்தையோ ஏற்படுத்தும். அமேசான் காடுகளின் அழிவும் அப்படித்தான். உலகிலுள்ள ஒக்சிசனில் 20 வீதமானவை இந்தக் காடுகளால் உற்பத்திசெய்யப்படுகிறது என்றும் அப்படியல்ல வெறும் 6 வீத ஒக்சிசனை மட்டுமே அமேசன் வெளியிடுகிறது. அந்தக் காட்டை அழித்து உண்டாக்கப்படும் பயிர்களும் அதே அளவு ஒக்சிசனை உற்பத்திசெய்ய வல்லவை என்றும் ஒரு பெரிய விவாதம் இதையொட்டி நடக்கிறது. ஆனால், அமேசனின் முக்கியத்துவம் ஒக்சிசன் சம்பந்தப்பட்டது மட்டும் அல்ல. காடுகள்தான் மழைக்கான, நதிகளுக்கான, உயிர்ப்பன்மைக்கான ஆதாரம், ஒருபோதும் காடுகளுக்கு விவசாய நிலங்கள் ஈடாகாது. எந்த வகையிலும் அமேசன் காடுகளின் இழப்பை மனித குலத்தால் ஈடுசெய்ய முடியாது என்றும் சுட்டுகிறார்கள் சுற்றுச்சூழல் செயல்பாட்டாளர்கள். அமேசன் என்பது இங்கே ஒரு பெயர்ச் சொல்தான். தீ அல்ல. நம்முடைய சுயநலமும் பேராசையும் அக்கறையின்மையுமே காடுகளை அழிக்கும் முதன்மைத் தீ. காடுகளின் இழப்பை எதன் பொருட்டும் மனித குலத்தால் ஈடுசெய்ய முடியாது!

*நன்றி: இந்து தமிழ்திசை*



## ஆசிரியருக்கான கடிதம்

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வேடிக்கை பார்க்கிறார்களா?

உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்பு நடந்து இரண்டு மாதங்களுக்குப் பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் வசித்துவரும் நல்லூர் வீடு படையினரின் சோதனைக்கு உள்ளானது. நாட்டில் 225 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ள நிலையில் சிறீதரனின் வீடு மட்டும் சோதனைக்கு உள்ளானது. இந்த விடயத்தில் கூட்டமைப்பினர் எவரும் வாய் திறக்கவில்லை. இந்த நிலையில் வட்டக்கச்சி ஆறுமுக வீதியில் இருக்கும் சிறீதரனின் காணியில் கடந்த 21ஆம் திகதி படையினரின் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்த விடயத்திலும் கூட்டமைப்பினர் மௌனம் காத்தனர். அவர் பயணித்த வாகனத்துக்குத் துப்பாக்கிச் சூடு நடந்தபோதும் இதே நிலைதான் இருந்தது. கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஐயாவோ தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசாவோ வலுவான கண்டனங்களைப் பதிவுசெய்யவில்லை. எதுவாக இருந்தாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இத்தன்மை தமிழ் மக்களுக்கு நன்மை தரப் போவதில்லை. இவர்களின் செயல் விக்னேஸ்வரனின் செயலுக்கு ஒப்பானதாகவே உள்ளது. அதுமட்டுமல்ல இவர்களின் செயல் கொலைப்படையினருக்கு ஊக்கமளிப்பதாகவும் அமையும். சிந்திப்பார்களா?.

*-ப.யேசுபாதம்*

**வாசகர்களே!**

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றனவற்றைத் தவறாது குறிப்பிட்டு, அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்படுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்படாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.

# கழிவு அகற்றப்படாமையால் பெரும் சுகாதார சீர்கேடுகள்

*கச்சாய், தம்புத்தோட்டம் மக்கள் விசனம்*

*சாவகச்சேரி - கச்சாய் வீதியில் தம்புத்தோட்டம் பகுதியில் கழிவுகளை அகற்றுவதில் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் கூறுகின்றனர்.*

அந்தப் பகுதிக்கு கழிவகற்றல் வாகனம் வருவதில்லை என்றும், அதனால் வீதிகளில் கழிவுகள் வீசப்படுகின்றன என்றும் தெரிவிக்கும் மக்கள், வீதியில் வீசப்படும் கழிவுகளால் பெரும் சுகாதாரச் சீர்கேடுகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது என்றும் சுட்டிக்காட்டுகின்றனர்.

கஞ்சாய் வீதியில் கழிவகற்றலுக்கு வரும் வாகனம் குறிப்பட்ட அளவு தூரத்துடன் திரும்பி விடுகின்றது என்றும், தம்புத்தோட்டம் பகுதிக்கு கழிவகற்றல் வாகனம் வருவதில்லை என்றும் அவர்கள் குற்றஞ் சாட்டுகின்றனர்.

மழைகாலம் ஆரம்பித்தால் வீதியோரத்தில் காணப்படும் கழிவுகளால் பெரும் சீர்கேடுகள் ஏற்படும் என்றும், வீதியால் நடந்து செல்ல முடியாத நிலமை ஏற்படும் என்றும் சுட்டிக்காட்டும் மக்கள் இது தொடர்பாக உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வாரத்தில் ஒரு நாளாவது அந்தப் பகுதிக்குக் கழிவகற்றும் வாகனம் வருவதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்றும், அவ்வாறு கழிவகற்றப்பட்டால் வீதியோரங்களில் கழிவுகளை வீச வேண்டிய நிலமை ஏற்படாது என்றும் அந்தப் பகுதி மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அந்த இடங்களில் கழிவுகள் வீசப்படுகின்றன என்பது தொடர்பில் எமக்கு இதுவரை மக்கள் அறியத்தரவில்லை. மாறி மாறி ஒவ்வொரு பிரதேசத்துக்கும் எமது கழிவகற்றல் வாகனம் சென்று வீதியில் போடப்பட்டுள்ள கழிவுகளை அகற்றுகின்றது. அவ்வாறு இருக்கும்போது ஒரு இடத்தில் கழிவகற்றாது விடமுடியாது. அங்கு கழிவுகள் போடப்பட்டிருந்தால், விசாரித்து நாளை (இன்று) அதை அகற்றுவோம் என்று சாவகச்சேரி பிரதேச சபையின் தவிசாளர் வாமதேவன் தெரிவித்தார். (எ-21)



## “சுவர்களற்ற ஒரு நகரம்” கவிதை நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,செப்.2

யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி மாணவி அகிலினி எழுதிய “சுவர்களற்ற ஒரு நகரம்” என்ற ஆங்கிலக் கவிதை நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வு யாழ்ப்பாணம் பொதுநூலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் ஊடகவியலாளர் துளசி முத்துலிங்கம் தலைமையில் இடம் பெற்றது. வரவேற்புரையை நூலாசிரியர் அகிலினியின் தாயார் ரஞ்சுதமலர் வழங்கினார். ஆசியுரையை எழுத்தாளர் அருட்பணி அன்புராசா அடிகளார் வழங்கினார்.

தலைமை உரையைத் தொடர்ந்து பெண் படைப்பாளி வெற்றிச்செல்வி வெளியீட்டுரையை நிகழ்த்தினார்.

நூல் ஆய்வுரைகளை இலக்கிய விமர்சகர் கே.எஸ். சிவகுமாரன் மற்றும் இலங்கை வங்கியின் ஊர்காவற்றுறை கிளை முகாமையாளர் ரேனோல்ட் எட்வேர்ட் ஆகியோர் ஆற்றினர். (ஜ159,105)

# சட்டவிரோதமான மீன்பிடியை உடன் தடை செய்ய வேண்டும்

*சுண்டிக்குளம் கடற்றொழிலாளர் சங்கம் அரச தலைவருக்கு மனு*

யாழ்ப்பாணம், செப். 2

யாழ்ப்பாணம் வடமராட்சிப் பகுதிகளில் தென்னிலங்கை மீனவர்களின் அத்துமீறிய மற்றும் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்தவும், அந்தப் பகுதி மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கவும் வலியுறுத்தி அரச தலைவருக்கு மனு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி சுண்டிக்குளம் கடற்றொழிலாளர் கூட்டுவுச் சங்கம் இந்த மனுவைக் கையளித்தது.

குடிதண்ணீர்த் திட்டம் ஒன்றைத் திறந்து வைக்க மைத்திரிபால சிறிசேன கடந்த வெள்ளிக்கிழமை வடமராட்சிக்குச் சென்றிருந்தார். அங்கு அரச தலைவரின் செயலரிடம் இந்த மனு கையளிக்கப்பட்டது.

அதில்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

எமது சங்க எல்லைக்குட்பட்ட பகுதிகளிலும் வடமராட்சி கிழக்கு, வடமராட்சிப் பகுதிகளிலும் தொடர்ச்சியாக தென்னிலங்கை மீனவர்கள் அத்துமீறி, சட்டவிரோதமாக டைனமைட், சுருக்குவலை, மிகைமொனிப் பாய்ச்சல், உள்ளூர் மீனவர்களின் வலைகள்சேதப்படுத்தல், இரவில் அட்டை பிடித்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். இதனால்உள்ளூர் மீனவர்கள் தொழில் புரிய முடியாமல் வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர்.

கடந்தவருடம் யாழ்ப்பாண மாவட்டத்தில் சில கரையோரப் பகுதிகளில் தென்பகுதி அட்டைத் தொழிலாளர்கள் கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்தின் ஆதரவுடன் வடமராட்சி கிழக்கு மருதங்கேணியிலும், மாமுனை, செம்பியன்பற்று, குடாரப்பு, நாகர்கோவில் பகுதிகளிலும் வடமராட்சி கற்கோவளப் பகுதியிலும் குடியிருந்து தொழிலில் ஈடுபட்டு வந்துள்ளனர். இதனை எமது மக்களும் மக்கள் அமைப்புக்களும் ஒன்றிணைந்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டும் மேலும் தொடர் போராட்டங்களினாலும் இந்த விடயத்தில் கவனம் செலுத்திய மருதங்கேணி பிரதேசசெயலர் கிளிநொச்சி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தார். நீதிமன்ற உத்தரவின் பேரில் தென்னிலங்கை மீனவர்கள் வெளியேற்றப்பட்டார் கள்.

முல்லைத்தீவு கரைத்துரைப்பற்று பிரதேச செயலகத்துக்குட்பட்ட சாலைமாத்தளன் பகுதிகளில் பலநூற்றுக் கணக்கான படகுகளில் ஆயிரக்கணக்கானோர் தங்கியிருந்து யாழ்ப்பாண மாவட்ட மீனவர் சமூகங்களின் வாழ்வாதாரங்களை முழுமையாக அழித்து வருகின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக கடந்த ஜூன் 26 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டச்செயலரிடம் எமது பிரச்சினைகள் அடங்கிய மனு ஒன்றை வழங்கினோம். இதுவரை முடிவு எமக்கு கிடைக்க வில்லை. இந்த விடயம் தொடர்பாக கடந்த ஜூலை 24 ஆம் திகதி வடக்குமாகாண ஆளுநருக்கு மனுக் கையளித்துள்ளோம். இது தொடர்பாக கடந்த ஓகஸ்ட் 9ஆம் திகதி ஆளுநரின் செயலரிடம் மேலதிக விளக்கம் தெளிவுபடுத்தப்பட்டது. எனினும் இதுவரை ஆக்கபூர்வமாக எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

இவ்வாறு அரச அதிகாரிகள் செயற்படுவது ஒருதலைப்பட்சமாக நடந்து கொள்வதாக உள்ளது. எமது வாழ்வாதார விடயத்தில் அதிகாரிகள் கரிசனையுடன் செயற்படுவதில்லை. இதனால் எமது மக்கள் வாழ்வாதாரத்தை இழந்துள்ளார்கள். எமது மக்களின் அடிப்படை உரிமைகளும் மீறப்பட்டு ள்ளன. எனவே அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன மேற்குறிப்பிடப்பட்ட விடயங்களை கருத்திற்கொண்டு எமது மக்களையும் அவர்களின் வாழ்வாதாரத்துக்குரிய தொழிலையும் பூர்வீகக் கடல் வளங்களையும், பாதுகாக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு எமது மக்கள், தமது உரிமையுடன் வாழ ஆவன செய்து வழி சமைக்க வேண்டுகின்றோம் - என்றுள்ளது. (கு)

## வருடாந்த பெருந்திருவிழா

யாழ்ப்பாணம்,செப்.2

சாவகச்சேரி நகர் செருக்கல்பதி சித்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா நாளை மறுதினம் புதன் கிழமை முற்பகல் 10.30மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த் திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (க-9)

## எழுதுமட்டுவாழ் குறுக்கு வீதி கொங்கிறீற் வீதியாக மாறும்

கொடிகாமம், செப்.2

தென்மராட்சி பிரதேசத்தில் எழுதுமட்டுவாழ் இரண்டாம் குறுக்கு வீதி கொங்கிறீற் வீதியாகச் சீரமைக்கப்படவுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் சிபார்சில், பெருந்தெருக்கள் அமைச்சின் 30 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் வீதி சீரமைக்கப்படவுள்ளது. வீதி அபிவிருத்தி அதிகார சபையால் அதற்கான வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப் படவுள்ளன என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஈ சரவணபவனின் இணைப்பாளர் செ.பிரதாப் தெரிவித்துள்ளார். (க-159)



போதைக்கு எதிரான விழிப்புணர்வு நிகழ்வு உடுத்துறை பாரதி விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. உடுத்துறை மகா வித்தியாலய மாணவர்கள் விழிப்புணர்வுச் செயற்பாடுகளில் ஈடுபட்டனர். (க-70)



## ‘நல்லூர் வரவேற்கின்றது’ வளைவுக்கு அடிக்கல்

யாழ்ப்பாணம் செம்மணி வீதியில் ‘நல்லூர் வரவேற்கின்றது’ எனும் வளைவு அமைப்பதற்கான அடிக்கல் நேற்று முன்தினம் காலை நடப்பட்டது. வளைவுக்கான அடிக்கல்லை கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் நட்டார்.

நிகழ்வில், யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் இமானுவல் ஆனல்ட், ஆணையாளர் த.ஜெயசீலன், நல்லூர், கோப்பாய் பிரதேச செயலர்கள் மற்றும் சபைத் தவிசாளர்கள் கலந்து கொண்டனர். நிகழ்வின் கிரியை வழிபாடுகளை நல்லூர் ஆலய பிரதமகுரு வைகுந்தவாசக் குருக்கள் நிகழ்த்தினார்.

ஏ-9 முதன்மை வீதியை இணைக்கும் செம்மணி வீதியில், 6 மில்லியன் ரூபா நிதியில் இந்த வளைவு அமைக்கப்படவுள்ளது. குறித்த வளைவில், நல்லூர் ஆலயத்தை அடையாளப்படுத்தும் சிற்பங்களும் வடிவமைக்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கரி1)

# வடக்கில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது டெங்கு

**கடந்த காலங்களில் வடக்கில் டெங்குத் தொற்றால் பலர் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த சில மாதங்களாக அந்த எண்ணிக்கை பல மடங்கு குறைக்கப்பட்டு தற்போது சொற்ப எண்ணிக்கையானவர்களே பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.**

வடக்கு மாகாண சுகாதாரப் பிரிவினரின் விடா முயற்சியும், வடக்கு மக்கள் வழங்கிய ஒத்துழைப்புமே டெங்குத் தொற்றுக்குறைந்தமைக்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு மாகாணத்தில், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில், கடந்த மூன்று மாதங்களாக சொற்ப எண்ணிக்கையான டெங்கு நோயாளர்களே இனங்காணப்பட்டுள்ளனர். யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த ஜனவரி மாதம் 900 பேர் டெங்குத் தொற்றால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த ஓகஸ்ட் மாதம் 91 பேர் மாத்திரமே டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

அதே போன்று கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த ஜனவரி மாதம் 34 பேர் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் இந்த ஓகஸ்ட் மாதம் 3 பேர் மாத்திரமே பாதிக்கப்பட்டுள்ளனர். மன்னாரில் கடந்த ஜனவரி மாதம் 27 பேர் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த மாதம் இரண்டு பேரும், வவுனியாவில் 41 பேர் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் 17 பேரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். தற்போது டெங்குத் தொற்றுக் குறைந்துள்ளபோதும் இனிவரும் காலங்களில் மழை பெய்யவுள்ளதால் டெங்குநோய் பெருகும் அபாயம் உள்ளது என்றும், அதற்கான நடவடிக்கைகளையும் சுகாதாரப் பிரிவினர் எடுத்தாக வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (எ-21)



## காரைநகர் பகுதி வயலில் வெடிகுண்டுகள் மீட்கப்பட்டன

யாழ்ப்பாணம், பெப். 2

யாழ்ப்பாணம் கரைநகர்ப் பகுதியில் நெல் வயல் ஒன்றில் 2 வெடிகுண்டுகள் கடற்படையினரால் கடந்த வெள்ளிக்கிழமை மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வடக்கு கடற்படைக் கட்டளைப்பிரிவினருக்குக் கிடைத்த தகவல்களின் படி, காரைநகர் பகுதியில் நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போதே குறித்த 2 வெடிகுண்டுகளும் கடற்படையால் மீட்கப்பட்டுள்ளன. கடற்படை வெடிகுண்டு அகற்றும் பிரிவினரால் அவை செயலிழக்க வைக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (கு)



## களிமண் வடிகட்டி உபகரணங்கள் வழங்கப்பட்டன

கொடிகாமம்,செப்.2

பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு வடிவமைக்கப்பட்ட களிமண் வடிகட்டி உபகரணம் இரண்டு கையளிக்கப்பட்டன.

'சிறுநீரகத்தை உயிராய்க் காப்போம் ஆரோக்கியமானதொரு நல்வாழ்வைப் பெறுவோம்' என்ற கருத்திட்டத்துக்கு அமைய மருத்துவமனை அத்தியட்சகரிடம் நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டன.

சிறுநீரக சுத்திகரிப்பு பிரிவு மற்றும் அவசர சிகிச்சைப்பிரிவுக்கு பாதுகாப்பான குடிதண்ணீரை வழங்கும் நோக்கில் தொழிற்துறை தொழில்நுட்ப நிறுவனம் இந்த உபகரணங்களை வடிவமைத்து வழங்கியுள்ளது. (ஜ-159)



## குழாய்க்கு வெட்டிய குழியால் கோவில் சுவர் இடிந்து வீழ்ந்தது

சாவகச்சேரி,செப்.2

தண்ணீர்க் குழாய் பொருத்த வெட்டிய குழியில் கோவில் சுவர் இடிந்து வீழ்ந்துள்ளது.

இந்தச் சம்பவம் சாவகச்சேரி கச்சாய் வீதியில் நேற்று இடம்பெற்றது.

நீர் வழங்கல் அதிகார சபையால் தென்மராட்சி பிரதேசத்தில் குழாய் மூலம் குடி தண்ணீர் வழங்குவதற்கான குழாய்கள் பொருத்தும் பணிகள் வீதிகள் தோறும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் நேற்று கச்சாய் சாலையில் குழாய் பொருத்துவதற்காக கனரக வாகனத்தால் குழி தோண்டிய போது சாவகச்சேரி ஞானவீரபத்திரர் ஆலயத்தின் 40 அடி நீளமான மதில் இடிந்து குழிக்குள் வீழ்ந்ததாக தெரிவிக்கப்பட்டது. மதிலை அகற்றும் பணிகள் இடம்பெற்றுவருகின்றன. (ஜ-9)



## கமலாசனி வித்தியாலயத்தில் வீட்டுத் தோட்டம் ஆரம்பிப்பு

கொடிகாமம், செப் 2

பாடசாலை மட்டத்தில் வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கையை ஊக்குவிக்கும் நோக்குடன், விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயத்தில் பயன்தரு மரக்கறிப் பயிர்ச் செய்கை கடந்த 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது. தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கையை ஆரம்பித்து வைத்தார்.

ஆரம்ப நிகழ்வில் தென்மராட்சி வலயக்கல்வி விவசாயப் பாட ஆசிரிய ஆலோசகர் செ.கிருபாகரன், சாவகச்சேரி பிரதேச சபையின் உபதவிசாளர் செ.மயூரன் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

இரசாயனமற்ற மரக்கறிகளைப் பெறும் நோக்குடன், இந்தச் செயற்றிட்டம் வித்தியாலயத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-159)

## திருமண வீட்டில் கொள்ளை; மூவருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஓக. 2

திருமண விழாவின் காணொலிப்பதிவைக் காண்பித்து மணமகளின் தாலி உட்பட வெளிநாட்டிலிருந்து வருகை தந்திருந்த உறவினர்களின் நகைகள் என 60 பவுண் தங்க நகைகளை வீட்டினுள் புகுந்த கொள்ளையடித்துக் கொண்டு தப்பித்தனர் என்ற குற்றச்சாட்டில் மூன்று பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நவாலி தெற்கு கொத்துக்கட்டி வீதியில் கடந்த 29ஆம் திகதி அதிகாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் இருவர் மீது வாள் வெட்டுத் தாக்குதலும் நடத்தப்பட்டது.

அதிகாலை 1.30 மணியளவில் 5 பேர் கொண்ட கொள்ளைக்கும்பல் வீட்டின் முன்வாயில் வழியாகவும் சமையல் அறையின் மேற்பகுதி வழியாகவும் வீட்டுக்குள் நுழைந்தது. வீட்டில் இருந்த பெரிய தந்தை வழிமுறையான ஒருவரைக் கட்டிவைத்துவிட்டு, நடைபெற்ற திருமண நிகழ்வின் காணொலிப்பதிவைக் காண்பித்து அதில் அணிந்திருந்த தங்க ஆபரணங்களைத் தருமாறு கொள்ளைக் கும்பல் கத்தி முனையில் அங்கிருந்தவர்களை அச்சுறுத்தியது.

கும்பலின் அச்சுறுத்தலுக்கு அடிபணியாததால் வெளிநாட்டிலிருந்து வந்தவர் மீது கும்பல் வாளால் வெட்டியதுடன் தாக்குதலையும் நடத்தியது. நிலமையை உணர்ந்த பெண்ணொருவர் சகல நகைகளையும் எடுத்துத் தருவதாகக் கூறிய நிலையில் அந்தக் கும்பல் ஒவ்வொரு இடமாகத் தேடி அனைத்து நகைகளையும் பெற்றுக் கொண்டனர். கும்பலின் செயற்பாடு தொடர்பில் திருமண வீட்டின் மணமகளால் அயல்வீட்டாருக்கு அலைபேசி மூலம் குறுந்தகவல் அனுப்பப்பட்டது. அயல்வீட்டுக்காரர் ஒருவர் ஏனையவர்களுக்கு தகவல் வழங்கியுள்ளார். இதனை அறிந்த கொள்ளைக் கும்பல் வெளியில் நின்ற அயல்வீட்டுக்கார நபரை வெட்டிக்காயப்படுத்தி விட்டுத் தப்பிச் சென்றது.

இந்தச் சம்பவத்தில் வீட்டிலிருந்தவர்களின் 60 பவுணுக்கும் மேற்பட்ட தங்க நகைகள் கொள்ளையடிக்கப்பட்டிருந்தன. வெளிநாட்டிலிருந்து வந்தவர்களின் கடவுச்சீட்டுக்களும் கைப்பைகளும் கொள்ளையடிக்கப்பட்டிருந்தன.

சம்பவம் தொடர்பில் மானிப்பாய்ப் பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கப்பட்டதையடுத்துப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர்.

சங்கானை, கட்டுடை மற்றும் நவாலியைச் சேர்ந்த மூவரை மானிப்பாய் பொலிஸார் சந்தேகத்தின்பேரில் கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்தனர். அவர்கள் மூவரும் மல்லாகம் நீதிவானிடம் நேற்றுமுன்தினம் முற்படுத்தப்பட்டனர். சந்தேகநபர்கள் மூவருடன் மேலும் சிலரைக் கைது செய்ய வேண்டும் என்று பொலிஸார் நீதிவானிடம் தெரிவித்தனர். அதனடிப்படையில் சந்தேகநபர்கள் மூவரையும் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்க மல்லாகம் நீதிவான் உத்தரவிட்டார். (21)

## சுகாதார பரிசோதகர்கள் 30 பேருக்குப் பயிற்சி

சாவகச்சேரி,செப்.2

யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் 30 பேருக்கு சுகாதாரத்தை மேம்படுத்தலுக்கான பயிற்சி வகுப்பு கடந்த 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொழும்பு நெஸ்லே பால்மா நிறுவனத்தில் நடத்தப்பட்டது.

உற்பத்தி, களஞ்சியப்படுத்தல், விநியோகம் தொடர்பான உணவு பாதுகாப்பு கழிவு முகாமைத்துவம் மற்றும் தொழிலாளர் சுகாதாரம் போன்ற விடயங்கள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டன.

இலங்கை சுகாதார பரிசோதகர் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்தப் பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. (க-9)

## வருடாந்தத் திருவிழா

யாழ்ப்பாணம்,செப்.2

வடலியடைப்பு புதுநாளை சிறி சித்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா இன்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

12 தினங்கள் நடைபெறும் திருவிழாக்களில் எதிர்வரும் 9 ஆம் திகதி திங்கட்கிழமை வேட்டைத் திருவிழாவும், எதிர்வரும் 11 ஆம் திகதி புதன்கிழமை சப்பரத் திருவிழாவும், எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (க-115)

## ஆனையூர் அடைக்கலநாயகிக்கு கொடியேறியது

யாழ்ப்பாணம், செப். 2

ஆனைக்கோட்டை, அடைக்கலநாயகி ஆலய வருடாந்தத் திருவிழாவுக்கான கொடியேற்றம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

நவ நாள் வழிபாடுகளைத் தொடர்ந்து எதிர்வரும் 7ஆம் திகதி நற்கருணைப் பவனியும் எதிர்வரும் 8ஆம் திகதி திருவிழாத் திருப்பலியும் இடம்பெறவுள்ளன. (ம)


# கிளிநொச்சியில் ஈனச் செயல் உயிருக்குப் போராடி மடிந்த பசு

யாழ்ப்பாணம் செப். 2

இறைச்சிக்காகவும், வேறு எதற்கும் பசுமாட்டைக் கொல்லக் கூடாது, வெட்டவே கூடாது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போதிலும் கிளிநொச்சியில் பசு ஒன்று கோரமான முறையில் வெட்டப்பட்டுக் கொல்லப்பட்டுள்ளமை மக்களை முகம் சுழிக்கச் செய்துள்ளது.

கிளிநொச்சி, உதயநகர் பகுதியில் முதியவர் ஒருவருக்கு வாழ்வாதாரத்துக்காக வழங்கப்பட்ட பசுவே இவ்வாறு வெட்டப்பட்டுள்ளது.

தொண்டு நிறுவனம் ஒன்று உதயநகரைச் சேர்ந்த முதியவர் ஒருவருக்கு வாழ்வாதாரத்துக்காக பசுவை வழங்கியிருந்தது. பசுவின் வயிற்றுப் பகுதி கிழிக்கப்பட்ட நிலையில் அதனுடைய குடல் வெளியேறி அந்தப் பசு நீண்ட நேரம்



உயிருக்குப் போராடியது. கால்நடை மருத்துவரை வரவழைத்து பசுவைக் காப்பாற்ற முயற்சிகள் எடுக்கப்பட்டபோதும் அது பயனளிக்கவில்லை. நீண்ட நேரத்தின் பின்னர் பசு இறந்தது. எனினும் பசுவை வெட்டியது யார் என்பது கண்டறியப்படவில்லை. பசுவைக் கொல்லக் கூடாது, வெட்டவே கூடாது என்று கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையில் தீர்மானம்நிறைவேற்றப்பட்டுள்ளது. அதையும் மீறி இவ்வாறு நடந்துள்ளமை மக்களை வேதனைக்குள் தள்ளியுள்ளது. (எ-21)

---

### இறைச்சியை கொண்டுசென்ற இருவருக்குத் தண்டம்

சட்டவிரோதமாக 48 கிலோகிராம் மாட்டிறைச்சியை முச்சக்கர வண்டியில் கொண்டு சென்ற இருவருக்குத் தலா 15ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

கடந்த ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி சட்டவிரோதமான முறையில் குருநகரிலுள்ள கடைக்கு 48 கிலோகிராம் மாட்டிறைச்சியை முச்சக்கர வண்டியில் ஏற்றிச் சென்ற இருவர் அங்கு கடமையில் நின்ற பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களான அ.சுரேஷ்குமார், பா.சஞ்சீவன் ஆகியோரிடம் மாட்டிக் கொண்டனர்.

இறைச்சியைக் கைப்பற்றி யாழ்ப்பாண நீதிமன்றில் ஒப்படைத்த பரிசோதகர்கள் இருவருக்கும் எதிராக மன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர். வழக்கை விசாரணை செய்த நீதிவான் இருவரையும் தலா ரூபா 50 ஆயிரம் சரீரப் பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டுமேல்விசாரணையை ஒத்திவைத்திருந்தார்.

இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது இருவரும் குற்றத்தை ஏற்றுக் கொண்டனர். அதனையடுத்து இருவருக்கும் தலா 15ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (கு-115)

---

### கசிப்பு வைத்திருந்தாரென பளையில் ஒருவர் கைது

8 போத்தல் கசிப்பு பானத்தை உடமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

பளைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வண்ணாங்கேணி வடக்குப் பகுதியில் இரு தினங்களுக்கு முன்னர் கசிப்பு விற்பனை தொடர்பாகப் பொலிஸாருக்குக் கிடைத்த ரகசிய தகவலையடுத்து பொலிஸார் தேடுதலில் ஈடுபட்டனர்.

அதன்போதே 8 போத்தல்கள் கசிப்பு மீட்கப்பட்டன. சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளின் பின்னர் பொலிஸ் பிணை வழங்கப்பட்டுள்ளது. அவருக்குஎதிராகநீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (கு-6)

---



### கள்ளிக்குளம் முன்பள்ளிக்கு நன்கொடையாளர்கள் பயணம்

வவுனியா.செப்.2


வவுனியா, கள்ளிக்குளம் நாவலர் முன்பள்ளிக்கு தொடர்ந்து ஆதரவு வழங்கி வரும், கோண்டாவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கக் கனடாக் கிளை பிரதிநிதிகள் கடந்த 28 ஆம் திகதி புதன்கிழமை களப்பயணம் மேற்கொண்டனர்.

அங்கு பிரதிநிதிகளுக்கும், முன்பள்ளிச் சமூகத்தினருக்கும் இடையில் கலந்துரையாடல் இடம்பெற்றது. மாணவர்களின் குடி தண்ணீர்த் தேவைக்கான குழாய்க் கிணறு அமைத்தல் மற்றும் மின்சார வசதியைப் பெறுதல், சத்துணவு வழங்கல் மற்றும் ஏனைய தேவைகள் குறித்து அங்கு கலந்துரையாடப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. அதன் பின்னர் பிரதிநிதிகளால் முன்பள்ளிச் சிறுவர்களுக்கும், அவர்களின் பெற்றோர்களுக்கும் அன்பளிப்புக்கள் வழங்கி வைக்கப்பட்டன. பிரதிநிதிகளுடன் வர்த்தக நிலையங்களின் பிரதிநிதிகள், வவுனியாப் பிரதேச சமூகச் செயற்பாட்டாளர்களும் மற்றும் பங்கேற்றனர். (க-222)

---

### தமிழர்களின் முறைப்படி திருமணம் செய்து வியப்பில் ஆழ்த்திய சிங்கள தம்பதி

வவுனியா,செப்.2



அநுராதபுரத்தில் வசிக்கும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த எம்.ஐ.எம். ரத்நாயக்கா மற்றும் கஜசானி பூர்னிமா இருவரும் தமிழர்களின்இந்துமுறைப்படி திருமணம் செய்து கொண்டனர்.

வவுனியா, குருமன்காடு சிறி விநாயகர் ஆலயத்தில் நேற்றுக் காலை திருமணம் இடம்பெற்றது. சிவஸ்ரீ திவாகரக்குருக்கள் தலைமையில் மந்திரங்கள் ஒலிக்க, இந்து முறைப்படி தாலி கட்டி இருவரும் திருமண பந்தத்தில் இணைந்து கொண்டனர்.

இந்தத் தகவலை அறிந்த வவுனியா மாவட்டப் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு மணமக்களை ஆசிர்வதித்தனர். பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த இருவர் இவ்வாறு தமிழர் கலாசாரத்தின் படி வேட்டி, சேலை அணிந்து ஆலய மண்டபத்தில் இந்து முறைப்படி திருமணம் செய்தமை பலரதும் பாராட்டைப் பெற்றுள்ளது. (க-ரி4)

---

### வவுனியா தமிழ்ச் சங்க நற்சிந்தனை அரங்கம்

வவுனியா,செப். 2

வவுனியாத் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் காலத்தின் தேவையாகிய சேதன விவசாயம் பற்றிய சிந்தனை அரங்கம் நேற்றையதினம் வவுனியா ஆதிவிநாயகர் ஆலய பாலாம்பிகை மண்டபத்தில் நடைபெற்றது.

தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தலைமையுரையைத் தொடர்ந்து தொடக்கவுரையை வவுனியா விவசாயத் திணைக்கள விதை மற்றும் நடுகைப் பொருள்கள் அபிவிருத்தி நிலைய பிரதி விவசாயப் பணிப்பாளர் தெட்சணாமூர்த்தி யோகேஸ்வரன் நிகழ்த்தினார். சிந்தனையுரைகள் வரிசையில் 'சேதன விவசாயம்ஓர் அறிமுகம்' என்னும் பொருளில் 'அமுதம்' சேதன விவசாய உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவரும் வவுனியா முருகனூர் சாரதா வித்தியாலய அதிபருமான பாஸ்கரமூர்த்தி நேசராஜாவும் 'சேதன விவசாயமும் சவால்களும்' என்னும் பொருளில் 'அமுதம்' சேதன விவசாய உற்பத்தியாளர் சங்க உறுப்பினர் ஆறுமுகம் பிரபாகரனும் 'சேதன விவசாயமும் எதிர்கால சந்ததியும்' என்னும் பொருளில் அஜிசன் விவசாயப் பண்ணையின் உரிமையாளரான முத்தையா நந்தகுமாரும் 'ஒப்பீட்டு ரீதியில் சேதன அசேதன விவசாயம்' என்னும் பொருளில் வவுனியா கல்வி வலய விவசாய பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் சிவசுப்பிரமணியம் பத்மநாதனும் உரை நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் அமுதம் சேதன விவசாய உற்பத்தியாளர் சங்கத்தால் உற்பத்தி செய்யபட்ட விவசாயப் பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்டன. விருந்தினர்கள் மதிப்பளிப்பும் இடம்பெற்றிருந்தது.

சபையோரின் கருத்துரைகளைத் தொடர்ந்து தமிழ்மணி மேழிக்குமரனின் மதிப்பீட்டுரையும் கவிஞர் கி.உதயகுமாரின் நன்றியுரையுடன் நிகழ்வு முடிவுற்றது. (கு-110)



---

### கோட்டை– பொலன்னறுவை இடையே புதிய சேவை

கொழும்பு, செப்.2

கொழும்பு - கோட்டை மற்றும் பொலன்னறுவைக்கு இடையில் புதிய தொடருந்துச் சேவை முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த மாதத்தின் நடுப்பகுதியில் புதிய நகர தொடருந்துச் சேவைய்ய ஆரம்பிப்பதற்குத் திட்டமிடப்பட்டது என்று தொடருந்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கான பரிசோதனை நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று தொடருந்துத் திணைக்களத்தின் பொது முகாமையாளர் டிலந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

குளிரூட்டப்பட்ட 2 பெட்டிகள் இரண்டாம் மற்றும் மூன்றாம் தர பெட்டிகள் தொடருந்து இணைப்புகளில் காணப்படுகின்றது என்று அவர் குறிப்பிட்டுள்ளார். இதனிடையே, மருதானையிலிருந்து பெலியத்த வரையிலான புதிய தொடருந்துச் சேவை இந்த மாத நடுப்பகுதியிலிருந்து ஆரம்பிக்கப்படவுள்ளது என்றும் தொடருந்துத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (எ)

---

### பெண்ணுக்கு மறியல்

வவுனியா சிறைச்சாலைக்கு ஐஸ் வகைப் போதைப்பொருளை எடுத்துச்சென்றார் என்ற குற்றச்சாட்டில் பெண் ஒருவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

சிறைத் தண்டனைஅனுபவித்துவரும்தனதுகணவனுக்கு அதைக்கொண்டுசென்றேன் என்று அவர் கூறியுள்ளார். மதியம் கைதிகளை பார்வையிடும் நேரத்தில்அவர் அதைக்கொண்டுவந்திருந்தார் என்று சிறைச்சாலைத் தரப்பினர் தெரிவித்தனர்.

அவரிடமிருந்து 4கிராம் ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டது. அதைக் கணவருக்கு வழங்க முற்பட்டபோதே அவர் கைதுசெய்யப்பட்டார். வவுனியாபோதைப்பொருள் தடுப்புப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இரண்டு வாரங்களுக்கு அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (கு-ரி4)

# கடமை நேரத்தில் ஊழியருக்கு வகுப்பு

## தேவை நாடிச் செல்லும் மக்கள் அலைச்சல்

வவுனியா,செப்.2

வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபையில் கடமை நேரத்தில் ஊழியர்களுக்கு சிங்கள வகுப்பு நடத்தப்படுவதால், தாம் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுப்பதாகப் பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மும்மொழிக் கொள்கைச் செயற்றிடத்தின் கீழ் பிரதேச சபையில் பணியாற்றும் ஊழியர்களுக்குச் சிங்கள வகுப்பு தற்போது நடத்தப்பட்டு வருகிறது.

பிரதேச சபையின் கேட்போர் கூடத்தில் பிற்பகல் 2 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை வகுப்பு நடத்தப்படுகிறது. இதனால் குறிக்கப்பட்ட நேரத்தில் பொதுமக்கள் பிரதேச சபையின் சேவைகளைப் பெறமுடியாத நிலமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

பிரதேசசபை ஊழியர்களுக்கான சிங்கள வகுப்பை ஊழியர்களின் கடமை நேரம் (8.15-4.15) தவிர்ந்த ஏனைய நேரத்திலோ அல்லது சனி, ஞாயிற்றுக் கிழமைகளிலோ மேற்கொள்ளுமிடத்து பிரதேச சபையின் சேவைகளை எம்மால் பெற்றுக்கொள்ள இலகுவாக அமையும் என்று பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

பிரதேச சபையின் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு நேற்று முன்தினம் பொதுமக்கள் சிலர் பிரதேச சபைக்கு சென்றிருந்த போது, அங்கு ஊழியர்கள் தற்போது சிங்கள வகுப்பில் உள்ளதாகக் கூறிய வேறொரு ஊழியர் ஒருவர், திங்கட்கிழமை வந்து சேவையைப் பெற்றுக்கொள்ளுமாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபையின் தவிசாளர் து.நடராஜசிங்கத்திடம் கேட்டபோது, இந்த விடயம் தொடர்பாக ஊழியர்களிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்படும் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் திங்கட்கிழமை அலுவலக நேரத்தில் வந்து தன்னை நேரடியாகச் சந்திக்குமாறு தெரிவித்தார். (க-ரி4)

# நாவலர் பண்ணையில் குடியமர அடிப்படை வசதிகளை ஏற்படுத்துங்கள்

## அந்தப் பகுதியிலுள்ள மக்கள் கோரிக்கை
## நிதி கிடைத்தால் நடவடிக்கை என்கிறார் பிரதேச செயலர்

யாழ்ப்பாணம், செப். 2

வவுனியா மாவட்டத்தின் தமிழ்க் கிராமங்கள் பல முழுமையாக அழிவடைந்துவிட்டன. அந்தக் கிராமங்களில் வசித்த நாங்கள் தற்போது அதில் ஒரு கிராமமான நாவலர் பண்ணையில் குடியமரத் திட்டமிட்டுள்ளோம். ஆனால்அதற்கான வசதிகளைச் செய்துதரவேண்டும் என்று அந்தப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிப்பதாவது:

வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கிராமங்களான நொச்சிக்குளம், கோரமோட்டை, நாவலர்பண்ணை ஆகிய மூன்று கிராமங்களிலும் 1997ஆம் ஆண்டு வரைக்கும் 250க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்தன. தற்போது வாழ்விடங்கள் அழிக்கப்பட்டு அடையாளங்களே மிஞ்சியுள்ளன. எமது கிராமங்கள் போன்று அயல் கிராமங்களும் அழிய முன்னர் உரிய நடவடிக்கை எடுக்க அதிகாரிகள், அரசியல்வாதிகள் அனைவரும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்தப்பகுதியில் தற்போது 450 ஏக்கர் வயல் நிலம் உள்ளது. ஆனால் பயனின்றிக் கிடக்கின்றன. இவையெல்லாவற்றுக்கும் முக்கிய காரணம் யானைகளின் தொல்லையே. அதனைவிட நாம் வாழ்ந்த பகுதிகளிலிருந்து 1996ஆம் ஆண்டும் அதற்கு முன்னரும் இடம் பெயர்ந்தமையால் இன்று 20 தொடக்கம் 25 ஆண்டுகளாகிவிட்டன. அங்கே காட்டு மரங்கள் வளர்ந்து விட்டன. அதனால் வனவளத் திணைக்களத்தினர் மக்களின் குடியேற்றத்துக்குத் தடையாகவுள்ளனர்.

இதனையும் தாண்டி 450ஏக்கர் வயல்ப் பகுதியில் விடுவிக்கப்பட்ட பகுதியில் விவசாயம் மேற்கொள்ள முயன்றால் அருகில் காடு இருப்பதனால் யானைகளின் தொல்லையோ மிக அதிகம். தென்னிலங்கையில் வயல்கள் குடியிருப்புகளுக்குள் பிடிக்கப்படும் யானைகளையும் ஏற்றிவந்து ஹொரவப்பொத்தானை காட்டின் ஊடாக எமது பகுதிக் காடுகளுக்குள் இறக்கி விடுகின்றனர்.

தென்னிலங்கையில் உள்ள சிங்கள மக்களைக் கவனத்தில் எடுக்கும் அதிகாரிகள் எம்மையோ எமது வாழ்வாதாரத்தையோ கண்டுகொள்வதாகத் தெரியவில்லை.

இதனால் இந்தப் பகுதியில் தற்போது 30க்கும் மேற்பட்ட யானைகள் உலாவுகின்றன.

நெடுங் கேணியிலிருந்து 20 கிலோமீற்றர் தொலைவிலுள்ள எமது பகுதிகளுக்குப் பயணிப்பதானால் சுமார் 2 மணிநேரம் செல்கின்றது.


எமது சொந்தக் கிராமத்தில் குடியமர எமது கிராமத்துக்கு வீதிகளைச் சீரமைத்து வீதி விளக்குகளைப் பொருத்தி முக்கியமாக யானைகளிலிருந்து பாதுகாக்கும் வேலிகளை அமைத்துத் தருமாறு பல தடவைகள் கோரினோம். இவை எதுவுமே இடம்பெறவில்லை. இதனால் எஞ்சிய வாழ்க்கைக் காலத்தையும் அவலத்துடனேயே வாழ்கின்றோம். 100 ஆண்டுகளுக்கும் மேல் வாழ்ந்த எமக்கு யானை வேலிகள் அமைத்துத் தருமாறு கோரிக்கை விடுத்தோம். ஆனால்50 அல்லது 60 குடும்பங்களுக்காக ஆயிரம் ஏக்கர் பகுதியைச் சுற்றி யானை வேலிகள் அமைக்க முடியாது எனக்கூறும் அதிகாரிகள், கடந்த 9 ஆண்டுகளுக்குள் வந்து குடியேறிய பொபஸ்வேவா சிங்கள குடியேற்றத்தைச் சுற்றி இரண்டு அடுக்கு யானைப் பாதுகாப்பு வேலிகள் அமைத்துக்கொடுத்துள்ளனர். ஆனால் அரசு தமிழ் மக்களின் உயிர்களின் பாதுகாப்பு விடயத்தில் மட்டும் அசட்டை செய்கின்றது. எனவே இவற்றைச் சீர் செய்து தமிழர் தாயகப்பகுதிகளைப் பாதுகாக்க முன்வரவேண்டும். அல்லது இந்தக் கிராமங்களிலிருந்து சுமார் 7 மைல் தொலைவிலுள்ள சிங்கள மக்களே எதிர்காலத்தில் எமது கிராமங்களையும் ஆக்கிரமிக்கும் நிலை ஏற்படும். அவ்வாறு ஒரு நிலை ஏற்பட்டால் அதனையும் மாவட்ட அரசியல்வாதிகளே பொறுப்பேற்கவேண்டும் எனப் பல தடவை கூறி வந்துள்ளோம். தற்போது நாவலர் பண்ணைப் பகுதியில் குடியமரச் சில குடும்பங் கள் முன்வந்துள்ளன. இதற்காகப் பிரதேச செயலகத்தில் பதிவுகளை மேற்கொண்ட எமக்கு குடியிருப்புக் காணி மற்றும் வாழ்வாதாரத்துக்கான வயற்காணிகளை வழங்க இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. எல்லைக் கிராமங்களைப் பாதுகாக்கும் நோக்கில் உடன் பணியாற்றவேண்டும். இவை தொடர்பில் வவுனியா வடக்குப் பிரதேச செயலர் பரந்தாமன் தெரிவித்ததா வது:


அந்தப் பகுதி மக்களின் கோரிக்கை நியாயமானது. நொச்சிக்குளம், கோரமோட்டை பகுதியில் வாழ்ந்த மக்களின் காணி அனுமதிப் பத்திரங்களைப் பலர் தவற விட்டுள்ளனர். பலர் பாதுகாத்து வைத்துள்ளனர். வனவளத் திணைக்களம் எம்மையும் அந்தப் பகுதிக்குள் அனுமதிக்க மறுக்கின்றனர்.

அங்குள்ள இராமர்குளம் குறிச்சாக்குளம் ஆகிய இரு குளங்களையும் சீரமைத்து யானைகளிலிருந்து பாதுகாப்பை ஏற்படுத்தி மின்சாரம் வழங்கினால் அந்த மக்கள் தமக்கான வாழ்வாதாரத்தை ஏற்படுத்திக்கொள்வார்கள். அதன்பின்னர் அங்கே குடியமரும் மக்களுக்கான போக்குவரத்துப் பாதையை அமைத்து வழங்கலாம் என பரிந்துரை செய்தோம். இருப்பினும் அதற்கான நிதி கிடைக்க வில்லை. கிடைக்கும் பட்சத்தில் அவற்றை மேற்கொள்ள முடியும்.

சிரமத்தின் மத்தியில் நாவலர் பண்ணையில் 37 குடும்பங்களைக் குடியமர்த்தினோம். ஆனாலும் அவர்களுக்கான அடிப்படை வசதிகள் பூர்த்தி செய்யப்படவில்லை. 17 குடும்பங்கள் அங்கிருந்து மீண்டும் இடம்பெயர்ந்து விட்டனர்.

இவர்களுக்கான வீதி, மின்சாரம் போன்றவற்றையாவது பெற்றுக் கொடுக்க முயற்சிக்கின்றோம் என்றார். (த-105)







# நானாட்டானில் மாட்டு வண்டிச் சவாரி

மன்னார், செப் 2

நானாட்டான் பிரதேசத்துக்கு உட்பட்ட அளவக்கை றகூல் புதுவெளியில் இரட்டை மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை நடைபெற்றது. 40 சோடி மாடுகள் போட்டியில் பங்குபற்றின. போட்டிக்காக மாட்டு வண்டில்கள் யாழ்பாணம் மற்றும் மன்னார் மாவட்டத்தின் பல பாகங்களிலும் இருந்து கொண்டு வரப்பட்டன. அளவக்கை அல்ஜாமியா விளையாட்டுக் கழகத்தினரும், அளவக்கை மற்றும் றகூல் புதுவெளி மக்களும் இணைந்து போட்டியை நடத்தினர். (க-213)

# வங்கியை விற்பனை செய்யாதே வவுனியாவில் சுவரொட்டிகள்

வவுனியா, செப். 2



சட்டத்திருத்தம் என்ற போர்வைக்குள் மறைந்து கொண்டு மக்கள் வங்கியை விற்பனை செய்யும் சூழ்ச்சியைத் தோற்கடிப்போம் என்ற வாசகம் அச்சிடப்பட்ட சுவரொட்டிகள் வவுனியாவில் பல்வேறு பகுதிகளில் ஒட்டப்பட்டுள்ளன.

இந்தச் சுவரோட்டியின் கீழ்ப் பகுதியில் இலங்கை வங்கி ஊழியர் சங்கம் என்று உரிமை கோரப்பட்டுள்ளது. (த-ரி4)

# மன்னாரில் மழையின்றி கத்தரிச் செய்கை பாதிப்பு

## விவசாயிகள் கவலை தெரிவிப்பு

மன்னார், செப். 2

மன்னார் இராசமடுப் பகுதியிலுள்ள மக்கள் மேட்டுநிலப் பயிர்ச் செய்கையில் மிகுந்த ஆர்வம் காட்டி வரும் நிலையில், சில மாதங்களாக நாட்டில் நிலவும் வறட்சியால் தோட்டப் பயிர்ச் செய்கை குறிப்பாகக் கத்தரிச் செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.



தற்போது அதிகளவான தோட்டங்களில் கத்தரிச்செடி பயிரிடப்பட்டுள்ளது. மழை இல்லாத காரணத்தால் கிணற்றிலிருந்து தண்ணீர் இறைப்பதன் மூலமே செடிகள் வளர்க்கப்படுகின்றன.

எனினும் செடிகளில் அதிகளவான பூக்கள் பூப்பதில்லை. செடியில் ஆகக் குறைந்தளவு காய்களே காணப்படுகின்றன. இதற்குக் காரணம் மழை இன்மையே. எவ்வளவுதான் தண்ணீர் இறைத்தாலும் இடையிடையே மழை பெய்ய வேண்டும். அப்போதுதான் செடி பசுமையாகவும் அடர்த்தியாகவும் வளர்வதுடன் அதிகளவாக காய்க்கும் தன்மை கொண்டிருக்கும். தற்போது மழை இல்லாமல் நிலங்கள் வறட்சியாகவுள்ளன. ஒன்றை விட்டு ஒரு நாள் தண்ணீர் இறைக்கின்றோம். செடிகள் வளர்ச்சி குன்றி காய்கள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றன. வறட்சி காரணமாக கத்தரிச் செய்கை பாதிக்கப்படுகின்றது என்று கத்தரிச் செய்கையாளர்கள் தெரிவிக்கின்றார்கள். (த-213)

## வீதிச் சீரமைப்பு ஆரம்பிப்பு

கிளிநொச்சி, செப். 2

மாங்குளம் நகர் பகுதியின் அதி முக்கிய தேவையாக இருந்த சந்தை. பேருந்து தரிப்பிடம் மற்றும் தொடருந்து நிலையம் என்பனவற்றுக்கான பாதைச்சீரமைப்பு நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராசாவின் முயற்சியில் 7 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுசீரமைப்பு ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த வீதிச் சீரமைப்பினூடாக மாங்குளம் நகர் பகுதியில் காணப்படுகின்ற சந்தை பேருந்து தரிப்பிடம், தொடருந்து நிலையம் போன்றவற்றிற்கு செல்கின்ற மக்கள் தமது போக்குவரத்தை இலகுபடுத்திக் கொள்ள முடியும். சந்தை வளர்ச்சியடையவும் இது உறுதுணையாக அமையும் என்று தெரிவிக்கப்பட்டது. (த-222)

## பளையில் ஒருவர் கைது

கிளிநொச்சி, செப். 2

அரச சாராயம் விற்றார் என்ற குற்றச்சாட்டில் ஒருவரைக் கைது செய்துள்ளோம் என்று பளைப் பொலிஸார் தெரிவித்தனர். வீட்டில் வைத்து சாராயம் விற்றுவந்த நிலையில் தமக்குக் கிடைத்த தகவலின்படி அங்கு சென்று அவரைக் கைது செய்தோம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவரிடமிருந்து 9 போத்தல் சாராயமும் 60 பியர் ரின்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. அதனை விற்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டார். அவர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். அவருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தொடரப்படும் என்று பளை பொலிஸார் தெரிவித்தனர். (த-6)



கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரர் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழாவின் கொடியேற்றம் நேற்று அதிகாலை 5 மணிக்கு இடம்பெற்றது. எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## மாவீரன் பண்டாரவன்னியன் மறுமலர்ச்சி மன்றம் அமைப்பு

வவுனியா,செப்.2

வவுனியா மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்டு மாவீரன் பண்டாரவன்னியன் மறுமலர்ச்சி மன்றம் வவுனியா கந்தசாமி ஆலய திருமண மண்டபத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மூத்த சட்டத்தரணி மு. சிற்றம்பலம் தலைமையில் மன்றம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மன்றத்தின் போசகராக மூத்த சட்டத்தரணி மு. சிற்றம்பலம், தலைவராக மா. கதிர்காமராஜா, செயலராக செ.சபாநாதன், பொருளாளராக கோ. ஸ்ரீஸ்காந்தராஜா, உப.தலைவராக செ.சந்திரகுமார், உபசெயலராக மாணிக்கம் ஜெகன், நிர்வாக சபை உறுப்பினர்களாக ரி. கே. இராஜலிங்கம், க.கிரு பாகரன், அ.சூரியகுமார், ந. கபில்நாத், சு.ஜெயச்சந்திரன், தி.செல்வநாதன், வீ.ஜெகசோதிநாதன், சி.வரதராஜ் ஆகியோரும், கணக்காய்வாளராக ஓய்வுபெற்ற கிராம அலுவலர் செல்வராஜாவும் நியமிக்கப்பட்டுள்ளனர். (க-110)

## கிளிநொச்சியில் வீதிகள் சீரமைப்பு

கிளிநொச்சி, செப். 2

மக்கள் நடமாட முடியாத அளவுக்குக் காணப்பட்ட வீதிகள் நேற்று முன்தினம் சீரமைக்கப்பட்டுள்ளன. கிளிநொச்சியில் மிகப் பின்தங்கிய பகுதிகளான உழவனூர் மற்றும் தம்பிராசபுரம் பகுதி வீதிகளே சீரமைக்கப்பட்டுள்ளன.


அந்தப்பகுதி மக்கள் விடுத்த வேண்டுகோளையடுத்து கரைச்சிப் பிரதேச சபையினர் அந்த வீதிகளைச்சீரமைத்துள்ளனர்.

அங்கு சென்ற சபையின் வட்டார உறுப்பினர் கலைவாணி தலைமையிலான இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் குழுவினர் குறித்த விடயம் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனுக்கும் கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் வேழமாலிகிதனுக்கும் தெரியப்படுத்தியதையடுத்து குறித்த வீதிகள் சீரமைக்கப்பட்டுள்ளன.

சுமார் 20 வருடங்களின் பின்னர் குறித்த வீதிகள் சீரமைக்கப்பட்டுள்ளன என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். (த-6)

## தனிநாயகம் அடிகளாரின் 39ஆவது நினைவு தினம்

வவுனியா, செப்.2



வவுனியாவில் தனிநாயகம் அடிகளாரின் 39ஆவது நினைவு தினம் வவுனியா மணிக்கூட்டுக் கோபுரச் சந்தியில் அமைந்துள்ள அடிகளாரின் உருவ சிலைக்கு முன்பாக நேற்றுக் காலை கடைப்பிடிக்கப்பட்டது. நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் அடிகளாரின் சிலைக்கு மாலை அணிவித்து, மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்.

தமிழருவி சிவகுமாரன் மற்றும் தமிழ்மணி அகளங்கன் ஆகியோர் அடிகளார் தொடர்பான நினைவுரையை நிகழ்த்தினர். நிகழ்வில் வவுனியா நகரசபை உபநகர பிதா சு. குமாரசாமி, நகரசபை உறுப்பினர்களான க. சந்திரகுலசிங்கம் மோகன், நா.சேனாதிராஜா, பாலபிரசன்னா, பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள் கலந்துகொண்டனர். வவுனியா நகர சபையின் ஏற்பாட்டில் நிகழ்வு நடைபெற்றது. (க-110)

## ஓமந்தையில் வீட்டு வளவுக்குள் புகுந்த முதலையால் பரபரப்பு!

வவுனியா.செப். 2



வவுனியா, ஓமந்தைப் பகுதியிலுள்ள வீட்டுவளாகத்துக்குச்சென்ற 5 அடி நீளமான முதலையால் நேற்றுமுன்தினமிரவு பதற்ற நிலை ஏற்பட்டது.

வீட்டிலிருந்த நாய் குரைக்கும் சத்தத்தைக் கேட்டு கதவை திறந்து வெளியே வந்து பார்த்தபோது வீட்டு முற்றத்தில் 5 அடி நீளமான முதலை ஒன்றை அவதானித்துள்ளனர். இதனையடுத்து அயலவர்கள் ஒன்று கூடி முதலையை விரட்ட முற்பட்டபோது அது வீதியோரத்தில் இருந்த பூங்கன்றுகளுக்குள் புகுந்து அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டது.

இதனையடுத்து ஊர்மக்கள் ஓமந்தைப் பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார், வவுனியா வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளை வரவழைத்தனர். அவர்கள் நேற்றுக் அங்கு வந்து முதலையை மீட்டனர். பாதுகாப்பான இடத்தில் விடுவதற்காக அதை எடுத்துச் சென்றனர்.

நீர்நிலை தேடியே முதலை ஊர் மனைக்குள் வந்திருக்கலாம் என்று அங்குள்ள மக்கள் தெரிவித்தனர்.

வவுனியாவில் நிலவிவரும் கடும் வறட்சி காரணமாகக் குளங்களில் உள்ள தண்ணீர் வற்றிக்காணப்படுவதனாலேயே இந்தநிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-110)

# கோத்தாவை மாற்றும் முயற்சியை சுதந்திரக் கட்சி கைவிட வேண்டும்

*செஹான் சேமசிங்க தெரிவிப்பு*



கொழும்பு, செப்.2

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளரை மாற்றி தமது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளலாம் என சுதந்திர கட்சியினர் முன்னெடுக்கும் முயற்சிகளை திருத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பரந்துப்பட்ட கூட்டணியின் ஊடாக சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியும், சுதந்திர கட்சியும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்ற நோக்கத்தில் எதிரணியினர் ஒத்துழைப்புடன் செயற்பட்டு வருகின்றோம். ஆனால் சுதந்திர கட்சியின் ஒரு தரப்பினர் தமது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதை முதன்மை இலக்காகக் கொண்டுள்ளார்கள். சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் வேட்பாளராக கோத்தபாய ராஜபக்ச உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளார். எதிரணியின் தேசிய மாநாடுகளும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எதிரணியின் அரச தலைவர் வேட்பாளரை மாற்றி தமது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளும் முயற்சிகளை சுதந்திர கட்சி மறைமுகமாக முன்னெடுத்து வருகின்றது என்பதை அவதானிக்க முடிகின்றது. உத்தேச அரசதலைவர் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சிக்கும், சிறிலங்கா பொதுமக்கள் முன்னணிக்கும் இடையே முதன்மையான போட்டி காணப்படும். சுதந்திரக் கட்சிஎம்முடன் இணைந்து இணக்கமாக செயற்பட வேண்டும் என்பதே முதன்மை எதிர்பார்ப்பாகக் காணப்படுகின்றது. ஐக்கிய தேசிய கட்சியிடம் நாட்டு மக்கள் இனி யொரு போதும் ஆட்சிய திகாரத்தை ஒப்படைக்க மாட்டார்கள். - என்றார்.(எ)

## இலங்கைப் பயணத்தை முடித்து திரும்பினார் பேராயர் ஜஸ்ரின்

கொழும்பு, செப்.2



இலங்கை வந்திருந்த கன்டபெரியின் பேராயர் ஜஸ்ரின் வெல்பி ஆண்டகை நேற்று முன்தினம் இலங்கைக்கான தமது பயணத்ததை நிறைவு செய்து கொண்டு நாடு திரும்பியுள்ளார்.

கடந்த ஏப்ரல் 21 ஆம் திகதி இடம்பெற்ற தாக்குதலின் பின்னரான ஒருமைப்பாட்டை மேம்படுத்துவதை முதன்மை நோக்கமாக கொண்டு பேராயர் இலங்கைக்கு வந்திருந்தார்.

கன்டபெரியின் பேராயர் இலங்கை கத்தோலிக்கத் திருச்சபையின் பேராயர் கர்தினால் மல்க்கம் ரஞ்சித் ஆண்டகை மற்றும் இலங்கைத் திருச்சபையின் பேராயர் டிலோராஸ் ஆர் கனகசபை ஆகியோரையும் சந்தித்து கலந்துரையாடினார்.

கட்டுவாபிட்டிய தேவாலயத்துக்குச் சென்ற பேராயர் குண்டுத்தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்காக சிறப்பு ஆராதனையில் ஈடுபட்டதோடு அவர்களின் உறவினர்களையும், காயப்பட்டவர்களையும் நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்தார்.

இலங்கைத் திருச்சபையின் ஏற்பாட்டில் சர்வ மதத் தலைவர்களை சந்தித்து இன, மதங்களுக்கிடையிலான நல்லிணக்கம் மற்றும் சமாதானம் தொடர்பிலும் பேராயர் கலந்துரையாடினார். கண்டி தலதா மாளிகைக்குச் சென்ற கன்டபெரியின் பேராயர் ஜஸ்ரின் வெல்பி ஆண்டகை மல்வத்த மற்றும் அஸ்கிரிய பீடங்களின் மகா நாயக்கர்களையும் சந்தித்து கலந்துரையாடினார்.

பேராயர் தமது மூன்று நாள் பயணத்தின்போது அரச தலைவர், தலைமை அமைச்சர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவரையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

பிரிட்டன் தூதுவருடனான சந்திப்பையும் மேற்கொண்டு கன்டபெரியின் பேராயர் ஜஸ்ரின் வெல்பி ஆண்டகை, நாடு திரும்பியுள்ளார். (எ)



## இரண்டு வாகனங்கள் நேருக்கு நேர் விபத்து

*ஒருவர் உயிரிழப்பு மற்றொருவர் படுகாயம்*

மட்டக்களப்பு,செப்.2

இரண்டு வாகனங்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின. அதில் ஒருவர் உயிரிழந்ததுடன், மற்றொருவர் படுகாயமடைந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து மட்டக்களப்பு - கல்முனை முதன்மை வீதியின் களுவாஞ்சிகுடிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செட்டிபாளையத்தில் நேற்று அதிகாலை இடம்பெற்றது. மட்டக்களப்பில் இருந்து கல்முனை நோக்கிப் பயணித்த பாரவூர்தியும், கல்முனையில் இருந்து மட்டக்களப்பு நோக்கிப் பயணித்த பட்டா ரக வாகனமும் மோதி விபத்து நிகழ்ந்துள்ளது.

காவத்தமுனை, பனிச்சையடி வீதியைச் சேர்ந்த அலியார். நார்ஜஹான் (வயது - 46) என்பவரே விபத்தில் உயிரிழந்துள்ளார். சடலம் களுவாஞ்சிகுடி ஆதார மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்தவர் களுவாஞ்சிகுடி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். களுவாஞ்சிகுடிப் போக்குவரத்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க)

## கே.கே.எஸ் - தொண்டைமானாறு வீதி 15வரை முழு நேரமும் திறந்திருக்கும்

*இராணுவத்தினர் அறிவிப்பு*

வடமராட்சி செல்வச்சந்நிதி கோவிலின் வருடாந்தத் திருவிழாவையொட்டி காங்கேசன்துறை தொண்டைமானாறு பாதை எதிர்வரும் 15ஆம் திகதிவரை மாத்திரம் 24 மணித்தியாலமும் திறந்திருக்கும் என்று இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

இது பற்றி இராணுவ ஊடகப் பிரிவு அனுப்பியசெய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு அடுத்ததாக யாழ்ப்பாணம் பிரதேசத்தில் பிரசித்திபெற்ற கோவிலாக விளங்கும் செல்வச்சந்நிதி முருகன் கோவிலின் வருடாந்த திருவிழா கடந்த 30ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு எதிர்வரும் 15ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இந்தக் கோவில் கதிர்காமம் முருகன் கோவிலின் பிரதிபலிப்பாக அமையப் பெற்றுள்ளதுடன் வருடாந்த மகோற்சவ நிகழ்வுக்காக வெவ்வேறு பிரதேசங்களிலிருந்தும் அதிகளவான பக்தர்கள் இந்த விழாக்காலங்களில் கலந்துகொள்வார்கள். அதுமட்டுமன்றி இந்த வரலாற்றுப் பழமை வாய்ந்த கோவிலிலிருந்து கதிர்காமம் புனித தலத்துக்கான பாத யாத்திரையானது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தக் காலப்பகுதியிலேயே இந்தப் பகுதிகளிலுள்ள பல்வேறு புனித இடங்களிலும் சிறப்புப் பூசை வழிபாடுகள் நடைபெறும். அதற்கமைய இந்தக் கோவில் நிகழ்வில் கலந்து கொள்வதற்காக பல்வேறு பகுதிகளிலிருந்தும் பக்தர்கள் வருகை தந்து வழிபாடுகளை மேற்கொள்கின்றனர். அதனால் அடியார்களுடைய போக்குவரத்து நலனைக் கருத்திற்கொண்டு இராணுவத்தினராகிய நாம் எம்மால் முடிந்த ஒத்துழைப்புக்களை வழங்குவதற்குத் தயாராகவுள்ளோம் என்பதை கூறிக் கொள்கின்றோம்.

இதற்கமைவாக செல்வச்சந்நிதி முருகன் கோவில் மகோற்சவத்தில் கலந்து கொள்ளும் பக்தர்களினுடைய போக்குவரத்து நலனைக் கருத்திற்கொண்டு குறித்த கோவிலினுடைய பரிபாலனசபையின் செயலராகிய எஸ்.செல்வலிங்கத்தால் யாழ்ப்பாணப் பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதியிடம் முன்வைக்கப்பட்ட வேண்டுகோளுக்கு அமைவாக யாழ்ப்பாணத்திலிருந்து கொக்குவில், மருதனார்மடம், சுன்னாகம், மல்லாகம், தெல்லிப்பழை, காங்கேசன்துறை மற்றும் மயிலிட்டி ஊடாக தொண்டைமானாறுச் சந்திவரை செல்கின்ற குறித்த வீதி எதிர்வரும் 15ஆம் திகதி வரை இராணுவத்தினால் 24 மணிநேரமும் திறந்துவிடப்படும். யாழ்ப்பாண பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர்ஜெனரல்ருவான்வணிகசூரியவின் ஆலோசனைக்கமைவாக இந்தவீதி திறந்துவிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (கு)

## முகத்திரை அணியும் பெண்கள் புத்திசாலித் தனமாக நடக்கவும்

உலமாஅமைப்பு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், செப். 2

ஆடைச் சுதந்திரம் உள்ளபோதும், முஸ்லிம் பெண்கள் முகத்திரை அணிவதில் தற்போதுள்ள சிக்கல்கள் தொடர்பில் கருத்துக்களை வெளியிட்டுள்ள ஜம்இய்யத்துல் உலமா அமைப்பு, முகத்திரை அணியும் முஸ்லிம் பெண்களைப் புத்திசாலித் தனமாக நடந்துகொள்ளுமாறும் கேட்டுக்கொண்டுள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பு வெளியிட்ட ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

ஆடைச் சுதந்திரம் என்பது மனிதனின் அடிப்படை உரிமைகளில் ஒன்று. எமது நாட்டின் யாப்பின் பிரகாரம் அனைவருக்கும் அந்தச் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளதை யாவரும் அறிவோம்

நாட்டில் நடைபெற்ற துன்பியல் நிகழ்வைத் தொடர்ந்து நாட்டில் அசாதாரண நிலை காணப்பட்டதுடன் அவசர காலச் சட்டமும் நடைமுறைக்கு வந்தது. முஸ்லிம் பெண்கள் அணியும் முகத்திரை அணிவதற்குத் தற்காலிக தடையும் விதிக்கப்பட்டது.

எனினும் கடந்த 23ஆம் திகதியுடன் அவசர காலச் சட்டம் நீக்கப்பட்டு பாதுகாப்புக்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் அதிகாரம் பாதுகாப்புத் தரப்பினருக்கு வழங்கும் அரசிதழ் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. எனினும் நாட்டு மக்களின் அச்சமும் மனோபாவமும் முழுமையாக மாறியதாகத் தெரியவில்லை.

இந்த நிலையில் முஸ்லிம் சகோதரிகள் முகத்திரை அணிந்து வெளியேறும்போது பல்வேறு அசௌகரியங்களுக்கு ஆளாக இடமுண்டு. அத்துடன் நாட்டில் தற்போது நிலவும் அரசியல் சூழ்நிலையில் இனவாத சக்திகளுக்கு இடமளிக்காமல் பார்த்துக் கொள்வது எமது பொறுப்பாகும்.

எனவே முகத்திரை அணிந்து பொது இடங்களுக்குச் செல்வதால் ஏற்படும் அசௌகரியங்களைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் காலநேர சூழ்நிலைகளைக் கவனத்தில் கொண்டு புத்திசாதுரியமாகவும் அவதானத்தோடும் நடந்து கொள்ளுமாறு அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா கேட்டுக்கொண்டுள்ளது.

எமது அவதானமான செயற்பாடுகள் எமது உரிமைகளை உரிய முறையில் பாதுகாக்க நிச்சயம் உதவும் என்ற எதிர்பார்ப்பு இருக்கின்றது. இலங்கை முஸ்லிம்கள் வரலாறு நெடுகிலும் அனுபவித்து வந்த மதச் சுதந்திரமும் உரிமைகளும் கலாசாரமும் தொடர்ந்தும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும் என்றுள்ளது. (த-21)

# பரந்துபட்ட கூட்டணியை அமைத்து ஐ.தே.க. வேட்பாளரை அறிவிக்கும்

கொழும்பு, ஓக.2

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையில் பரந்துபட்ட கூட்டணியை அமைத்து எமது வெற்றி வேட்பாளரை அறிவிப்போம். நாம் ராஜபக்சவைத் தனிமைப்படுத்துவோம். எமது வேட்பாளர் மைத்திரி போலிருக்கமாட்டார்.



இவ்வாறுஅமைச்சர்ராஜிதசேனாரத்ன தெரிவித்துள்ளார்.

குளியாப்பிட்டியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர்இவ்வாறுதெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது வேட்பாளர் யார் என எங்கு சென்றாலும் வினவுகின்றார்கள். நாம் பரந்துபட்ட கூட்டணியை அமைத்து கடந்த முறைபோன்று வெற்றிபெறும் வேட்பாளரைத் தக்க தருணத்தில் களமிறக்குவோம். ஆனால் மைத்திரிபால சிறிசேன போன்று அவர் இருக்க மாட்டார். நாட்டின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு அனைத்துச் சமூகங்களின் சார்பிலும் செயற்படும் ஒருவராகவே இருப்பார்.

மைத்திரியை நானும் முன்னின்று களமிறக்கினேன். அதன் பின்னர் அவரை ஏன் வேட்பாளராக நிறுத்தினீர்கள்? அவரைப் பற்றி அறிந்திருக்கவில்லையா? என்றெல்லாம் ஆயிரக்கணக்கான கேள்விகளை என்னிடத்தில் கேட்டுவிட்டார்கள்.

அவற்றுக்குப் பதிலளித்து நானும் களைத்துவிட்டேன். ஆகவே அவரைப்போன்றவேட்பாளரைமீண்டும் களமிறக்கினால் எம்மை மனநிலை சரியில்லாதவர்கள் என்றே மக்கள் நினைப்பார்கள்.

நாம் சிறந்த வேட்பாளரை களமிறக்குவது உறுதியானது.

நாம் கூட்டணியை அமைத்து உரிய முறைமையில் வெற்றி வேட்பாளரைக்களமிறக்குவோம். குளியாப்பிடி நகருக்கு எமது அரச தலைவர் வேட்பாளருடன்தான் மீண்டும் வருவோம்.

ராஜபக்ச காலத்தில் நடைபெற்ற விடயங்களை நீங்கள் அறிவீர்கள். மீண்டும் அந்த யுகம் ஏற்படுவதற்கு இடமளிக்க முடியாது. ராஜபக்ச தரப்பினரை நாம் தனிமைப்படுத்துவோம். அதற்காக அனைத்து சக்திகளையும் ஒன்றிணைப்போம் - என்றார். (எ)

# இறுதி நேரத்தில் மைத்திரி கோத்தாவை ஆதரிப்பார்!

## கட்சி தாவிய எஸ்.பி. திசாநாயக்க நம்பிக்கை

கொழும்பு, செப்.2

அரச தலைவர் மைத்திரிபால இறுதித் தருணத்தில் கோத்தபாயவுக்குநிபந்தனையற்றஆதரவைவழங்குவார். மகிந்த தலைமையிலான பரந்துபட்ட கூட்டணியில் இணைவதே சுதந்திரக்கட்சிக்குள்ள ஒரே தெரிவாகும்.

இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து வெளியேறிசிறிலங்காபொதுமக்கள்முன்னணியில் இணைந்துள்ள முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

வரலாற்றைப்பார்க்கின்றபோது, ஐ.தே.கவின்சர்வாதிகாரத்துக்கு எதிராகக் கூட்டணிகள் அமைகின்றபோது சுதந்திரக்கட்சி தலைமை வழங்கியுள்ளது. தற்போது சுதந்திரக்கட்சி சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியாக உள்ளது.

சர்வாதிகார ஐ.தே.வை வீட்டுக்கு அனுப்புவதற்காக அனைத்துச் சக்திகளையும் ஓரணியில் திரட்டி முதற்கட்டமாக கோத்தபாயவுக்கு வலுவான ஆணையுடன்நாட்டின்தலைமைத்துவத்தைப்பெற்றுக்கொடுப்பதற்காகவே இந்த மாற்றமாகும். கொள்கை அடிப்படையில் அது எமது கடமையுமாகும். எமது தாய்வீட்டுக்கு வந்ததைப்போன்று உணர்கின்றோம்.

எனது உறுப்புரிமைக்கு எந்த விதமான பிரச்சினையும் இல்லை. மகிந்த ராஜபக்ச சிறிலங்கா பொதுமக்கள்முன்னணியின்தலைவராகஉள்ளார். எமக்குத் தேசிய பட்டியல் உறுப்புரிமையை வழங்கியது மகிந்த ராஜபக்சவே. அந்த விடயத்தில் குழப்பமடையவேண்டியதில்லை. எந்தவிதமானதருணங்களையும் எதிர்கொள்வதற்கு நான் தயாராகவே இருக்கின்றேன்.

ஐக்கியதேசியக்கட்சியுடனானகூட்டில்சுதந்திரக்கட்சி தொடர்ந்தும் இருக்குமாயின் மக்களிடத்திலிருந்து முற்றாக அந்நியப்படுத்தப்பட்டுவிடும் ஆபத்துள்ளமையை நாம் அறிந்திருந்தோம். அதன் காரணமாகவே ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான சக்தியொன்றை ஒருங்கிணைக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்தோம்.

அதற்கமைய ரணில் விக்கிரம சிங்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்திருந்தோம். அதற்குஆரம்பத்தில்அரசதலைவர் மைத்திரி ஆதரவளித்தபோதும் வாக்கெடுப்பு நடைபெறும் தருணத்தில் அதில் எம்மைப் பங்கேற்க வேண்டாம் என்று கூறினார்.

அந்தத் தீர்மானத்தை நாம் எதிர்த்தோம். அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் உள்ளிட்ட 16 பேர் பதவிகளைத் துறந்து அரசிலிருந்து வெளியேறினோம். வாக்கெடுப்பிலும்பங்கேற்றோம். பின்னர் கட்சியில் தொடர்ச்சியாக அங்கம் வகித்துக்கொண்டு ரணிலை வெளியேற்றி அரச தலைவர் மைத்திரி தலைமையிலானஅரசைஉருவாக்கமுயற்சிகளை எடுத்தோம். பலர் அவ்வாறு செய்ய முடியாது என்றுதான் கூறினார்கள்.

மிகக் கடினமான அந்தப் பணியை முயற்சித்துப் பார்த்தோம். எனதுவீட்டில்தான் மைத்திரிபாலவும், மகிந்தவும் சந்திப்புக்களை நடத்திக் கலந்துரையாடல்களை மேற்கொண்டு ஆட்சியை மாற்றினார்கள்.

இருப்பினும்அந்தஅரசைத்தொடர்ந்தும்தக்கவைக்கபதில் எம்மால் வெற்றிபெற முடியவில்லை.

அந்த முயற்சியின் பலனாக பல நன்மைகள் கிடைத்துள்ளன. எதிர்க்கட்சித்தலைவர் பதவி மகிந்த ராஜபக்சவுக்கு கிடைத்துள்ளது. பொதுஜன பெரமுனவுடன் பல தரப்பட்ட அணிகள் இணைந்துள்ளன. சுதந்திரக்கட்சியுடனான கலந்துரையாடல்கள் தொடர்ந்தும் இடம்பெறுகின்றன - என்றார். (எ)

# கோத்தாவால் சு.கட்சிக்குள் குழப்பம்

கொழும்பு, செப்.2

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரசதலைவர்வேட்பாளராகக் கோத்தபாய ராஜபக்ச அறிவிக்கப்பட்டதை அடுத்து சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் பிளவு ஏற்பட்டுள்ளதுஎன்றுதகவல்கள் வெளியாகியுள்ளன.

கோத்தபாய ராஜபக்சவுக்கு ஆதரவான அணி, எதிரான அணி என இருபிரிவுகளாகச் சிறிலங்கா சுதந்திரக் கட்சி முக்கியஸ்தர்கள் இயங்குகின்றனர்என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி புதிய கூட்டணி ஒன்றின் மூலமாக கோத்தபாய ராஜபக்சவுக்கு ஆதரவு வழங்கத்தீர்மானித்துள்ளது என்று கூறப்படு கின்றது. அதற்குசுதந்திரக் கட்சியின் முக்கி யஸ்தர்கள் பலர் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

அதனால் கட்சி இரு பிரிவுகளாகச் செயற்பட ஆரம்பித்துள்ளது என்று கூறப்படுகின்றது. (எ)

# தேர்தலில் வெல்லக்கூடியவரை களமிறக்க வேண்டும் ஐ.தே.க.!

## சட்டத்தரணி உபுல் ஜயசூரிய தெரிவிப்பு

கொழும்பு, செப்.2

ஐக்கிய தேசியக் கட்சி எதிர்வரும் அரச தலைவர்தேர்தலில்வெற்றிபெறவேண்டுமாயின் கட்டாயமாக வெற்றிப் பெறக்கூடியநபருக்குவாய்ப்பளிக்கவேண்டும் என்றுஐக்கியசட்டத்தரணிகள்சங்கத்தின் தலைவர் சட்டத்தரணி உபுல் ஜயசூரிய தெரிவித்துள்ளார்

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில்கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தல் ஆணைக்குழு அரச தலைவர் தேர்தலுக்கானவேட்புமனுவைக்கோரிய பின்னரே ஐக்கிய தேசிய கட்சியின் அரச தலைவர் வேட்பாளரை அறிவிக்க முடியும் என ஐக்கிய தேசியக் கட்சியின் சட்டச் செயலரால் வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையானது ஒரு மோசடியான அறிக்கையாகும்.

சட்டத்துறைசார்ந்தஒருவர் அவ்வாறான கருத்தை வெளியிட்டிருப்பாராயின் நான் அது தொடர்பாக வெட்கமடைகின்றேன்.

அவ்வாறான சரத்தொன்று ஐக்கிய தேசியக் கட்சியின் யாப்பில் இருக்குமாயின் அந்த சட்டவியலாளர் அதுபற்றி ஊடகங்களுக்கு தெளிவுபடுத்த வேண்டியது அவரது கடமையாகும்.

அதேபோன்றுதற்போதுநாட்டுமக்களில் 10 பேர் அல்லது 100 பேரிடம் கேட்டாலும் 100 பேருமேரணில்விக்ரமசிங்கஅந்தக் கட்சித் தலைமையில் இருந்ததுபோதும் என கூறுவார்கள் என்றே நான் நினைக்கின்றேன் - என்றார். (எ)

# இளையோருக்கு வாய்ப்பளிக்கும் பொருளாதாரமே அவசியமானது

## எரான் விக்கிரமரத்ன தெரிவிப்பு

கொழும்பு, செப்.2

நான் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் ஜனநாயகக் கட்டமைப்புக்குள்ளேயே செயற்படுகின்றேன். அனைத்துக் கட்சிகளும் ஜனநாயக நீரோட்டத்தில் செயற்பட வேண்டும்.

இவ்வாறு நிதி இராஜாங்க அமைச்சர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோது அவர் இவ்வாறு தெரிவிததுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொதுமக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து அவர்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற வேண்டும் . தொழில்நுட்பத்தை நன்கு அறிந்த இளையதலைமுறையினருக்குவாய்ப்பளிக்கும் பொருளாதாரம் ஒன்றை எதிர்வரும் 5 வருடங்களுக்கு கட்டியெழுப்ப வேண்டும்- என்றார். (எ)

# தேர்தலை ஒத்திவைக்க அரசு முயற்சிக்கின்றது

## அநுரகுமார குற்றச்சாட்டு



கொழும்பு, செப்.2

அரசதலைவர் தேர்தலை ஒத்தி வைக்க அரசு முயற்சிக்கின்றது. அரச தலைவர் தேர்தல் அறிவிக்கப்பட்டால் இதுவரை நடந்த தேர்தல்களைக் காட்டிலும் ஒரு தீர்க்கமான தேர்தலாக அது அமையும்.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும், அரச தலைவர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளவருமான அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற மக்கள் விடுதலை முன்னணியின் மக்கள் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த வருட இறுதியில் அரச தலைவர் தேர்தல் அறிவிப்பு வெளியாவதற்கு வாய்ப்பு உள்ளது. தேர்தலை ஒத்திவைப்பதற்கு புதிய நகர்வுகளை மேற்கொள்வதையும் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

ஆனாலும் அரச தலைவர் தேர்தல் அறிவிக்கப்பட்டால், இதுவரை நடைபெற்ற தேர்தலைக் காட்டிலும் ஒரு தீர்க்கமான தேர்தலாக அது அமையக்கூடும். அரச தலைவர் தேர்தலில் களமிறங்கியுள்ள மக்கள் விடுதலை முன்னணியைக் காட்டிலும் ஏனைய கட்சிகள் ஒரே மட்டத்தில் உள்ளவைகளாகும். முக்கிய அரசியல் கலந்துரையாடல்கள் இடம்பெறும் நாடாளுமன்றத்தில் நாங்களும் இருக்கின்றோம். அவர்களும் இருக்கின்றார்கள்.

எங்களது உறுப்பினர்களைக் காட்டிலும் அரசின் உறுப்பினர்களே அதிகம் உள்ளனர். ஆனால், நாட்டுமக்கள் பற்றி சிந்தித்துச் செயலாற்றுவது நாங்களே ஆகும். மே தின நிகழ்வு மற்றும் முக்கிய நிகழ்வுகள் அனைத்திலும் அவர்களைவிட உயர்வான இடத்திலேயே உள்ளோம். மக்களுக்கு சேவையாற்றும் விடயத்திலும் நாங்களே முதலிடத்தில் உள்ளோம்.

தற்போது அறிவிக்கப்பட்டுள்ள அரச தலைவர் வேட்பாளர்களைப் பார்க்கின்ற போது அதிலும் அவர்களைவிட பலமடங்கு உயர்வாகவே உள்ளோம் - என்றார். (எ)

# சுதந்திரக் கட்சியில் எவரும் பிளவை ஏற்படுத்த முடியாது

## கட்சியின் பொதுச் செயலர் தெரிவிப்பு

கொழும்பு, செப்.2

சிறிலங்கா சுதந்திரக் கட்சியை இரண்டாகப் பிளவுபடுத்த எவராலும் இயலாது என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

குருணாகலையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பிரிந்து சென்ற இரு கட்சிகளை இணைப்பது என்பது கடினமான விடயம். சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி உறுப்பினர்கள் எம்மை தூற்றுகின்றனர். நான் அவ்வாறு எவரையும் தூற்ற மாட்டேன். நான் உண்மையைப் பேசுவேன். உண்மையை பேசினால் தூற்றுகின்றனர். அதுதான் தற்போதைய நிலை.

கடந்த தினங்களில் கோத்தபாய மற்றும் பசில் ராஜபக்சவிடம் பேச்சு மேற்கொண்டோம். நாம் இரு கட்சிகளையும் இணைக்க முயற்சிக்கின்றோம். தற்போது திருமணம் நிச்சயிக்கப்பட்டு இருக்கும் நிலையில் மணப்பெண்ணை கடத்திச் சென்று துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினால் திருமணம் முடிக்க முடியுமா? நாங்கள் தொடர்ந்து இருப்போம். சிறிலங்கா சுதந்திர கட்சியை அடக்கம் செய்ய முடியாது- என்றார். (எ)

# ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்குத் தடை

கொழும்பு, செப்.2

நேற்று முதல் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை புதுக்கடை நீதவான் நீதிமன்ற அதிகாரத்துக்கு உட்பட்ட பிரதேசங்களில் ஆர்ப்பாட்டங்கள், கூட்டங்கள் மற்றும் பேரணிகள் நடத்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது. புதுக்கடை முதன்மை நீதிவான் நீதிமன்றால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் ஊடக பேச்சாளர், பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த நீதிமன்ற உத்தரவானது சிங்கள ஜாதிக பலமுலுவ என்ற அமைப்பின் ஏற்பாட்டாளர் வண. மெடில்லே பஞ்ஞாலோக தேரர் மற்றும் ராவணா பலய அமைப்பின் ஏற்பாட்டாளர் வண. இத்தேகந்தே சத்தாதிஸ்ஸ தேரர் உள்ளிட்ட தேரர்களுக்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஆர்ப்பாட்டங்கள், கூட்டங்கள், பேரணிகள் நடத்தப்படும் போது சட்டரீதியானதாகவும் மற்றும் அமைதியானதாகவும் நடாத்திச் செல்லத் தடை இல்லை எனவும், கலகம், குழப்பத்தை ஏற்படுத்தும் எவ்வித செயற்பாடுகளுக்கும் அனுமதி இல்லை எனவும், பொதுமக்களுக்கு, வாகனங்களுக்குத் தடை, விபத்து, தொந்தரவு ஏற்படும் வகையில் பேரணி நடத்தப்படுவது தவிர்க்கப்பட வேண்டும் எனவும், அமைதியைச் சீர்குலைக்கும் சிறியளவிலான செயற்பாடுகளேனும் இடம்பெறக் கூடாது எனவும் இந்த நீதிமன்ற உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆர்ப்பாட்டங்கள், பேரணிகளில் கலந்துக் கொள்ளும் அனைத்து மக்களுக்கும் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ)

# முன்பள்ளிக்கு முக்கியத்துவம் கொடுத்துச் செயலாற்றுவேன்

## அமைச்சர் சஜித் தெரிவிப்பு

கொழும்பு, செப்.2

முன்பள்ளி கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, புதிய புரட்சியை நிச்சயம் ஏற்படுத்துவேன் என்று அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். களுத்துறையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச தலைவர் தேர்தல்களில் முன்பள்ளி கல்விக்கு பெரும் மதிப்பு உண்டு. வேட்பாளர்கள் முன்பள்ளி கல்வியை வைத்தே தேர்தல் பரப்புரைகளில் ஈடுபடுகின்றனர்.

அண்மையில் அரச தலைவர் தேர்தலில் முன் வைக்கப்பட்ட கொள்கை அறிக்கைகளைப் படியுங்கள். அதில் முன்பள்ளி கல்விக்கு தனி அத்தியாயம் வகுக்கப்பட்டுள்ளமையை அவதானிக்க கூடியதாக இருக்கும். பெரும்பாலும் முன்பள்ளியை மேன்மையடைய செய்வதாகப் பல்வேறு வாக்குறுகளை தேர்தலில் போட்டியிடுபவர்கள் வழங்குவார்கள். ஆனால் வெற்றியடைந்தவுடன், அளித்த வாக்குறுதிகள் அனைத்தையும் மறந்து விடுவார்கள்.

முன்பள்ளி கல்வி பற்றி உண்மையாக அக்கறை கொள்பவர்கள் என்று எவருமில்லை. என்னிடம் ஒரு திட்டம் உள்ளது. பெற்றோர்களிடமிருந்து பணம் பெறாமல் கல்வியைத் தொடங்க வேண்டும் என்பதாகும். எனது எதிர்கால அரசியல் புரட்சியில் முன்பள்ளி கல்விக்குத் தனிப்பட்ட முறையில் முக்கியத்துவம் கொடுப்பேன் என உறுதியளிக்கின்றேன் - என்றார். (எ)

# ஐ.தே.க. வேட்பாளர் யாரென்று தீர்மானம் எட்டப்பட்டுவிட்டது

## அமைச்சர் மனோ தெரிவிப்பு

ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளர் தொடர்பாக இறுதித் தீர்மானம் எட்டப்பட்டுவிட்டது. அவர் யார் என்பது தொடர்பாக இப்போது கூற முடியாது.

இவ்வாறு அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். அப்புத்தளையில் நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அரச தலைவர் தேர்தல் தொடர்பாக இதுவரை அதிகாரபூர்வ அறிவிப்பு விடுக்கப்படவில்லை. ஏனைய கட்சிகள் தமது வேட்பாளர்களை உடனடியாக அறிவித்திருந்தாலும் தற்போது அவர்களுக்குள் குழப்பமான நிலை ஏற்பட்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி அவ்வாறு அவசரப்படத் தேவையில்லை. எமது பயணத்தை நாம் மேற்கொள்வோம். யாரும் குழப்பமடைய வேண்டாம். எங்களது வேலையை நாங்கள் பார்த்துக்கொள்கிறோம் என எதிர்க்கட்சிக்கு கூறுகிறேன்.

எமது வேட்பாளர் யார் என்று நாம் பேச்சு மேற்கொண்டு தீர்மானித்து விட்டோம்.

ஆனால் அதனை தற்போது என்னால் கூறமுடியாது. அதிகாரபூர்வமாக அறிவிக்கும் வரை காத்திருங்கள் - என்றார். (எ)

# இலவச நுழைவிசைவு வசதி நீடிப்பு

கொழும்பு, செப்.2

48 நாடுகளுக்கு வழங்கப்பட்டுள்ள இலவச நுழைவிசைவு வசதி எதிர்வரும் ஜனவரி மாதம் வரையில் நீடிக்கப்பட்டுள்ளது என்று குடிவரவு - குடியகல்வு திணைக்களம் அறிவித்துள்ளது.

கடந்த முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட இந்த வேலைத் திட்டத்தில் ஒரு மாதத்துக்கு மாத்திரம் இந்த இலவச நுழைவிசைவு சலுகை அறிமுகம் செய்யப்பட்டது.

அரசு முன்னெடுத்துள்ள சுற்றுலா மேம்பாட்டுத்திட்டத்தின் ஒரு பகுதியாக இந்த இலவச நுழைவிசைவு நடைமுறை அறிமுகம் செய்யப்பட்டது.

இலவச நுழைவிசைவு சலுகையின் மூலம் ஒரு மாத சுற்றுலா காலத்தின் பின்னர் சுற்றுலா பயணிகள் தமது சொந்த நாடுகளுக்குத் திரும்ப வேண்டும்.

அவர்கள் ஒரு மாதத்தைக் கடந்து மேலும் நாட்டில் தங்கியிருக்க வேண்டுமெனின், பணம் செலுத்தி நுழைவிசைவைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இந்த கால அவகாசம் எதிர்வரும் ஜனவரி மாதம் வரை நீடிக்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# நிறைவேற்று அதிகார முறையை நீக்குவதற்கு ஆதரவு வழங்கோம்

## ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் திட்டவட்டம்



கொழும்பு, ஒக.2

நிறைவேற்று அதிகார அரசதலைவர்முறைமையை நீக்குவதற்கு குறுக்கு வழி அரசியல் முன்னெடுக்கப்படுமானால் அதற்கு ஒருபோதும் இடமளிக்க மாட்டோம்என்றுஜனநாயகமக்கள்முன்னணியின் பிரதித்தலைவரும், இந்து சமய விவகார அமைச்சின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்துள்ளார்.

அரசதலைவர்தேர்தலுக்குமுன்னர் நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறைமையை நீக்குவதற்கு திரைமறைவில் பேச்சு இடம்பெறுகின்றது என்றும், முதன்மை அரசியல் கட்சிகளின் தலைவர்கள் இதற்கு இணக்கம் வெளியிட்டுள்ளனர் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. அது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இலங்கையில் வாழும் தமிழ் பேசும் மக்களுக்கு இன்னும் உரிய வகையில் அதிகாரங்கள் பகிரப்படவில்லை. கடந்த காலங்களில் உரிமைகள் மறுக்கப்பட்டவர்களாகவே வாழவேண்டிய நிலை ஏற்பட்டது. நல்லாட்சியின் கீழ் சுதந்திரமாக வாழக்கூடிய நிலை இருந்தாலும், உரிமைகளை முழுமையாக அனுபவிக்கக் கூடிய சூழ்நிலை இன்னும் உருவாகவில்லை.

ஆலை இல்லாத ஊருக்கு இலுப்பைப் பூ சக்கரை என்பது போல், இலங்கையில் வாழும் தமிழ் பேசும் மக்களுக்கு நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறைமையானது ஏதேனுமொரு வழியில் பாதுகாப்பு கவசமாக இருந்து வருகிறது. அந்த முறைமையை நாம் பாதுகாக்க வேண்டும்.

அரச தலைவர் தேர்தலின்போதே முழு இலங்கையும் ஒரு தேர்தல் தொகுதியாக மாறுகிறது. அதுமட்டுமல்ல சிறுபான்மையின மக்களின் வாக்கு வங்கியும் தீர்மானிக்கும் சக்தியாக மாறுகின்றது. அரசதலைவர் தேர்தல் காலத்தில்தான் கோரிக்கைகளை முன்வைத்து, அவற்றை வென்றெடுப்பதற்கான அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கும், பேரம் பேசுவதற்கும் களம் கிடைக்கின்றது.

நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறைமை நடைமுறையில் இருப்பதாலேயே சிறுபான்மையின மக்கள் மீதும் கட்டாயம் கவனம் செலுத்தி, அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு அரச தலைவர்கள் முற்படுகின்றனர்.

நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறைமை நீக்கப்படுமானால் சிறுபான்மையின மக்கள் பேரம் பேசும் சக்தியை இழப்பதுடன், அரசியல் ரீதியில் அநாதைகளாக்கப்படும் சூழ்நிலையும் உருவாகும்.

நிறைவேற்று அதிகார அரச முறைமையில் ஜனநாயகத்துக்கு அச்சுறுத்தலாக இருந்த சரத்துகள் அரசமைப்பின் 19 ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக நீக்கப்பட்டுள்ளன. அதனால் அதில் மேலும் மாற்றங்கள் செய்யத் தேவையில்லை-என்றார். (எ)

# மக்களின் பிரச்சினைகள் பற்றிய கூட்டத்தில் எம்.பிக்கள் இல்லை

## எதிர்பார்த்துச் சென்ற மக்கள் விசனம்

மன்னார், செப். 2

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் ஏற்பாடு செய்திருந்த மக்களின் பிரச்சினைகளை ஆராயும் கூட்டத்தில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் கலந்து கொள்ளவில்லை என்று மக்கள் விசனம் தெரிவித்தனர்.

மக்களுடைய காணிப் பிரச்சினை மீனவர்களின் வாழ்வாதாரப்பிரச்சினைகள் தொடர்பான கூட்டம் யாழ்ப்பாணப் பொது நூலக கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு மக்களின் பிரச்சினைகளை நாடாளுமன்றத்தில் எடுத்துரைப்பதற்காக வடக்கின் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் தனிப்பட்ட முறையில் அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதும் எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினரும் கலந்து கொள்ளவில்லை.

இதனால், மக்கள் பிரதிநிதிகள் மீது பொதுமக்கள் அதிருப்தியில் இருக்கின்றனர் என்று தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தினர் தெரிவித்தனர். மக்களால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு முன்வர வேண்டும். நேற்றைய தினம் யாழில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் மக்கள் பிரதிநிதிகள் வருவார்கள் எமது பிரச்சினைகளை அவர்களிடம் தெரிவிக்கலாம் என்று எதிர்பார்ப்புடன் கலந்து கொண்ட மக்கள் ஏமாற்றமடைந்துள்ளனர். தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக இருப்பவர்களை வெளிப்படையாகவே மக்கள் விமர்சித்தனர். மாவை சோ.சேனாதிராசா, டக்ளஸ் தேவானந்தா போன்றவர்கள் தங்களின் சார்பில் பிரதிநிதிகளை அனுப்பி வைத்திருந்தனர் என்றும் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தினர் தெரிவித்தனர். (த-213)

# முற்போக்கு சோசலிசக் கட்சியும் அரச தலைவர் தேர்தல் களத்தில்

கொழும்பு, செப்.2

முற்போக்கு சோசலிசக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளர் அடுத்த வாரம் நாட்டுக்கு அறிமுகம் செய்யப்படவுள்ளார் என்று அந்தக் கட்சியின் கல்விச் செயலர் புபுது ஜயகொடி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச தலைவர் வேட்பாளரின் பிரபலத்தை மேம்படுத்துவதற்குப் பதிலாக, நாட்டு மக்களின் உண்மையான பிரச்சினைகளை தீர்க்கக்கூடிய ஒரு வேட்பாளரை நாட்டுக்கு வழங்கவுள்ளோம். முதன்மை கட்சிகளுக்குள்ளும்,கட்சிகளிடையேயும்அதிகாரப்போட்டிநிலவுகின்றது. அதனால், மக்களின் பிரச்சினை மறக்கடிக்கப்பட்டுள்ளது. மக்களின்பிரச்சினைகளைஉண்மையில்வெளிப்படுத்தும் வேட்பாளரை எமது கட்சி அறிமுகம் செய்யவுள்ளது. மக்களின் உரிமைகள், பொருளாதார சமத்துவம், மனித சுதந்திரம் மற்றும் சகோதரத்துவம் ஆகியவற்றைப் பாதுகாக்கும் திட்டத்துடன் கூடிய ஒரு வேட்பாளரைநாட்டுக்குவழங்கவுள்ளோம்-என்றார். (எ)




# நாடு கடத்தலைத் தடுக்குமாறு ஆஸியில் பெரும் போராட்டம்

கொழும்பு, செப்.

ஒருதமிழ்க்குடும்பத்தைமீண்டும்இலங்கைக்கு நாடு கடத்த ஆஸ்திரேலிய அரசு மேற்கொண்ட முயற்சிகளுக்கு எதிராக ஆயிரக்கணக்கானமக்கள்நேற்றுஆஸ்திரேலியா முழுவதும் உள்ள நகரங்களில்போராட்டங்களைமுன்னெடுத்துள்ளனர் என்று ஆஸ்திரேலிய ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவில் பிறந்த 4 மற்றும் 2 வயதுடையஇரண்டுகுழந்தைகள்உட்பட நான்கு பேர் கொண்ட குடும்பத்தினரை நாடுகடத்தஅண்மையில்ஆஸ்திரேலிய அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. நடேசலிங்கம், பிரியா என்ற தம்பதியினர் உட்பட இரண்டு பெண் குழந்தைகள் உள்ளடக்கிய குடும்பமே நாடு கடத்தப்பட்டிருந்தது. அவர்கள்வானூர்தியில் ஏற்றப்பட்டு நாடு கடத்தப்பட்டிருந்த நிலையில் அந்த நாட்டின் மனிதாபிமானச் செயற்பாட்டாளர்கள் மேற்கொண்ட நடவடிக்கையால் நடுவானில் அந்த முயற்சிதடுக்கப்பட்டு, வானூர்திமீண்டும் ஆஸ்திரேலியா திரும்பியிருந்தது.

தற்போது அந்தக் குடும்பத்தினர் அவுஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவில் உள்ள ஒருதடுப்புமுகாமில்தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பான வழக்கு மெல்போர்ன் நீதிமன்றத்தால் விசா ரிக்கப்பட்டு வருகின்றது.

அவர்கள்வாழ்ந்தகுயின்ஸ்தீவிலிருந்து அந்தக் குடும்பத்தை நாடு கடத்துவதில் அரசு கொடுமை செய்துள்ளது என்று ஆஸ்திரேலியாவின் பசுமைக் கட்சியின் தலைவர் ரிச்சர்ட் டி நடேல் குற்றம் சாட்டியுள்ளார். அவர்களுக்கு ஆதரவாக ஆஸ்திரேலியவில்ஆயிரத்துக்கும்மேற்பட்டோர் பல்வேறு இடங்களில் போராட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# கஞ்சாவுடன் ஒருவர் கைது

கேரளக் கஞ்சா தொகை ஒன்றை உடமையில் வைத்திருந்த நபர் ஒருவர் இரத்தினபுரி, கொலுவாவில பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்என்று பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபரிடம் இருந்து 3 கிலோ கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# காணாமல் ஆக்கப்பட்டோருக்காக மலையகத்தில் நேற்று போராட்டம்

காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் மேற்கொண்டுவரும் போராட்டங்களுக்கு வலுச்சேர்க்கும் முகமாக மலையகத்திலும் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. இந்தக் கவனயீர்ப்புப் போராட்டம் நோர்வூட் சின்ன எலிபடைஸ்ரீமுத்துமாரியம்மன்ஆலயத்திற்கு முன்பாக நேற்றுப் பகல் 1 மணியளவில்முன்னெடுக்கப்பட்டது. தன்னெழுச்சி இளைஞர்களின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டத்தில் சின்ன எலிபடை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் வழிபாடுகளும் இடம்பெற்றன.

கடந்த இருதசாப்தங்களுக்குமேலாக பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் காணாமலாக்கப்பட்டுள்ளனர். இலங்கை அரசு காணாமலாக்கப்பட்டோர் தொடர்பாக இதுவரை எந்த ஒரு தீர்க்கமான முடிவையும் அவர்களின் உறவினர்களுக்கு வழங்கவில்லை. இதற்குஉரியதீர்வைவெகுவிரைவில் அரசுவழங்கவேண்டும்எனப்போராட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. (எ)

# பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு கைகொடுக்கும் மலையகம்

நுவரெலியா, செப். 2

காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் மேற்கொண்டுவரும் போராட்டங்களுக்கு வலுச்சேர்க்கும் முகமாக, போராட்டத்துக்கு ஆசி வேண்டி பூசை வழிபாடும், கவனவீர்ப்புப் போராட்டமும் நேற்று நடத்தப்பட்டது.



மலையக தன்னெழுச்சி இளைஞர்களின் ஏற்பாட்டில்முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா நோர்வூட் சின்ன எலிபடை சிறி முத்துமாரியம்மன் கோவிலில் சிறப்புவழிபாடுகள் நடைபெற்ற பின்னர் கோவில் முன்பாகப் போராட்டம் நடைபெற்றது.

இரு தசாப்தங்களுக்கும் மேலாக பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். இலங்கை அரசு காணாமல் ஆக்கப்பட்டோர் குறித்து இது வரைதீர்க்கமானமுடிவை காணாமலாக்கப்பட்டவர்களின்உறவினர்களுக்கு வழங்கவில்லை. இதற்குரிய தீர்வை வெகுவிரைவில் அரசுவழங்கவேண்டும் என்று போராட்டக்காரர் வலியுறுத்தினர். (து)

## தமிழ்பேசும் மக்களின் வாக்குகளை கோத்தாவுக்குத் திருப்புவது எப்படி?

*வவுனியாவில் நேற்றுக்கலந்துரையாடல்*



வவுனியா, செப். 2

கோத்தபாயவுக்குத்தமிழ் மக்களின் வாக்குகளை எப்படிப்பெற்றுக்கொள்ளலாம்? அவருக்கான பரப்புரையை விரிவுபடுத்துவது எவ்வாறு என்பன பற்றிநேற்றுக்கலந்துரையாடப்பட்டது.

பொதுமக்கள் முன்னணி மற்றும் ஈரோஸ் ஆகிய அமைப்புக்கள்வவுனியாவில் நேற்று இவ்வாறு கலந்துரையாடின.

வவுனியா, மகாறம்பைக்குளம் பகுதியில் அமைந்துள்ள ஈரோஸ் (ஈழவர் ஜனநாயக முன்னனி) கட்சியின்தலைமை அலுவலகத்தில்இந்தக்கலந்துரையாடல்நடைபெற்றது.

பொதுமக்கள் முன்னணியின் அரசதலைவர் வேட்பாளராககோத்தபாயராஜபக்ச அறிவிக்கப்பட்டு அதுபற்றியபரப்புரைகள் இடம்பெற்றுவருகின்றன. பரப்புரைகளைச் சிறப்பாகத்தொடர்வது, கோத்தபாயவுக்கு தமிழ் மக்களின் வாக்குகளைஎப்படிப்பெறுக் கொள்ளலாம்? இரு கட்சிகளும் இணைந்து எதிர்காலத்தில் முன்னெடுக்கவுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பில் இதன் போது கலந்துரையாடப்பட்டன.

கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுசந்த புஞ்சிநிலமே, இந்திக்க அனுரத்த, சப்ரகமுவ மாகாண முதலமைச்சர் மகேபால ஹேரத், நாடாளுமன்ற உறுப்பினர் பசில் ராஜபக்ஸவின் இணைப்பாளர்தேவப்பிரிய அபயசிங்க, வன்னித் தேர்தல்மாவட்டமுன்னாள்நாடாளுமன்ற உறுப்பினர் சுமதிபால, ஈரோஸ் கட்சியின் தலைவர் துஸ்யந்தன், கட்சியின் செயலர் வே. நகுலேஸ்வரன், வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபைஉறுப்பினர்சசிதரன், வவுனியாவடக்குப்பிரதேச சபை உறுப்பினர் தமிழ்ச்செல்வன், ஈழவர்ஜனநாயகக் கட்சியின் வடக்கு - கிழக்குமற்றும்மலையகத்தைச்சேர்ந்தமுக்கியஉறுப்பினர்கள்கலந்துகொண்டனர். (த-ரி4)

## நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் முக்கிய கலந்துரையாடல் இன்று

கொழும்பு, செப். 2

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து ஆராயும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு உறுப்பினர்களுக்குஇடையிலானமிகமுக்கியமான கலந்துரையாடல் இன்று பி.ப. 3.30 மணிக்கு நாடாளுமன்றத்தில் இடம்பெறவுள்ளது.

இதன்போது, தாக்குதல் தொடர்பாக ஆராயும் தெரிவுக்குழுவின் இறுதி அறிக்கையைத் தயாரிப்பதற்கான குழு உறுப்பினர்களின் ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகள் பெற்றுக்கொள்ளப்படவுள்ளதாக தெரிவுக்குழுவின் தலைவர் ஆனந்த குமாரசிறி தெரிவித்தார். இதேவேளை, உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பாக ஆராயும் தெரிவுக்குழுவில் முன்னிலையாகுமாறு அரசதலைவர்மைத்திரிபாலசிறிசேனவுக்கு அனுப்பிவைக்கப்பட்ட எழுத்துமூல கோரிக்கைக்கு இதுவரை எவ்வித பதிலும் கிடைக்கவில்லை . அரச தலைவர் அது தொடர்பாக பதில் வழங்கவில்லை என்றால், உடனடியாகதெரிவுக்குழுவின் அறிக்கையைதயாரிக்க எதிர்ப்பார்ப்பதாக ஆனந்த குமாரசிறி மேலும் தெரிவித்தார். (ஒ,5)

## மயிலிட்டி முருகையனுக்கு எண்ணெய்க்காப்பு

யாழ்ப்பாணம், செப். 2

வலிகாமம் வடக்கு மயிலிட்டி முனையன் வளவு முருகையன் கோவிலில் எண்ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை அதிகாலை ஆரம்பமாகி மதியம் 2மணிவரை நடைபெறவுள்ளது. நவீன சுந்தர பஞ்சதள திரிதள இராஜ கோபுரங்கள் சகித புனராவாத்தன - அஸ்டபந்தன நவகுண்ட மகாகும்பாபிசேக மகா பெருஞ் சாந்திப் பெருவிழா நாளைமறுதினம் காலை 6.55 மணி தொடக்கம் 7.30 மணிவரையில் நடைபெறும், கும்பாபிசேக பெருஞ்சாந்தி விழாவுக்கான கிரியைகள் எதிர்வரும் 31ஆம் திகதி சனிக்கிழமை அதிகாலை 5.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (த-173)

## சஜித்தை வேட்பாளராக அறிவிக்கக்கோரி யாழ். – கிளிநொச்சியில் சிறப்பு வழிபாடுகள்

யாழ்ப்பாணம், செப். 2

வீடமைப்பு அமைச்சர் சஜித் பிரேமதாச அரசதலைவர் வேட்பாளராக்கப்பட வேண்டும் என்று யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியில் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன.

அரசதலைவர்தேர்தல்தொடர்பானநடவடிக்கைகள்சூடுபிடித்துள்ளன. பொது மக்கள் முன்னணி, மக்கள் விடுதலை முன்னணி, சோசலிசக் கட்சி என்பன தமது வேட்பாளர்களைஅறிவித்துள்ளன. எனினும்ஐக்கியதேசியக் கட்சி இதுவரைதமது வேட்பாளர் யார் என்பதை வெளியிடவில்லை. தானே அரசதலைவர் வேட்பாளர் என்பதை ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதித்தலைவரும், அமைச்சருமான சஜித் பிரேமதாச பல மேடைகளில் பகிரங்கமாகவே வெளிப்படுத்தியுள்ளார். அவருக்கு நிதி அமைச்சர் மங்கள சமரவீர உட்பட சில அமைச்சர்கள் மற்றும் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஆதரவு தெரிவித்து வருகின்றனர். மறுபுறத்தில்சபாநாயகர்கருஜெயசூரிய, சரத் பொன்சேகா, மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், தலைமை அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் பெயர்களும் அடிபடுகின்றன. இவ்வாற நிலை தொடர்பில் பல அமைப்புக்கள், பல்கலைக்கழகங்கள் கருத்துக் கணிப்புக்களை மேற்கொண்டு வருகின்றன. அந்தக் கருத்துக் கணிப்புக்களின் படி சஜித் பிரேமதாசவுக்கு மக்களுடைய ஆதரவு இல்லைஎன்றும், பொதுமக்கள் முன்னணியின்வேட்பாளர்கோத்தபாயராஜபக்சவை எதிர்த்து களமிறங்கிவெல்லக்கூடிய வேட்பாளர் ஐக்கிய தேசியக் கட்சியில் கருஜெயசூரியதான்என்றும்முடிவுகள்வெளியாகியுள்ளன. மாறாக அமைச்சர் சஜித்பிரேமததாசவை வேட்பாளராக அறிவித்தால், அதனால் மக்கள் விடுதலை முன்னணியின் வேட்பாளர் அனுரகுமாரவுக்குத்தான் பயன்கிடைக்கும்என்றும்அந்த முடிவுகள் கூறுகின்றன. மற்றுமொரு கருத்துக்கணிப்பில் சஜித் பிரேம தாசவைக் காட்டிலும், கருஜெயசூரியவுக்குத்தான் மக்கள் ஆதரவு தெரிவிப்பர் என்று முடிவு கிடைத்துள்ளது.



இவ்வாறான நிலையிலேயே வடக்கில் இந்து ஆலயங்களில்சஜித்பிரேமதாசவுக்கு ஆதரவுதெரிவித்தும்அவரை வேட்பாளராக அறிவிக்குமாறு வேண்டியும்வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த மாதம் முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்தில் வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டன. யாழ்ப்பாணம் நாவற்குழியில் அமைந்துள்ள திருவாசகஅரண்மனையில் நேற்றுவழிபாடுநடத்தப்பட்டது. கிளிநொச்சியில்சர்வமதவழிபாடுகள்மேற்கொள்ளப்பட்டுள்ளன. கிளிநொச்சி ஏ 9 வீதி நகர் பிள்ளையார் ஆலயத்திலும் அதனைத் தொடர்ந்து கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள ஸலாம் ஜும்ஆ பள்ளிவாசலிலும்கிறிஸ்தவ தேவாலயத்திலும் வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (த-21)

# சிங்கள மக்கள் கடைக்கு வரவேண்டும் என்றால் கோத்தபாயவை ஆதரியுங்கள்

## முஸ்லிம்களை மிரட்டுகின்றார் விமல் வீரவன்ச

கொழும்பு, செப். 2


அச்சமும், சந்தேகமும் இன்றி தமது வர்த்தக நிலையங்களுக்கு சிங்கள மக்கள் வரும் நாடு முஸ்லிம் சமூகத்துக்கு தேவை எனில், முஸ்லிம் சமூகம் கோத்தபாய ராஜபக்சவுக்கு ஆதரவளிக்க வேண்டும் என்று மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகத்துக்கு வழங்கிய நேர்காணலில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

முஸ்லிம் கடைகளுக்கு அச்சமின்றி பொருள்களை வாங்க சிங்கள மக்கள் வரும் நாட்டை உருவாக்கும் இயலுமை கோத்தபாய ராஜபக்சவுக்கு மாத்திரமே உள்ளது.

இலங்கையில் அமெரிக்க இராணுவத்தின் தலையீடுகளை மேற்கொள்வதற்காக இலங்கையில் ஒரு பதற்ற நிலமையை ஏற்படுத்தும் தேவை அமெரிக்காவுக்கு உள்ளது. இந்தத் தேவைக்கு அமையவே ஸஹ்ரான் ஹசீம்கள் குண்டுகளை வெடிக்க செய்தனர்.

சிங்கள மக்கள் இதற்கு பதில் தாக்குதலை நடத்தவில்லை என்பதால், அடுத்த தாக்குதலை நடத்த தயாரான பயங்கரவாதிகள் கைது செய்யப்பட்டனர். இதனால், அந்த தாக்குதல் தடுக்கப்பட்டது. மீண்டும் நாட்டில் ஒரு பதற்ற நிலமையை உருவாக்க இருக்கும் தயார் நிலையை எப்படியாவது தோற்கடித்து, இம்முறை அரச தலைவர் தேர்தலில் வாக்காளர்கள் பிரிந்து செல்லாது கோத்தபாய ராஜபக்ச வெற்றி பெற செய்வது மக்களின் பொறுப்பு - என்றார். (ஒ.5)



## ஜெய்சங்கரை சந்திப்பார் ரணில்

கொழும்பு, செப். 2

இந்திய அயலுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கரை, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க மாலைத்தீவில் சந்தித்து பேச்சு நடத்தக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்து சமுத்திர மாநாடு மாலைத்தீவில் நாளையும், நாளை மறுதினமும் இடம்பெறவுள்ளது. இந்த மாநாட்டில் ரணில் விக்கிரமசிங்கவும் பங்கேற்கவுள்ளார். சிங்கப்பூர், இந்தியா உள்ளிட்ட நாடுகளின் அயலுறவுத் துறை அமைச்சர், உட்பட்டவர்கள் இந்த மாநாட்டில் பங்கேற்கவுள்ளனர். இதன்போதே, இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கரை, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க சந்தித்து பேச்சு நடத்தக்கூடும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஒ.5)



## யாழ்ப்பாண இளைஞன் சிங்கப்பூரில் கைது

கொழும்பு, செப். 2

முகவர் ஊடாக பிரான்ஸ் செல்ல முயன்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞன் சிங்கப்பூரில் கைதாகியுள்ளார். கட்டுநாயக்க வானூர்தி நிலையம் வழியாக சிங்கப்பூர் சென்ற இளைஞன், அங்கிருந்து வேறொரு நாடுவழியாகபிரான்ஸ் செல்ல முயற்சித்து ள்ளார்.

சிங்கப்பூர் வானூர்தி நிலையத்தில் புறப்பட தயாராக இருந்த வானூர்திக்குள் நுழைந்த அந்நாட்டு வானூர்தி நிலைய அதிகாரிகள், இளைஞனைக் கைது செய்துள்ளனர். போலியான விசா மூலமாக வேறொரு நாட்டுக்குச் செல்ல முயன்ற நிலையிலேயே அவர் இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. (ஒ.5)

## போராட்ட இடத்திலிருந்த வேலியைப் பிடுங்கிவிட்டனர்

### பெண்ணொருவர் முறைப்பாடு

வவுனியா, செப். 2

காணாமல் ஆக்கப்பட்டோரின் போராட்டத்தின்போது ஓமந்தைச் சோதனைச் சாவடி இருந்த இடத்திலிருந்த தமது வேலி அகற்றப்பட்டதாகப் பெண் ஒருவர் முறைப்பாடு செய்துள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வவுனியா, ஓமந்தைப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை போராட்டம் நடத்தினர். அதன்போது வேலி அகற்றப்பட்டது என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டது.

போராட்டம் நடத்தப்பட்ட தினம் பிற்பகல் 3 மணியளவில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

இதனையடுத்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கப் பிரதிநிதிகளைப் பொலிஸார் விசாரணைக்கு அழைத்திருந்தனர்.

இரு தரப்பினருடனும் பொலிஸார் கலந்துரையாடியிருந்தனர். இறுதியில் இரு பகுதியினரும் சமாதானமாகச் சென்றுவிட்டனர்.

காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் போராட்டம் ஓமந்தை, இறம்பைக்குளம் பகுதியை வந்தடைந்தபோது, இந்த இடத்தில் வைத்தே எமது பிள்ளைகளை ஒப்படைத்தோம் என்று கூறி உறவுகள் கதறியழுதிருந்தனர். அதன்போது போராட்டகாரர் காணி வேலியை அகற்றி அதற்குள் சென்றும் கதறியழுது போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். (து-ரி4)

## மொட்டு வெற்றி பெறுவது கடினம் மகிந்தவின் முன்னாள் ஆலோசகர்

கொழும்பு, செப். 2

பொதுமக்கள் முன்னணியில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களையும், அவர்களின் நோக்கங்களையும், வேறு எவரையும் விட நன்கு அறிந்து வைத்திருக்கின்றேன். மொட்டுக் கட்சிக்கு குடும்ப அரசியலில் மட்டுமே அக்கறை. அந்தக் கட்சியால் தேர்தலில் இலகுவாக வெல்ல முடியாது. இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ச ஆட்சிக்காலத்தில் அயலுறவுத்துறை அமைச்சைக் கண்காணிக்கும் நாடாளுமன்ற உறுப்பினராகவும், மகிந்த ராஜபக்சவின் அயலுறவுத்துறை ஆலோசகராகவும் பணியாற்றிய சஜின் வாஸ் குணவர்தன கொழும்பில் கடந்த வெள்ளிக்கிழமை செய்தியாளர் சந்திப்பை நடத்தினார். அந்தச் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் மட்டுமே நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கும் தேசிய பாதுகாப்பை உறுதி செய்வதற்குமான ஆற்றலைக் கொண்டவை.

பொதுமக்கள் முன்னணி குடும்ப அரசியலில் மட்டுமே அக்கறை கொண்டுள்ளது. பொதுமக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் நன்கு தொடர்பில் இருந்தவன் என்ற வகையில், அவர்களையும், அவர்களின் நோக்கங்களையும் வேறு எவரையும் விட நான் நன்கு அறிந்து வைத்திருக்கிறேன்.

நாட்டின் இனப்பரம்பலின் படி, பொதுமக்கள் முன்னணி தேர்தலில் வெற்றி பெறுவது எளிதல்ல. பொதுமக்கள் முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது கடந்த கால அரசியல் தவறுகளைச் சரிசெய்யவில்லை. நாட்டின் இன அமைப்பின் முக்கியத்துவத்தை அவர்கள் உணர்ந்து கொள்ளாத வரை, அவர்களால் தேர்தலில் வெற்றிபெற முடியாது.

எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் எதிர்க்கட்சி வேட்பாளருக்கு சவால் விடுவதற்கு, சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன், பொதுமக்கள் முன்னணி கைகோர்க்க வேண்டியது அவசியம் - என்றார். (ஒ.5)

## யாழ்ப்பாணம் – கொழும்பு இடையே மேலுமொரு தொடருந்து சேவையில்

கொழும்பு, செப். 2

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையில் தற்போது இடம்பெற்று வரும் தொடருந்து சேவைக்கு மேலதிகமாக ஒரு சேவை இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. எதிர்வரும் வியாழக்கிழமைக்குப் பின்னர் இந்தச் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

கொழும்பிலிருந்து மாலை 3.50 மணிக்கு வவுனியா நோக்கிப் புறப்படும் தொடருந்தின் சேவையே, யாழ்ப்பாணம் வரையில் நீடிக்கப்படவுள்ளது. காலை 5.45 மணிக்கு வவுனியாவிலிருந்து கொழும்பு நோக்கி இடம்பெறும் சேவையையும், யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு நடத்துவதற்கு தொடருந்து திணைக்களம் ஆராய்ந்து வருகின்றது.

கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு பின்னர் தினந்தோறும் 7 தொடருந்து சேவைகள் இடம்பெறவுள்ளன. (ஒ.5)



## இன, மத ஒற்றுமை வேண்டி ஆன்மிக யாத்திரை ஆரம்பம்

வவுனியா, செப். 2

அநுராதபுரம் ஜெயந்திபுர சிறி கதிரேசு முருகன் ஆலயத்திலிருந்து யாழ்ப்பாணம் சுழிபுரம் வரை இன, மத ஒற்றுமை மற்றும் சுபீட்சம் வேண்டி ஆன்மிகப் யாத்திரை கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியுள்ளது.

இது வவுனியா - கிளிநொச்சி ஊடாக யாழ்ப்பாணத்தை வந்தடையும் பின்னர் சுழிபுரம் விநாயகர் ஆலயத்தைச்சென்றடையும் என்று தெரிவிக்கப்பட்டது. (து-ரி4)

## கொலைகாரக்...

மட்டக்களப்பில் வீட்டுத்திட்ட கிராமங்களை மக்களிடம் கையளிக்கும் நிகழ்வில் நேற்று ஞாயிற்றுக்கிழமை கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த நாட்டிலே கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்ற காட்டுமிராண்டித்தனங்கள், அத்துமீறல்கள், ஏழைகள் மீது தொடுக்கப்பட்டிருக்கின்ற பிழையான செயற்பாடுகளை நாங்கள் கண்டறிந்தோம். இவ்வாறான மக்களின் நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு அலங்கரிக்கப்பட்டிருந்த பதாகைகளை கிழித்தெறிந்திருக்கின்றார்கள். ஆனால், தாங்கள் ஆட்சிக்கு வந்தால் தேசிய பாதுகாப்பைத் தருவோம் என்கின்றார்கள். எனது முகத்தினை அவர்கள் கிழித்தெறியலாம். ஆனால் எனது செயற்பாடுகளை முடக்க முடியாது.

இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றவர்கள் கடந்த காலங்களில் இந்தப் பகுதியில் மக்களுக்கு இடையூறாக கூலிப்படையாக செயற்பட்ட கொலைகாரக் கூட்டமாகும்.

இந்த கொலைகாரக்கூட்டம் அனைத்து பாகங்களிலும் காணப்படுகின்றது. அவர்களால் நாசகரமான செயல்களை மாத்திரம் செய்ய முடியுமே தவிர நல்ல செயல்களைச் செய்ய முடியாது.

எதிர்வரும் நவம்பர் மாதத்தில் இந்த நாட்டை நடத்திச் செல்லக்கூடிய ஒருவரை தெரிவு செய்யக்கூடிய சந்தர்ப்பம் மக்களாகிய உங்களை நாடிவருகின்றது. இதன்மூலம் நீங்கள் சரியான முடிவை எடுக்கும்போது நாங்கள் சரியான முடிவை வழங்க இருக்கின்றோம் - என்றார். (ஒ.5)

## கோத்தாவுக்கு....

ஞர்களை உள்ளடக்கியதாக இந்த கருத்துக் கணிப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது. கருத்து கணிப்பில் பங்கேற்ற அனைவரும் பல்கலைகழக மாணவர்கள்.

கோத்தபாய ராஜபக்ச 59 சதவீத வாக்குகளைப் பெற்றார். சஜித் பிரேமதாச 17.5 சதவீதமும், அனுர குமார திசாநாயக்க 4.5 சதவீதமும் வாக்குகளை பெற்றனர். கரு ஜெயசூரியா 2 சதவீத வாக்குகளைப் பெற்றார். தென், வடமேல், மத்திய, சப்ரகமுவ மாகாணங்களைச் சேர்ந்த மாணவர்களே இதில் பங்கேற்றனர். (ஒ.5)

## வாக்கெடுப்பில்...

ரையின் அறங்காவலர் சபைத் தலைவராக தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்க நீண்டகாலமாக இருந்து வருகிறார்.

களனி விகாரையின் விகாராதிபதி பேராசிரியர் கொள்ளுப்பிட்டியே மகிந்த சங்கரக்கித்த தேரர் தலைமையில் நிர்வாக சபைக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

பொதுச் சபைக் கூட்டத்தில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக இரண்டு குற்றச்சாட்டுக்களை முன்வைத்து தீர்மானம் கொண்டுவரப்பட்டது. தீர்மானம் மீது நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக 300 வாக்குகளும் ஆதரவாக 7 வாக்குகளும் கிடைத்தன.

இதனால் தீர்மானம் 293 அதிகப்படியான வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. பெரும்பான்மை உறுப்பினர்களின் விருப்பத்துக்கு அமைய விகாரையின் நிறைவேற்றுக்குழுவுடன் கலந்துரையாடி இறுதித் தீர்மானத்தை அறிவிப்பதாக விகாராதிபதி, நிர்வாக சபைக்கு அறிவித்தார். (ஒ.5)

## தேர்தலின்...

வர் முறைமையை ஒழிக்க வேண்டும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் வைத்து தெரிவித்திருந்தார். இதற்கு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும், எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்சவும் ஒத்துழைப்பு வழங்குவதாகத் தெரிவித்திருந்தனர்.

இது தொடர்பில் அமைச்சர் சஜித் பிரேமதாச மேலும் தெரிவித்ததாவது:

அரச தலைவர் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் இந்த விவகாரத்தை அரச தலைவர் மைத்திரி கையிலெடுத்தமை என்னவென்று எனக்குத் தெரியவில்லை. எனது தனிப்பட்ட ரீதியான கருத்து, தேர்தல் முடிந்த பின்னர் இந்த விவகாரம் தொடர்பில் தீர்மானம் எடுக்கலாம். இந்த விடயத்தை காரணம் காட்டி தேர்தலை தாமதப்படுத்த எந்தக் கட்சிகளும் முயலக்கூடாது. எமது கட்சியின் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை கட்சியின் தலைமைப் பீடம்தான் எடுக்கவேண்டும் - என்றார். (ஒ.5.22)

## பழிவாங்கலுக்கு...

குறிப்பிட்டு, அவர்கள் தொடர்ந்த அடிப்படை மனித உரிமைகள் மீறல் மனுவை ஏற்றுக்கொண்ட உயர்நீதிமன்றம் இருவருக்கும் தலா 1 மில்லியன் இழப்பீடு வழங்கும்படி, முன்னாள் பொலிஸ்மா அதிபர் மற்றும் முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வாஸ் குணர்த்தன இருவருக்கும் உத்தரவிட்டுள்ளது.

2010ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தலுக்கு இரண்டு நாள்களுக்கு முன்னர் கடற்படைக்குச் சொந்தமான ட்ரக்கில் தேர்தல் பரப்புரைக்கான பொருள்களை ஏற்றிச் சென்ற மூன்று கடற்படையினரைப் பொலிஸார் கைது செய்தனர். குருநாகல் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.எஸ்.கே.விக்ரமநாயக்க, மற்றுமொரு அதிகாரி ஆகியோரே இந்த நடவடிக்கையை நெறிப்படுத்தியிருந்தனர்.

அப்போதைய பொலிஸ்மா அதிபர் மகிந்த பாலசூரிய, மூத்த பிரதிப்பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்தன ஆகியோர், கைதானவர்களை விடுவிக்க அழுத்தம் கொடுத்தனர். இரண்டு பொலிஸ் அதிகாரிகளும் இடமாற்றம், பழிவாங்கலுக்கு உள்ளாகியிருந்தனர். இது தொடர்பாகவே உயர் நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமைகள் மீறல் மனுவைத் தாக்கல் செய்திருந்தனர்.

கடினமான நேரத்திலும் இரண்டு பொலிஸாரும் சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்துவதற்கு முயற்சித்தார்கள். எவ்வளவு கடினமான நேரத்திலும் வளைந்து கொடுக்காத அவர்களின் நேர்மையை பாராட்டுவதாக நீதிபதிகள் பிரசன்ன ஜெயவர்தன, விஜித் கே.மலல்கொட மற்றும் பி. பத்மான் சுரசேன ஆகியோர் அடங்கிய ஆயம் குறிப்பிட்டது.

அத்துடன், சம்பவத்துக்குப் பின்னராக மனுதாரர்களுக்கு வழங்கப்பட்ட இடமாற்றங்கள், பின்னர் அவர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரங்கள், ஒழுங்கு நடவடிக்கைகளை மேற்கொள்வது அனைத்தையும் செல்லபடியற்றதாகிறது, என்று நீதிபதிகள் அறிவித்தனர்.

ஒழுங்கு நடவடிக்கையைக் காரணம் காட்டி அவர்கள் சேவையிலிருந்து நிறுத்தப்பட்டி ருந்தனர். எனினும், அவர்கள் சேவையில் தொடர்வதாக கணக்கிட்டு, இதுவரையான சம்பளம் மற்றும் இதர கொடுப்பனவுகள், சலுகைகளை பெற தகுதியானவர்கள் என்று உத்தரவிட்டது. அவர்களின் சகாக்கள் அந்த காலகட்டத்தில் சம்பள அதிகரிப்பு மற்றும் பதவி உயர்வு ஆகியவற்றை பெற்றிருப்பார்கள். இவர்கள் சட்டவிரோத ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்பட்டிருப்பதால் பதவி உயர்வு தொடர்பாக மனுதாரர்களுக்கு கிடைத்திருக்கக்கூடிய எந்தவொரு குறைபாட்டையும் தீர்க்க பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்குமாறு பதில் பொலிஸ்மா அதிபர் மற்றும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கும் நீதிமன்றம் உத்தரவிட்டது. (ஒ.5)

## கோத்தபாய...

யில் அரச தலைவர் தேர்தல் திகதியை வேட்பாளர்கள் கூற முடியாது. இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பேராசிரியர் இரட்ணஜீவன் எச் ஹூல் தெரிவித்தார்.

அமெரிக்காவில் இடம்பெறும் வழக்கு ஒன்றுக்கு, சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளரான கோத்தபாய ராஜபக்ச சமர்பித்த ஆவணத்தில், இலங்கையில் டிசெம்பர் 7ஆம் திகதி அரச தலைவர் தேர்தல் நடைபெறும் என்று குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் கேட்டபோதே, ஆணைக்குழு உறுப்பினர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்வரும் 15ஆம் திகதிக்குப் பின்னரே அரச தலைவர் தேர்தலுக்கான உறுதியான திகதி தெரியவரும். அதற்கு முன்னர் வேட்பாளர்கள் தேர்தல் திகதியைக் கூற முடியாது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களாகிய நாமும் தனிப்பட்ட ரீதியில் தேர்தல் திகதியை தீர்மானிக்க முடியாது. தேர்தல் தொடர்பான திகதியை தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானிக்க முன்னர், வேட்பாளர் ஒருவர் தெரிவிப்பது தவறான அணுகுமுறையாகவே அமையும் - என்றார். (ஒ.5)

## தமிழக...

காரணமாக இலங்கைக் கடற் பகுதிக்குள் நுழைந்ததாகவும் மீனவர்களை மன்னித்து தாயகம் திருப்பி அனுப்பும்படி புதுடில்லி கடலோரக் காவல் படை தலைமை அலுவலகம் மூலம் கொழும்பில் உள்ள இலங்கைக் கடற்படை தலைமை அலுவலகத்துக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படும் நிலையில் மீனவர்கள் தற்போது ஊர்காவற்றுறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் நீதிமன்றில் இன்று முற்படுத்தப்படுவார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஒ.5.105)

## டிசெம்பர் 7....

தரப் பரீட்சை இடம்பெறும் என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

'டிசெம்பர் 2ஆம் திகதியிலிருந்து டிசெம்பர் 12ஆம் திகதி வரை கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைகள் இடம்பெறும்' என்று தேர்தல்கள் திணைக்களத்துக்கு அறிவித்துள்ளதாக பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் சனத் பூஜித தெரிவித்துள்ளார். (ஒ.5)

## தாமதிக்கப்பட்ட...

மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாம் இன்னும் நாட்டின் நீதித்துறையின் சுயாதீனத் தன்மையின் மேல் நம்பிக்கை வைத்து இருந்த போதும், சட்ட ஆட்சியைப் பாதுகாக்க ஒப்படைக்கப்பட்ட சில நிறுவனங்கள் மற்றும் அதிகாரிகளின் அண்மைய நடவடிக்கைகளை பார்க்கும் போது சில கேள்விகள் எழுகின்றன.

ஆயிரக்கணக்கான நமது மக்களின் வாழ்க்கையைப் பாதிக்கும் வழக்குகள் நிலுவையில் உள்ளபோது தங்களது அரசியல் எதிரிகளுக்கு எதிரான வழக்குகளை துரிதப்படுத்துவதற்கு சிறப்பு நீதிமன்றங்களை நிறுவுவதற்கு முயற்சிப்பது நீதியை நிலைநாட்ட பொறுப்பு வழங்கப்பட்ட நிறுவனங்களின் அரசியல் மயமாக்கம் மீதான சந்தேகத்தை வகுக்கின்றது.

ஒரு பிரபலமான பழமொழி உள்ளது 'தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதியாகும்'. சட்டத் துறையில் ஏற்படும் தாமதமானது மக்களின் வாழ்வை பாதிக்கும் பெரிய பிரச்சினையாக இந்நாள்களில் உள்ளது.

இந்தத் தாமதங்களுக்கு எதிராக போராடும் உட்கட்டமைப்பில் மேம்பாடுகளை ஏற்படுத்த போராடும் அதே வேளையில், தொன்மையான சட்டங்கள், ஒழுங்கு முறைகள் மற்றும் நடைமுறைகளை திருத்துவதற்கும், நாட்டின் எதிர்கால தேவைகளுக்கு ஏற்ற சட்ட அமைப்புகளை உருவாக்குவதற்கும் உங்கள் ஆதரவு தேவைப்படுகிறது.

அரச தலைவர் சட்டத்தரணியாக நியமிக்கப்படுவது எந்தவொரு சட்டத்தரணியின் விரும்பும் மிக உயர்ந்த மதிப்புக்களில் ஒன்றாகும் என்பதை நான் அறிவேன். இந்த மரியாதைக்குரிய பதவியின் மதிப்பை பாதுகாக்க நமது நாட்டின் தலைவர்கள் வரலாற்று ரீதியாக பாடுபட்டிருந்தாலும், சமீப காலங்களில் இந்தப் பதவிக்குரிய சில நியமனங்கள் குறித்து கவலைகள் எழுந்துள்ளன.

எதிர்காலத்தில், அரச தலைவர் சட்டத்தரணி பதவிக்கு நியமனங்களை நிர்வகிக்க ஒரு வெளிப்படையான, கடுமையான நடைமுறையை ஏற்படுத்துவதற்காக தலைமை நீதியரசர், சட்டமா அதிபர், சட்ட வல்லுநர்கள் மற்றும் சட்டத்தரணிகள் சங்கம் ஆகியோரின் ஆலோசனையைப் பெற நான் எதிர்பார்க்கின்றேன்.


அரசின் சில உயர் அதிகாரிகள் அண்மைக் காலங்களில் சட்டத்தை வளைத்துள்ளதை நாங்கள் ஊடகங்களில் கண்டோம். இதன் மூலம் சட்டம் அனைவருக்கும் சமமாக பொருந்தும் என்ற மேக்சிமின் மேலாதிக்கத்தை சவால் செய்கிறது. அதனால் தான் உயிர்த்த ஞாயிற்றுக்கிழமை நடந்த துயரத் தாக்குதல்கள் குறித்து சுயாதீன விசாரணையை கோரியுள்ளோம். இது நிறுவப்படாவிட்டால், அரசியல் ரீதியாக சக்திவாய்ந்த சில நபர்கள் நீதியிலிருந்து தப்பிக்கக்கூடும் என்று நாங்கள் முன் கூட்டியே எதிர்பார்க்கிறோம்.

பயங்கரவாதத்துக்கு எதிரான போரின் கடைசி கட்டங்களில் நடந்ததாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்த பிரபலமான தவறான கதை உள்ளது. எவ்வாறாயினும், இந்தப் பொய்யான கதை, மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் நிலைநிறுத்துவதற்கும் நம்முடைய வலுவான அர்ப்பணிப்பிலிருந்து எழுந்த வெற்றியைப் பின்தொடர்வதில் உள்ள பல தாமதங்களை அப்பட்டமாக புறக்கணிக்கிறது.

கனரக பீரங்கிகளைப் பயன்படுத்தி போருக்கு விரைவான தீர்வைப்பெற எங்களுக்கு சாத்தியம் இருந்தபோதிலும், நாங்கள் அவ்வாறு செய்யவில்லை. அதற்கு பதிலாக, இலகுவான ஆயுதங்களை மட்டுமே பயன்படுத்தி வெற்றியைத் தொடர நாங்கள் தேர்வுசெய்தோம், இதன் விளைவாக ஆயிரக்கணக்கான படையினர் தங்கள் உயிரைத் தியாகம் செய்தனர். போரின் கடைசி கட்டங்களில் மனிதக் கேடயமாகப் பயன்படுத்த ஏறக்குறைய 3 லட்சம் அப்பாவி தமிழ் பொதுமக்கள் சிக்கியதால் இந்த மூலோபாயம் பின்பற்றப்பட்டது. அவர்களை ஆபத்திலிருந்து மீட்பது எங்கள் முதன்மை நோக்கமாக இருந்தது. மனித உரிமைகள் என்ற தலைப்பில் நம்மைத் தாக்க முற்படுபவர்களால் இது வெளிப்படையாக மறைக்க[illegible]முறைது - என்றார். (ஒ.5)


# அமேசன் காட்டுத் தீயை அணைத்து வருகிறோம்!

## பிரேசில் அறிவிப்பு





பிரேசிலியா, செப். 2
பிரேசிலின் அமேசன் காட்டில் அண்மையில் பெரும் தீ விபத்து ஏற்பட்டிருந்த நிலையில், இந்தக் காட்டுத் தீயை வெற்றிகரமாக அணைத்து வருகின்றோம் என்று அறிவித்துள்ளது பிரேசில் அரசு.
உலகின் நுரையீரல் எனக் கருதப்படும் அமேசன் உலக மக்களுக்கான 20 சதவீத ஒக்சிசனை வழங்கி வருகிறது.
இம் மழைக்காடுகளில் 'காட்டுத் தீ கடந்த மூன்று வாரங்களுக்கு முன்னர் ஏற்பட்டுள்ளது. இதன் சேதம் கடந்த ஆண்டைவிட 87 சதவீதம் அதிகம் எனத் தரவுகள் தெரிவிக்கின்றன. இதன் காரணமாகப் பருவநிலைகளில் எதிரான விளைவுகள் ஏற்பட வாய்ப்புள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்தனர். அமேசனின் காட்டுத் தீயை தடுக்க பிரேசில் அரசு துரித நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று உலக நாடுகள் வலியுறுத்தின. இந்நிலையில் ஜி7 நாடுகளின் சந்திப்பில் அமேசன் ஒரு முக்கியப் பொருளாகப் பேசப்பட்டது. மேலும் பிரான்ஸ், கனடா, பிரிட்டன், ஜேர்மனி, ஜப்பான், அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகள் அமேசன் காடுகளில் ஏற்பட்டுள்ள காட்டுத் தீயை அணைக்க பொருளாதார ரீதியாக பிரேசில் அரசுக்கு உதவத் தயார் என்று கூறின. இந்த நிலையில் பிரேசில் அரசுடன் இணைந்து காட்டுத் தீயை அணைக்கத் தயார் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது. மேலும் இது தொடர்பாக பிரேசில் அரசின் ஒப்புதல் பெறவேண்டும் என்றும் அமெரிக்கா கூறியது.
இதுகுறித்து பிரேசில் அயலுறவுத் துறை அமைச்சர் எர்னஸ்டோ கூறும் போது, 'பிரேசிலில் ஏற்பட்ட காட்டுத் தீயை வெற்றிகரமாக அணைத்து வருகிறோம். அமேசன் காட்டுத் தீயை அணைப்பதற்கு பிற நாடுகளுடன் இணைந்து செயல்பட தயாராக இருக்கிறோம்' என்று தெரிவித்தார். (ம)



## பசிபிக் கடலில் நிலநடுக்கம்!

பீஜிங், செப். 2
பசிபிக் பெருங்கடலில் மிதமான நிலநடுக்கம் நேற்றுமுன்தினம் ஏற்பட்டுள்ளது. இது ரிச்டர் அளவுகோலில் 5.2 அலகாகப் பதிவானது. கடலில் சுமார் 10 கிலோ மீற்றர் ஆழத்தினை மையமாக கொண்டு இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது என்று அமெரிக்க புவியியல்துறை தெரிவித்துள்ளது. (ம)

## பங்களாதேஷ் தலைநகரில் ஐ.எஸ்.ஐ.எஸ். தாக்குதல்!

டாக்கா, செப். 2
ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பு பங்களாதேஷின் தலைநகர் டாக்காவில் அமைச்சரொருவரை இலக்குவைத்து வெடிகுண்டுத் தாக்குதலை நடத்தியுள்ளது. இந்தத் தாக்குதலில் பொலிஸார் இருவர் காயமடைந்தனர்.
இது குறித்து பங்களாதேஷ் பொலிஸார் விடுத்துள்ள அறிக்கையில், தலைநகர் டாக்காவில் நேற்றுமுன்தினம் இரவு குறித்த அமைச்சரின் வாகனம் சென்று கொண்டிருந்தபோது நடைபாதையில் இருந்து குண்டு வீசப்பட்டது. அமைச்சரைக் குறிவைத்து நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் அமைச்சர் காயமின்றித் தப்பினார். ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பே இந்தத் தாக்குதலை நடத்தியிருக்கலாம் என்று நம்பப்படுகிறது. மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன - என்று குறிப்பிட்டுள்ளது. (ம)




## அமெரிக்காவில் துப்பாக்கிச் சூடு

வோஷிங்டன், செப். 2
அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலத்தில் நபரொருவர் தபால் நிலைய வாகனத்தைக் கடத்தி சாலையில் செல்வோரைத் துப்பாக்கியால் சுட்டதில் 5 பேர் கொல்லப்பட்டனர். 21 பேர் காயமடைந்தனர். 30 வயது மதிக்கத்தக்க குறித்த தாக்குதல்தாரி பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டார். மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம)



## சிரியக் கிளர்ச்சியாளர்கள் பகுதியில் நிறுத்தப்பட்டன வான் தாக்குதல்கள்!

டமஸ்கஸ், செப். 2
சிரியாவில் கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டுப் பகுதியில் வான்வழித் தாக்குதல்களை அரசுப் படைகள் நிறுத்தி வைத்துள்ளதாக போர் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.
இதுகுறித்து சிரிய கண்காணிப்புக் குழு கூறும்போது, 'சிரியாவில் கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டுப் பகுதியான இட்லிப்பில் சிரிய அரசுப் படைகள் ரஷ்ய அரசுப் படைகளுடன் இணைந்து கடந்த நான்கு மாதங்களாகத் தொடர்ந்து வான்வழித் தாக்குதல் நடத்தி வருகின்றன.
இதன் காரணமாக கிளர்ச்சியாளர்கள் தரப்பிலும், பொதுமக்கள் தரப்பிலும் பலர் கொல்லப்பட்டனர்.
இதனைத் தொடர்ந்து போர் நிறுத்த ஒப்பந்தத்தன்படி இட்லிப் பகுதியில் தற்போது வான்வழித் தாக்குதல் நிறுத்தப்பட்டுள்ளதாக அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது' என்று தெரிவித்துள்ளது.
கடந்த ஏப்ரல் மாதத்தில் சிரியாவின் டமஸ்கஸில் நடந்த வான்வழித் தாக்குதலுக்கு 900க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்தனர். சுமார் 4 லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் இடம்பெயர்ந்துள்ளனர். (ம)



காசா எல்லையில் இஸ்ரேலியப் படைகளுக்கும் பலஸ்தீனர்களுக்கும் இடையில் அண்மைக்காலமாக முறுகல்நிலை ஏற்பட்டுள்ள நிலையில், இஸ்ரேலியப் படைகளை நோக்கி தாக்குதலில் ஈடுபடும் பலஸ்தீனச் சிறுவனின் ஒளிப்படம் பன்னாட்டு அளவில் வைரலாகியுள்ளது. (ம)

## ரஷ்யாவுக்கு பறக்கின்றார் மோடி!

புதுடெல்லி, செப். 2
இந்தியத் தலைமை அமைச்சர் மோடி செப்ரெம்பர் மாதம் 4ஆம், 5ஆம் திகதிகளில் ரஷ்யாவுக்குச் செல்லவுள்ளார்.

இந்தப் பயணத்தில் இரு நாடுகளின் அரசியல் ரீதியான உறவு குறித்தும் பாதுகாப்பு, வர்த்தகம், அணுசக்தி குறித்தும் ஆலோசிக்கப்படும். இது ஒரு புது அத்தியாயத்துக்கான சந்திப்பாக இருக்கும் என்று இந்தியாவுக்கான ரஷ்யத் தூதர் நிகோலாய் குடாஷேவ் தெரிவித்தார்.

இதில் இந்தியாவில் ஆறு அணுமின் நிலையங்களை உருவாகுவதற்கான ஒப்பந்தம் கையெழுத்தாகும் என்று கருதப்படுகிறது.

மேலும் இந்தச் சந்திப்பில் ரஷ்ய அதிபர் புடினுடன் காஷ்மீர் விவகாரத்தில் இந்தியா எடுத்த முடிவு குறித்து இருவரும் ஆலோசிப்பர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னதாக காஷ்மீரின் சிறப்பு அந்தஸ்தை மத்திய அரசு நீக்கியதோடு, ஜம்மு காஷ்மீர், லடாக் என்ற இரு யூனியன் பிரதேசங்களாகவும் பிரித்தது. காஷ்மீர் பிரச்சினையில் அமெரிக்கா தலையிட பாகிஸ்தான் வலியுறுத்தியது.

பிரான்ஸ், இங்கிலாந்து ஆகிய நாடுகள் இந்தியாவுக்கு ஆதரவாக உள்ளன.

இந்த நிலையில் 'காஷ்மீர் தொடர்பாக இந்தியா எடுத்த முடிவு இந்தியாவின் இறையாண்மை தொடர்பான முடிவாகும். இது இந்தியாவின் உள்நாட்டு விவகாரம்' என்று ரஷ்யா தனது நிலைப்பாட்டை தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ம)



# எபோலாவின் தாண்டவம் காங்கோவில் நீடிக்கிறது!





காங்கோ, செப். 2
மத்திய ஆபிரிக்க நாடான காங்கோவில் எபோலாவின் தாக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 2014ஆம் ஆண்டு ஆபிரிக்காவை 'எபோலா' வைரஸ் தாக்கியது. மேற்கு ஆபிரிக்க நாடுகளான கினி, லைபீரியா, சியாராலியோன் உட்பட 8 நாடுகள் எபோலாவின் தாக்கத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டன. எனினும் 2016 ஆம் ஆண்டு மேற்கு ஆபிரிக்காவில் எபோலாவின் தாக்கம் கட்டுப்படுத்தப்பட்டது. அதன் பின்னர் 2017ஆம் ஆண்டு மத்திய ஆபிரிக்க நாடான கிழக்கு காங்கோவில் எபோலாவின் தாக்கம் இனங்காணப்பட்டது. படிப்படியாகத் தீவிரமடைந்த இந்த நோய் இதுவரை 2 ஆயிரம் பேரைக் காவு கொண்டுள்ளது. இது தொடர்பில் காங்கோ அரசு விடுத்துள்ள அறிவிப்பில், எபோலாவின் தாக்கத்துக்கு எதிராக இயன்ற வரையில் போராடி வருகின்றோம். தடுப்பூசிகள் மூலம் சுமார் 70 ஆயிரம் பேருக்கு மேல் இந்த நோய் பரவவலை தடுத்துள்ளது காங்கோ அரசு. தொடர்ந்து எபோலா வைரஸுக்கு எதிராக விழிப்புணர்வுப் பரப்புரைகள், தடுப்பூசிகள் பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன - என்றுள்ளது. (ம)





## கீச்சகத்தின் இணை நிறுவுனர் கணக்கு ஹேக்

இனவெறி பதிவுகள் வெளியிடப்பட்டதால் கீச்சகக் இணை நிறுவனர் ஜாக் டோர்சியின் கணக்கு திருடப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பன்னாட்டு அளவில் புகழ்பெற்ற சமூக ஊடகம் கீச்சகம். இதன் இணை நிறுவுனர் ஜாக் டோர்சி. இவர்தான் டுவிட்டர் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரியும் ஆவார். இவரது டுவிட்டர் கணக்கை 40 லட்சத்துக்கும் அதிகமானோர் பின்பற்றி வருகின்றனர். இவரின் கீச்சகக் கணக்கில் அண்மையில் இன வெறிக் கருத்துக்கள் பகிரப்பட்டிருந்தன. இது எவரோ இனம்தெரியாதவர்களால் மேற்கொள்ளப்பட்ட சம்பவம் என்று குறிப்பிட்டுள்ள டோர்சி, இது குறித்து விசாரணைகள் இடம்பெறுகின்றன என்றும் தெரிவித்துள்ளார். (ம)

## ஈ·ரானின் ஏவுகணைத் தோல்விக்கு அமெரிக்கா காரணம் இல்லையாம்


வோஷிங்டன், செப். 2
ஈ·ரான் சமீபத்தில் நடத்திய ஏவுகணைச் சோதனை தோல்விக்கு அமெரிக்கா காரணமில்லை என்று ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ட்ரம்ப் தனது ட்விட்டர் பக்கத்தில், 'ஈ·ரானின் ஏவுகணைத் தளமான சிம்னனில் சபிர் எஸ்எல்வி ஏவுகணை தொடர்பான இறுதி ஏவுகணைச் சோதனை தோல்வியில் முடிந்தது.

இது தொடர்பான காரணத்தைக் கண்டறிய ஈ·ரானுக்கு வாழ்த்துகள்' என்று ஏவுகணைச் சோதனை தோல்வியில் முடிந்த படத்துடன் பதிவிட்டிருந்தார்.

ஆனால், ஏவுகணைச் சோதனையில் ஏற்பட்ட தோல்வி குறித்து ஈ·ரான் இதுவரை எந்தக் கருத்தும் தெரிவிக்கவில்லை.

இந்த நிலையில் அமெரிக்கப் புலனாய்வுத் துறையின் ரகசியத்தை ட்ரம்ப் வெளியிட்டு இருப்பதாகவும் இதற்கு முன்னர் இருந்த அதிபர்கள் இவ்வாறு நடந்து கொள்ளவில்லை என்றும் ட்ரம்ப் மீது குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.



**பின்னணி**

அணுஆயுதச்சோதனை தொடர்பாக அமெரிக்கா - ஈ·ரான் இடையே மோதல் வலுத்து வரும் நிலையில், சவூதி அரேபியாவுக்குச் சொந்தமான எண்ணெய்க் கப்பல்கள் மீது அண்மையில் நடத்தப்பட்ட தாக்குதலுக்கு ஈ·ரான்தான் காரணம் என அமெரிக்கா குற்றம் சாட்டியது. இவ்வாறு தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையே பதற்றம் அதிகரித்து வந்த நிலையில் அமெரிக்காவின் ஆளில்லா விமானம் மீது ஈ·ரான் தாக்குதல் நடத்தியது.

இதன் காரணமாக ஈ·ரான் மீதும் அதன் முதன்மைத் தலைவர்கள் மீதும் புதிய பொருளாதாரத் தடையை ட்ரம்ப் அறிவித்தார்.

அமெரிக்காவின் பொருளாதாரத் தடை காரணமாக ஈ·ரானின் பொருளாதாரம் பெருமளவு பாதிப்புக்குள்ளானது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் அமெரிக்கா, ஈ·ரானை பேச்சுவார்த்தைக்கு சில நாட்களுக்கு முன்னர் அழைத்தது குறிப்பிடத்தக்கது. (ம)



## மிகமிக விரைவில் விண்வெளிப்படை!

### ட்ரம்ப் அழுத்தம் திருத்தம்

வோஷிங்டன், செப். 2
அமெரிக்க இராணுவத்தில் ஆறாவது பிரிவாக விண்வெளிப்படையை உருவாக்குமாறு அமெரிக்க இராணுவத் தலைமையமான பென்டகனுக்கு அதிபர் ட்ரம்ப் உத்தரவிட்டுள்ள நிலையில், அதற்கான கட்டுப்பாட்டுப் பிரிவு நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

அமெரிக்க இராணுவத்தில் தரைப்படை, கடற்படை, கப்பல்படை, கடலோரப் பாதுகாப்புப் படை, வானூர்திப் படை என்று ஐந்து பிரிவுகள் ஏற்கனவே உள்ளன. இந்த நிலையில் ஆறாவது பிரிவாக விண்வெளிப்படையை அமைக்குமாறு அண்மையில் உத்தரவிட்டார் ட்ரம்ப்.

'அமெரிக்கா வெறுமனே விண்வெளியில் இருப்பை கொண்டிருப்பது போதுமானதாக இருக்காது. நாம் கண்டிப்பாக விண்வெளியில் ஆதிக்கம் செலுத்த வேண்டும். எனவே இராணுவத்தின் ஆறாவது பிரிவாக விண்வெளிப்படையை நாம் உடனடியாக உருவாக்க வேண்டும். எம்மிடம் ஏற்கனவே வான்படை உள்ளது. இருந்தாலும் தற்போது விண்வெளிப்படையும் அமைக்கப்படுகிறது. இரண்டும் தனித் தனியானது. ஆனால் இரண்டும் சம வலிமைமிக்கது' என்று ட்ரம்ப் தெரிவித்திருந்தார். இதையடுத்து விண்வெளிப்படையை உருவாக்கும் நகர்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில் அதற்கான கட்டுப்பாட்டுப் பிரிவு நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது. அங்கு உரையாற்றிய ட்ரம்ப் 'இன்னும் ஓரிரு மாதங்களில் விண்வெளிப்படை சாத்தியம்' என்று தெரிவித்தார். (ம)



# 45ஓட்டங்களால் கிண்ணத்தை தவறவிட்டது யாழ். பல்கலை!

யாழ்ப்பாணம், செப். 2

இலங்கைப் பல்கலைக் கழக அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் தொடரின் இறுதியாட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி 45 ஓட்டங்களால் சம்பியன் கிண்ணத்தைத் தவறவிட்டு இரண்டாம் இடத்தைப் பெற்றது.

ராஜரட்ட பல்கலைக்கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அணியை எதிர்த்து சிறி ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சிறிஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய அந்த அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 289 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக கனிஸ்க 91 ஓட்டங்களையும், ஐசித 45 ஓட்டங்களையும், கிகான் 38 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி சார்பில் லோகதீஸ்வர், ஜனந்தன், டனுசன் ஆகியோர் இரு இலக்குகளைக் கைப்பற்றினர். பதிலுக்குத்துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி 43.5 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 244 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 45 ஓட்டங்களால் சம்பியன் கிண்ணத்தை தவற விட்டது. அவ்வணி சார்பில் செந்தூரன் 74 ஓட்டங்களையும், துவாரகசீலன் 51 ஓட்டங்களையும், டனுஸ்கா 34 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சஜித், செகேரா ஆகியோர் தலா இரு இலக்குகளைக் கைப்பற்றினர். (ம-422)

## சரஸ்வதி இறுதியில்

சாவகச்சேரிசிவன் விளையாட்டுக்கழகம் தென்மராட்சி ரீதியாகநடத்தும்அணிக்கு 8 வீரர்கள் பங்குபற்றும்; 5 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்துத் துடுப்பாட்டத் தொடரில் நாவற்குழிசரஸ்வதிவிளையாட்டுக் கழக அணி இறுதிக்குத் தகுதி பெற்றது.

மட்டுவில் கண்ணகை விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில்; டிறிபேக் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக் கழக அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற டிறிபேக் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய அந்த அணிநிர்ணயிக்கப்பட்ட 5 பந்துப்பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 36 ஓட்டங்களைப் பெற்றது. தர்சன் அதிகபட்சமாக 12 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்குக் களமிறங்கிய சரஸ்வதி விளையாட்டுக் கழக அணி 4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் இலக்குச் சரிவில்லாமல் வெற்றிபெற்றது. (ம-23)

# புதிய பாரதி கழகம் கிண்ணம் வென்றது!

யாழ்ப்பாணம், செப். 2

கிளிநொச்சி மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் அனுமதியுடன் மருதநகர் மருதநிலா விளையாட்டுக் கழகம் நடத்திய அமரர் திலீபன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கரப்பந்தாட்டத் தொடரில் புதிய பாரதி விளையாட்டுக் கழக அணி கிண்ணம் வென்றது.

மருதநகர் மருதநிலா விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் புதிய பாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மருதநிலா விளையாட்டுக் கழக அணி மோதியது.

ஐந்து செற்களைக் கொண்டதாக இறுதியாட்டம் அமைந்தது. முதலிரு செற்களையும் முறையே 25:22, 25:21 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது புதிய பாரதி அணி. மூன்றாவது செற்றை 25:22 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி நேர்செற் தோல்வியைத் தவிர்த்தது மருதநிலா. நான்காவது செற்றை 25:20 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 3:1 என்ற செற் கணக்கில் கிண்ணம் வென்றது புதிய பாரதி அணி. (ம-23)



# யாழ்ப்பாணப் பல்கலைக்கு மல்யுத்தத்தில் வெண்கலம்

யாழ்ப்பாணம், செப். 2

இலங்கைப் பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான மல்யுத்தப் போட்டியில் ஆண்கள் பிரிவில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்கு வெண்கலப் பதக்கம் கிடைத்தது.

றுகுணு பல்கலைக் கழகத்தில் அண்மையில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி பங்குபற்றிய விம்சர 57 - 61 கிலோ எடைப் பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்றார். (ம-23)




# கபடி அணி தெரிவுகள்

யாழ்ப்பாணம், செப். 2

இலங்கை இளநிலைப் பிரிவு தேசிய கபடி அணிக்கான இரண்டாம் கட்டத் தெரிவு எதிர்வரும் 5ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.

கொழும்பு டொறிங்டன் அபிவிருத்தி திணைக்கள உள்ளக விளையாட்டரங்கில் இந்த அணித் தெரிவு நடைபெறவுள்ளது. வீரர்கள் காலை 8.30 மணி முதல் குறித்த இடத்துக்கு வருகை தருமாறு இலங்கை கபடி சம்மேளனத்தின் செயலர் அறிவித்துள்ளார். (ம-422)

# எமில்நகர் கழகம் வென்றது

யாழ்ப்பாணம், செப். 2

சாவற்காட்டு கில்லறி விளையாட்டுக் கழகம் அருட்சகோதரர் கில்லறி ஜோசப்பின் 100ஆவது பிறந்தநாளை முன்னிட்டும் கில்லறி விளையாட்டுக் கழகத்தின் 20ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டும் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் இருதயநாதர்புரம் எமில்நகர் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.

தேவன்பிட்டி சென். சேவியர் அணியை எதிர்த்து இருதயநாதர்புரம் எமில்நகர் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் 2:1 என்ற கோல் கணக்கில் எமில்நகர் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)


# வென்றது லூட்சியா

யாழ்ப்பாணம், செப். 2

சாவற்காட்டு கில்லறி விளையாட்டுக் கழகம் அருட்சகோதரர் கில்லறி ஜோசப்பின் 100ஆவது பிறந்தநாளை முன்னிட்டும் கில்லறி விளையாட்டுக் கழகத்தின் 20ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டும் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் பள்ளிமுனை சென். லூட்சியா பாடசாலை அணி வெற்றிபெற்றது.

மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் பள்ளிமுனை சென். லூட்சியா பாடசாலை அணியை எதிர்த்து சாவற்காட்டு கில்லறி விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் 3:1 என்ற கோல் கணக்கில் பள்ளிமுனை சென். லூட்சியா பாடசாலை அணி வெற்றிபெற்றது. (ம-23)

# பும்ரா 'ஹற்றிக்' சாதனை அச்சுறுத்துகிறது இந்தியா



மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் இரண்டாம் நாளான நேற்றுமுன்தினம் இந்திய அணி வலுவான நிலையில் உள்ளது. வேகப்பந்து வீச்சாளர் பும்ரா ஹற்றிக் சாதனை படைத்தார்.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நேற்றுமுன்தின முதலாம் நாள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 264 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இரண்டாம் நாளான நேற்று விஹாரி 42 ஓட்டங்களுடனும், பன்ட் 27 ஓட்டங்களுடனும் தொடர்ந்து துடுப்பெடுத்தாடக் களமிறங்கினர். மேலதிகமாக ஓர் ஓட்டத்தையேனும் பெறாமல் ஆட்டமிழந்தார் பன்ட். ஜடேயா 16 ஓட்டங்களைச் சேர்த்தார். மறுமுனையில் அரைச்சதம் கடந்து அபாரமாக விளையாடிக் கொண்டிருந்தார் விஹாரி. அவருடன் இணைந்து நீண்ட இணைப்பாட்டத்தை வழங்கினார் இசாந் சர்மா. விஹாரி சதம் கடக்க வியக்கத்தக்க வகையில் அரைச்சதம் கடந்தார் ஒன்பதாவது வீரரான இசாந் சர்மா. இணைப்பாட்டமாக 100 ஓட்டங்கள் பகிரப்பட்டன. 111 ஓட்டங்களுடன் விஹாரியும், 57 ஓட்டங்களுடன் பன்டும் ஆட்டமிழக்க 416 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது இந்தியா.



பந்துவீச்சில் கோல்டர் 5 இலக்குகளையும், கோர்வெல் 3 இலக்குகளையும், றோச், பிரீத்வைட் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகளை தனது துல்லிய வேகத்தால் கலங்கடித்தார் பும்ரா. பிரீத்வைட், காம்பெல், பிராவோ, புரூக்ஸ், சேஸ் என்று அடுத்தடுத்து வெளியேற்றினார் பும்ரா. 22 ஓட்டங்களில் 5 இலக்குகளை இழந்து தவித்தது மேற்கிந்தியத் தீவுகள்.

ஹெட்மயரை சமியும், அணித் தலைவர் கோல்டரை பும்ராவும் வெளியேற்ற நாள் முடிவில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 7 இலக்குகளை இழந்து 87 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

ஹமில்டன் 2 ஓட்டங்களுடனும், ஹோர்வெல் 4 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். (ம)





## ஹற்றிக் படைத்த 3ஆவது இந்தியர்

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் இரண்டாம் நாளான நேற்றுமுன்தினம் ஹற்றிக் சாதனை படைத்ததன் மூலம் குறித்த மைல்கல்லை எட்டிய மூன்றாவது இந்தியர் என்ற சாதனையை நிலைநாட்டினார் பும்ரா.

இவருக்கு முன்னதாக, 2001ஆம் ஆண்டில் ஆஸ்திரேலியாவுக்கு எதிராக ஹர்பஜன் சிங்கும், 2006ஆம் ஆண்டில் பாகிஸ்தானுக்கு எதிராக இர்பான் பதானும் ஹட்ரிக் சாதனை படைத்துள்ளனர். (ம)




ஸ்பானியக் கழகங்களுக்கு இடையிலான லா லிகா தொடரில் இன்று இடம்பெறும் ஆட்டமொன்றில் பார்சிலோனா மற்றும் டொட்முன்ட் அணிகள் மோதவுள்ள நிலையில் இந்த ஆட்டத்துக்காக நேற்றுக் கடும் பயிற்சியில் ஈடுபட்டது பார்சிலோனா அணி. (ம)

# ஆடுகளத்தை கருத்தில்கொண்டு புறக்கணிக்கப்பட்டார் அஸ்வின்!

*ரவிசாஸ்திரி விளக்கம்*

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கான இந்திய அணியில் இருந்து அஸ்வின் புறக்கணிக்கப்பட்டமை ஏன் என்று விளக்கம் வழங்கியுள்ளார் ரவிசாஸ்திரி. இதன்படி, 'ஆடுகளத்தைக் கருத்தில்கொண்டே அஸ்வின் புறக்கணிக்கப்பட்டார்' என்று சாஸ்திரி குறிப்பிட்டுள்ளார்.


இது தொடர்பில் ரவிசாஸ்திரி மேலும் தெரிவித்ததாவது:

அஸ்வின் புறக்கணிக்கப்பட்டமைக்கு ஜடேஜாவின் சாதனைகள்தான் முக்கிய காரணம்.

அவர் இந்திய அணிக்கு என்ன கொண்டு வருகிறார் என்பதுதான் முக்கியம். தற்போது உலகின் சிறந்த களத்தடுப்பாளர் அவர். துடுப்பாட்டத்தில் கடுமையான முன்னேற்றம் காட்டியுள்ளார்.

மேலும் இந்த 2 டெஸ்ட் ஆட்டங்களுக்கான ஆடுகளத்தைப் பாருங்கள். தட்டையான ஆடுகளங்களாக உள்ளன. இங்கு சுழல்பந்து வீச்சாளர்களுக்கு பெரிதாக எதுவும் பயன் இருக்காது என்று கருதினோம். அதனால் இங்கு கட்டுப்பாட்டுடன் வீச வேண்டிய தேவையிருக்கிறது.


அதனால்தான் ஜடேஜாவைத் தெரிவு செய்தோம். அஸ்வின் உலகத்தரம் வாய்ந்த வீரர். ஆகவே அவரையோ, குல்தீப் யாதவையோ உட்கார வைப்பது என்பது கடினமான முடிவாகும்- என்றார். (ம)



திருமணநாள் நினைவு
02.09.2019



சுகுணதீரன் வசந்தாதேவி
02.09.1965 02.09.2019
என்றென்றும் உன் நினைவுடன்
அன்பான கணவர்
சுகுணதீரன்



2022ஆம் ஆண்டு கட்டாரில் உலகக்கிண்ணக் கால்பந்தாட்டத் தொடர் இடம்பெறவுள்ளது. இது வரையில் கால்பந்தாட்ட அரங்குகளைக் கொண்டிராத கட்டார் இந்தத் தொடருக்காக மிகப்பெரும் கால்பந்தாட்ட அரங்குகளை அடுத்தடுத்து அமைத்து வருகிறது. கட்டாரின் இயல்பான வெயிலைச் சமாளிக்கக்கூடிய வகையில் குளிரூட்டப்பட்ட விதமாக இந்த அரங்குகள் அமைக்கப்படுகின்றன. ஏற்கனவே சில அரங்குகளில் ஒளிப்படங்கள் வெளியாகியிருந்த நிலையில் தற்போது மேலும் இரு அரங்குகளின் ஒளிப்படங்கள் வெளியிடப்பட்டுள்ளன. (ம)

# அண்டர்சனின் விலகல் ஏமாற்றம் தருகின்றது!

## புரோட் கவலை

ஆஷஸ் தொடரில் இருந்து அண்டர்சன் விலகியுள்ளமை கடும் ஏமாற்றம் தருகின்றது - என்று தெரிவித்தார் இங்கிலாந்து அணியின் பிறிதொரு வேகப்பந்து வீச்சாளரான புரோட்.

இது தொடர்பில் புரோட் மேலும் தெரிவித்ததாவது:

அண்டர்சன் ஆஷஸ் தொடரில் இருந்து விலகியுள்ளமை கடும் ஏமாற்றம் தருகின்றது. இந்தத் தொடரில் அண்டர்சனும் நானும் இணைந்து சிறந்த கூட்டணி யாட்டத்தை வெளிப்படுத்த எண்ணியிருந்தோம். ஆனால் துரதிஷ்டவசமாக அவர் தொடரில் இருந்து இடைநடுவில் விலகியுள்ளார். இது பெரும் ஏமாற்றத்தைத் தருகின்றது. உண்மையில் அண்டர்சனின் விலகல் எமக்குப் பின்னடைவே. எனினும் நாம் சரிவில் இருந்து மீண்டும் அடுத்தடுத்த ஆட்டங்களில் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்துவோம் - என்றார். (ம)




A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான
**Spoken English**
2 Months (160 hrs) 10,000/=
**Diploma in English**
3 Months (240 hrs) 15,000/=
**Trainer Training Diploma**
4 Months (320 hrs) 20,000/=
ஆரம்பம்:- 04.09.2019 புதன் - 9.00 am (Weekdays)
07.09.2019 சனி - 10.00 am (Weekends)
**ELAS** Sir Pon Ramanathan Road, Thirunelvely, Jaffna.(பல்கலை எதிரில்)
076 697 3040/ 076 223 5678/ 021 221 2410

**தாதியர் தேவை**
யாழ்ப்பாணத்தில் இயங்கி வருகின்ற தனியார் பல்வைத்தியசாலைக்கு தாதியர் தேவை.
**தகைமைகள்**
- 18 - 23 வயதிற்குட்பட்ட பெண்கள்
- தாதியர் பயிற்சி, கணினி அறிவும் அவசியம்.
- G.C.E O/L குறைந்தது 06 பாடசித்தி.
- சம்பள அளவுத்திட்டம் ஆரம்பம் 15000/=
- தங்குமிட வசதி இலவசம்.

(CS 27686)(14,17)
தொடர்பு :
077 758 8729

**ICOF – வளர்பிறை உளவளத்துணை நிலையம்**
Since- 1994 Reg. No J/DS/SS/NGO/31
ஆளுமை வளர்ச்சி மற்றும் நேர்மய தலைமைத்துவப் பயிற்சி நெறி
**(Personality Growth and Positive Leadership)**
வளர்பிறை உளவள நிலையத்தியத்தின் புலமை வாய்ந்த வளவாளர்களினால் ஆளுமை வளர்ச்சி மற்றும் நேர்மய தலைமைத்துவத்தினை உருவாக்கும் பயிற்சி நெறி 09.09.2019 அன்று எமது நிறுவனத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதால் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
- பயிற்சிக்காலம் :- 100 மணித்தியாலங்கள். வாரநாள்களில் (9.00 – 1.00) வகுப்புக்கள் நடைபெறும்.
- பயிற்சியின் பின்னர் எமது நிறுவனத்தின் பெறுமதியான கற்கைநெறிச் சான்றிதழ் வழங்கப்படும்.
- கல்வித்தகைமை :- O/L, A/L
- விண்ணப்ப முடிவு :- 06.09.2019 ,
- தகுதியானவர்கள் தமது பதிவுகளை உறுதிப்படுத்திக்கொள்ளவும்.
- அனுமதிக் கட்டணம் :- 1,000.00

(cs.27719) (13,17)
வளர்பிறை உளவளத்துணை நிலையம் (ICOF)
இல 05, பிளச்சஸ் லேன், சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு- 0772660209/ 0212228238

**பணிப்பெண் தேவை**
வீட்டில் தங்கிநின்று பணிபுரியும் வீட்டுப்பணிப் பெண் தேவை.
இடம்: கொக்குவில். 075 255 4824

**2020 A/L மீட்டல், DAY**
பௌதிகவியல்
By.M கருணாநிதி (B.Sc (Spl)
Mon to Fri 3.30 Pm
ஆரம்பம் : 04.09.2019 புதன்
New Science Hall அருகில்
யாழ்ப்பாணம்
English and Tamil Medium 077 618 3064

**பதவி வெற்றிடம்**
யாழ்.நகரில் அமைந்துள்ள **Lanka Tiles** காட்சியறைக்குப் பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் இருபாலாரிடமும் இருந்து கோரப்படுகின்றன.
1. **Customer Service Assistant**
2. **Cashier**

(CS/27752)(11,17)
விண்ணப்ப முகவரி:-
LANKATILES **Jaffna Showroom**
No.469, K.K.S.Road, Jaffna.
Tel:- 021 222 8157

# ரபேல் நடால் மிரட்டலாட்டம்



அமெரிக்கப் பகிரங்க ரென்னிஸ் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் நேர்செற் கணக்கில் வெற்றி பெற்றார் ஸ்பெயின் வீரரான ரபேல் நடால். பன்னாட்டு அந்தஸ்து பெற்ற பகிரங்கத் தொடர்களில் ஒன்றான அமெரிக்கப் பகிரங்கத் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் தென்கொரிய வீரரான சுங் மோதினார்.

மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் மூன்று செற்களையும் முறையே 6:3, 6:4, 6:2 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று முன்னேற்றம் கண்டார் நடால். (ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.09.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.